Free Circulation Germany-England-Swiss
பங்குனி March.2019

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

# ஆண் மூளை - பெண் மூளை: பிரிவினை சரிதானா?

## The role of Tamil Girls in preserving the traditional values in Sri Lanka

யேர்மனியில் தேர்க்காலம் 2019

Dr.IN



மகளிர்தின சிறப்பிதழ்
கௌரவ ஆசிரியர்
**கௌசி சிவபாலன்**



நெடுந்தீவு முகிலனின்
**வெளியே புன்னகை அரசி உள்ளே கண்ணீருக்கு அடிமை**
கவிதை நூல் விபரம் உள்ளே...

## எங்கள் மகளிர் தின வாழ்த்துக்கள்


S.K.Silks & Gold Paraadise
உங்கள் மனங்கவர் ஆடைகளை மனங்கவர்ந்தவர்களுக்கு அளித்து காதலர் தினத்தை கலக்குங்கள்
17th ANNIVERSARY
எமது ஸ்தாபனத்தின் 17 வது ஆண்டு ஆரம்பத்தை முன்னிட்டு
அசத்தலான ஆடைத் தெரிவுகளுடன்
தொடர் மலிவு விற்பனை
01.03.2019 முதல் 09.03.2019 வரை
மாபெரும் ராஜமுத்திரை
Tel:0231 9501 647
Mr.P.Sritharan.Proprietor
Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.19

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி




**ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள் 2019 யேர்மனியில் தேர்க்காலம்.**

**வெற்றிமணிக்காக ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்**

**வூப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**

கொடி 17.05.2019 Hünefeld Str 63b 0202 479 60 17
தேர் 25.05.2019 42282 Wuppertal

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
அலங்கார உற்சவம் 16.05.2019 Nassauer Str 20 02381 42 66 420
தேர் 26.05.2019 59065 Hamm

**யுலிச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்** 02164 70 20 944
கொடி 25.05.2019 Hoch Str 10 b,
தேர் 02.06.2019 41363 Jüchen

**சுட்காட் சித்திவிநாயர் ஆலயம்** 0711 67 393 522
கொடி 31.05.2019 Lehmfeld Str 18
தேர் 09.06.2019 70374 Suttgart

**கற்றிங்கன் வரசக்திவிநாயர் ஆலயம்** 02324 27061
கொடி 08-06-2019 gottwald Str 23
தேர் 16-06-2019 45525 Hattingen.

**ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம்** 02388 302 223
கொடி 24.06.2019 Siegenbeck Str 4-5
தேர் 07.07.2019 5971 Hamm

**எசன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்** 0201 806 74 33
அலங்கார உற்சவம் 06.07.2019 Kloster Str 49 a
தேர் 14.07.2019 45149 Essen

**டோட்மூண்ட் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்** 0231 72 51 51 65
கொடி 06.07.2019 Klefer Str 24
தேர் 14.7.2019 44225 Dortmund

**கிறிவீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்** 02151 565 00 45
கொடி 06.07.2019 Adelbert Str 61-63
தேர் 14.07.2019 47803 Krefeld

**பிறாங்போட் நாகபூசணிஅம்பாள் ஆலயம்** 069 979 45 618
கொடி 07.07.2019 Adelbert Str 61-63
தேர் 20.07.2019 60486 Frankfurt/M

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்** 02381 291 03
கொடி 13.07.2019 Roon Str 2 a
தேர் 21.07.2019 59065 Hamm

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்** 02261 913 133
கொடி 13.07.2019 Industrie Str 7
தேர் 21.07.2019 51643 Gummersbach

**சுட்காட் சித்திவிநாயகர் ஆலயம்** 0711 11 32 81
கொடி 19.07.2019 Waiblnger Str 30
தேர் 28.07.2019 70372 Suttgart

**சுவெற்றா கனகதுர்க்காஅம்பாள்ஆலயம்** 02304 16721
கொடி 20.07.2019 Robe koch Str 5 a
தேர் 28.07.2019 58239 Schwerte

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்கஅம்பாள் ஆலயம்** 07021 807 43 99
அலங்காரத் திருவிழா 13.07.2019 Alleen Str 18-20
தேர் 21.07.2019 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்** 02381 162 686
கொடி 27.07.2019 Ferdinanand poggel Str25
தேர் 04.08.2019 59065 Hamm

**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்** 0511 471 149
கொடி 02.08.2019 Carl-Buderus Str 3 a
தேர் 10.08.2019 30455 Hannover

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்** 030 694 6900
கொடி 06.08.2019 Blaschko Alle 48
தேர் 29.08.2019 12355 Berlin.

யேர்மனியில் **Wuppertal** நகரில்
**15.09.2019** Sunday
**வெற்றிமணி பத்திரிகையின் வெள்ளிவிழா!!!**







**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 271



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**மகளிர்தின சிறப்பிதழ்**
**கௌரவ ஆசிரியர்**
**கௌசி சிவபாலன்** B.A (Hon), Dip.in Edu



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**
Company No: 8876276


## மகளிர்தின சிறப்பிதழ்



கௌரவ ஆசிரியர்
**கௌசி சிவபாலன்**

பங்குனி 08 மகளிர்தினம். இத்தினத்தை முன்னிட்டு வெற்றிமணி பங்குனிமாத இதழை மகளிர்தின சிறப்பிதழாகவும். இன்று புலம்பெயர் நாட்டில் சிறந்த எழுத்தாளராக, கவிஞராகவும் சொற்பொழிவாளராகவும் நூல் ஆசிரியராகவும் பன்முகத் திறன்வாய்ந்த சந்திரகௌரி சிவபாலன் (கௌசி) அவர்களை இம்மாதம் வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக நியமித்து கௌரவிக்கின்றது.

இக் கௌரவத்தை பெறுபவர் திருமதி.கௌசி சிவபாலன் அவர்கள் இன்றைய சமுகத்தின் அசைவுகளை நன்கு அவதானித்து அன்றைய இலக்கியங்களுடன் நேர்பார்த்து நெறி சொல்வதில் வல்லவர். தினமும் ஒரு படையல் விடியலில் வரும் வண்ணம் தன் நேரத்தை இலக்கியத்தில் தொலைத்தவர். இந்த தொலத்தல் என்பது எல்லையில்லா மகிழ்ச்சியைத் தருவது.

அடிப்படைக்கல்வி ஏறாவூர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை. பட்டப்படிப்பு பேராதனைப்பல்கலைக்கழகம். அங்கு தமிழ் சிறப்புக் கலைமாணி பட்டம்.

கொழும்பு நுகேகொட திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா பட்டம் ஜேர்மனியில் weiterbildung - Alltags Senioren Betreuung பெற்றவர். தற்போது இணையத்தளம் www.gowsy.com மற்றும் youtube kanal இல் Vettip parvai நடத்திவருகின்றார்

இவரது முதல் பத்திரிகைப் படைப்பு 1983 இல் தினகரன் பத்திரிகையில் யானையுரியும் உமையாள் அச்சமும் என்னும் படைப்புடன் ஆரம்பமானது. தற்போது மூன்று நூல்கள் வெளியீடு செய்துள்ளார்.

என்னையே நானறியேன் (நாவல்) முக்கோண முக்குளிப்பு (கட்டுரைத்தொகுப்பு) இலங்கை, இலண்டன், மலேசியா, யேர்மனி போன்ற நாடுகளில் வெளியீடு செய்யப்பட்டது. வெள்ளையுடைக்குள் கரையும் பருவம் (சிறுகதைத் தொகுப்பு) இலங்கையிலும் யேர்மனியிலும் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

# திடீர் புத்தர் சிலைகள்:

## ஆக்கிரமிக்க இனங்காணப்பட்ட 117 இடங்கள்!

**- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -**



வடக்கு - கிழக்கில் இப்போது புத்தர் சிலைகளின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியிருக்கின்றது. கடந்த இரு மாத காலமாக வடக்கு - கிழக்கை கொதி நிலையில் வைத்திருக்கும் செய்தி இதுதான். அதாவது திடீர் புத்தர் சிலைகள்!

இரண்டு இலக்குகளுடன் திடீர் புத்தர் சிலைகள் இரவோடிரவாக வருகின்றன. தமிழ்ப் பகுதிகளை சிங்கள மயமாக்குவதற்குவதும், வடக்கு கிழக்கு இணைப்பை நிரந்தரமாகவே துண்டிப்பதும்தான் அந்த இலக்குகள். இந்த இலக்குளை அடைவதற்காக அரசாங்கம் புதிதானக் கண்டுபிடித்துள்ள அகிம்சை மார்க்கம்தான் இது. இரத்தம் இன்றி- கத்தி இன்றி போர் செய்வது எனச் சொல்வார்கள். அந்த வகையில் சமாதானத்தைப் போதித்த புத்தரையே நில ஆக்கிரமிப்புக்கான ஒரு கருவியாக அரசாங்கம் பயன்படுத்துகின்றது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் சில வாரங்களுக்கு முன்னர் வைக்கப்பட்ட புத்தர் சிலை அங்கு அச்சநிலையை ஏற்படுத்தியது. கேந்திர முக்கியமான ஒரு இடத்தில்தான் இந்த ஆலயம் உள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் உள்ளது. வடக்கையும், கிழக்கையும் இணைக்கின்ற ஒரு பகுதி இது. இந்தப் பகுதி இப்போது கொதி நிலையில் இருக்கின்றது.

நீராவியடியில் இரவோடு இரவாக இரகசியமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டது முதலாவது புத்தர் சிலையல்ல. இது இறுதியானதாகவும் இருக்கப்போவதில்லை. ஏனெனில் இவ்வாறு புத்தர் சிலைகளை வைத்து தமிழ்ப் பகுதிகளை சிங்கள மயமாக்குவதற்கு 100 இடங்கள் வடபகுதியில் அடையாளங்காணப்பட்டுள்ளது.

தமிழ் பகுதிகளில் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் மிகவும் ஆபத்தான ஒரு திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இது வெறுமனே அரசியல்வாதிகளின் திட்டம் அல்ல. அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் சிங்கள தொல்பொருள் ஆய்வாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பிக்குகள், இராணுவம், பொலிஸ் என்பவற்றின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் திட்டம்தான் இது. இதனை நுணுக்கமாக ஆராயும்போது மிகவும் துல்லியமான திட்டமிடலுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

நேரடியாகவே சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பதிலுள்ள அரசியல் சிக்கல்கள் காரணமாக கண்டறியப்பட்டுள்ள புதிய உபாயம்தான் இது. தொல்பொருள் பகுதி என இனங்காணப்படும் ஒரு பகுதியை, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, முதல்கட்டமாக புத்தர் சிலைகளை அமைத்து, அடுத்த கட்டமாக அதனை சிங்களவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பிரதேசமாகக் காட்டி விகாரைகள், சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவது தான் இவர்களின் திட்டம்.

தொடர்ச்சி 10ம் பக்கம்







# யேர்மனி எசன் அறநெறித் தமிழ்ப்பாடசாலையின் 15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, பாடசாலை அதிபர் ஆசிரியை சசிகலா நயினை விஜயன் அவர்களுடன் ஒரு நேர்காணல்...

**வெற்றிமணிக்காக எழுத்தாளர் கரிணி கண்ணன்.**

கரிணி.- அறநெறித்தமிழ்ப்பாடசாலையின் ஆரம்பம் குறித்து..

ஆசிரியை சசிகலா.- எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் 34 ஆண்டு களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஒரு பிரிவாக அறநெறித் தமிழ்ப்பாடசாலை 3.10.2003 ல் பல பெற்றோரின் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்பட்டது.

கரிணி.- இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்

ஆசிரியைதிருமதி சசிகலா.-

ஏனைய இனத்தவர்கள் தத்தமது சமயக்கல்வியையும் தாய்மொழியையும் போற்றுவதுபோல,புலம்பெயர்ந்த எமது சந்ததியும் தமிழையும்,சமய நெறிகளையும் போற்றி வளர்க்கவேண்டியது நமது பாரிய கடமை. பலபெற்றோரின் வேண்டுகோளுக்கு ஏற்ப 63 மாணவர்களோடு ஆரம்பித்தோம்..5 வயதிலிருந்து பிள்ளைகள் இணைந்து கொண்டனர். இன்றும் பல மாணவர்கள் கற்றுவருகிறார்கள். ஆரம்பப் பிள்ளைகள் தற்போது பல்கலைக்கழகங்களிலும், கற்று வாழ்விலும் இணைந்து சிறப்போடு வாழ் கிறார்கள் பெருமையாக உள்ளது.

கரிணி.-இதுவரை பயனடைந்த மாணவர்கள்..

ஆசிரியை திருமதி சசிகலா.-

கடந்த 15 ஆண்டுகளில் இந்நகரத்திக் வாழும்,230 க்கும் அதிகமான பிள்ளைகள் தாய்மொழியோடு அறநெறிகளையும் கற்றுள்ளனர்,திருக்குறள், பஞ்சபுராணம், மூதுரை,நல்வழி, நாலடியார்,ஆத்திசூடி, கொன்றைவேந்தன், தியானம் யோகா போன்ற வாழ்வியலுக்கு வழிகாட்டும் அறநெறிகளைச் சொல்லித்தருகிறோம்.

கரிணி.-எவ்வாறான கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன..

ஆசிரியை சசிகலா.- தாயகத்தில் நாம் கற்ற தமிழ் ,சமய நெறிகளோடு, தியானம், யோகா,வாழ்வியல்,வரலாற்றுக் குறிப்புகள்,ஒழுக்க நெறிகள் , ஏனைய சமய வரலாற்றுக்குறிப்புகள், வாழ்வியல் குறித்தும் அறியத்தருகிறோம். ஏனைய இனத்து மக்களோடு, இணைந்து வாழும் பண்புகளையும் கற்பிக்கின்றோம். புலத்தில், அவர்கள் ஏனைய இனத்து மாணவர்களோடு முரண்பாடுகளின்றி வாழவும் வழிசெய்கின்றது. இவை எமது பிரதான நோக்கம்.

கரிணி.- பாடசாலை வசதிகள் குறித்து..?

ஆசிரியை சசிகலா.- எமது மன்றத்தின் 34 ஆண்டுகால சமூக,கலைப்பணி யாவரும் அறிந்த ஒன்று.எசன் மாநகரசபையின் ஆதரவினால் இலவசமாக இடங்களைப்பெற்று எமது பணிகள் இன்றுவரை தொடர்கின்றன. கலைபயிலும் மாணவர்களையும் இணைத்துப்பார்த்தால் 152க்குமதிகமான பிள்ளைகள் இரண்டு இடங்களில் கற்றுவருகின்றனர்.

இதற்காக எசன் மாநகர சபைக்கு நன்றி உடையவர்களாக உள்ளோம்.

கரிணி.-இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள்..

கடந்த 15 ஆண்டுகளில்,திரு.நயினை விஜயன்,திருமதி சசிகலா நயினை விஜயன்,திருமதி. சரோஜினிதேவி பாலேந்திரா,திருமதி.நவநிதி குணபால சிங்கம், திருமதி.கலையரசி ரவீந்ரசிவம்,மற்றும் யோகா தியான வகுப்புகளை திருமதி.ஹரிணி கண்ணன் ஆகியோர் இணைந்து நடாத்தி வருகின்றனர். இவர்களோடு பயிற்சி மாணவ உதவி ஆசிரியைகளாக, செல்விகள் கலைவாணி ரவீந்ரசிவம்,ஆர்திகா ராஜேந்திரன்,அகிஷா வேலுப்பிள்ளை, தாருண்யா தர்மகுலசிங்கம் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.





கரிணி..-பல ஆண்டுகளாக சமய,சமூக,கலை,தமிழ்ச்சேவையாற்றும் உங்கள் பணி புலம்பெயர் தேசத்தில் போற்றுதலுக்குரியது. இன்னுமின்னும் பல குழந்தைகள் பயனடையவேண்டும என வாழ்த்தி, வெற்றிமணிக்காக இந்த நேர்காணலைத் தந்தமைக்காக நன்றிகள். ஆசிரியை சசிகலா நயினை விஜயன்.- உங்களுக்கும், வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சிவகுமாரன் அவர்களுக்கும் எமது பாடசாலையின் சார்பாக மிக்க நன்றிகள். நன்றிவணக்கம்.

படங்கள்: வெற்றிமணி

பாடசாலையின் 15 ஆவது ஆண்டு விழா **2.3.2019.**
Karl-DenhausStr.11-13,45329 Essen 14.00











Bochum
Lucky Fly Reisebüro
pதிவுக்கு முந்துங்கள்...
Sommer Offer
01.3.2019 முதல்
31.5.2019 வரை
(ஈஸ்ரர் விடுமுறை தவிர்த்து)
599 €
குறுகிய காலத்திற்கு மட்டுமே!
பதிவுக்கு முந்துங்கள்!
46 Kg
Gulf Air
Departure:Date: Weekday- Departure FRC- CMB
01.07.2019- 01 - 21.07.2019
03.07.2019 -03 - 23.07.2019
04.07.2019 -04 - 28.07.2019
05.07.2019 -05 - 30.07.2019
06.07.2019 -06 - 02.08.2019
08.07.2019 -01 - 03.08.2019
10.07.2019 -03 - 04.08.2019
19.07.2019 -05 - 17.08.2019
20.07.2019- 06 - 18.08.2019
22.07.2019 -01 - 20.08.2019
24.07.2019 -03 - 23.08.2019
25.07.2019 -04 - 24.08.2019
26.07.2019 -05 - 25.08.2019
27.07.2019 -06 - 27.08.2019
29.07.2019 -01 - 30.08.2019
31.07.2019 -03 - 31.08.2019
01.08.2019 -04 - 01.09.2019
02.08.2019 -05 - 03.09.2019
03.08.2019 -06 - 06.09.2019
05.08.2019 -01 - 07.09.2019
08.08.2019 -04 - 08.09..2019
739 €
Mob:No: 0179 1484 892
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
Vettimaniy Ltd
QATAR
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Rheinische str.56
44137 Dortmund





விவேகானந்தன் விளையாட்டுமைதான திறப்புவிழா

யாழ் உரும்பிராய் சைவத்தமிழ்வித்தியாலயத்தின் விவேகானந்தன் விளையாட்டுமைதான திறப்புவிழா கடந்த 11.02.2019 சிறப்பாக இடம்பெற்றது. இந்த விளையாட்டு மைதானத்திற்குரிய காணியினை சமூகசேவகர் திரு.கு.விவேகானந்தன் குடும்பத்தினர் வாங்கி பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர். பாடசாலை வரலாற்றில் 103 வருடங்கள் விளையாட்டுமைதானம் இல்லாதிருந்த குறை நீங்கப்பெற்றது. விழாவிற்கு வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்,கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் நல்லை சுவாமிகள், அதிபர், ஆசிரியர்கள் ,மாணவர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். மைதானத்தை அரவிந்தன் - சிவஜெனனி தம்பதிகள் திறந்துவைத்தனர்.



வெற்றிமணி ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின்

**நூற்றாண்டு விழா**

1919- 2019

12.05.2019 Sunday

மண்டபம்

St.Monika Gemeindezentrum
Am Kleinenberg
58239 Schwerte Ergste
Germany

## உயிரினும் இந்த பெண்மை இனிதடா !




கலாசூரி திவ்யா சுஜேன்

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான புவி பேணி வளர்த்திடும் ஈசன் என்று பாரதி தீட்டிய வாசகத்தை நினைத்திடும் போதெல்லாம் பெண்ணாய் பிறந்த பயன் கண்டு பூரிக்கிறது என் தமிழ் பொதிந்த இதயம்.

அன்று நடு சபைதனில் வெஞ்சினம் முழக்கிய பாஞ்சாலியையும் , சிலம்பின் சதியால் மதுரையை எரித்த கண்ணகியையும், ஒன்றிய உயிரின் உயர்நிலை காட்டிய நாச்சியாரையும் , அறநெறி தந்த ஒவையையும் முலைப்பாலுடன் ஊட்டி தமிழ் அன்னை விதைத்தாள்.

சுந்தர தமிழினை மந்திரமென்று சீர் வாழ்ந்தோர் அருமருந்து அருந்திடல் ஆயினார்.
அத்தகை தமிழ் மகளாய், சங்கத் தமிழ் தந்த பெண்ணின் ஏழு பருவநிலைகளிலும் பெண்மையைப் போற்றிய தமிழோடு இணைத்தவளாய் ,
சர்வதேச மகளிர் தின அன்பையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொள்கிறேன்.
உயிரினும் இந்த பெண்மை இனிதடா !






# அவர்களின் பயமும் எங்களின் கனவும்



JUDE PRAKASH

## “பிரிந்தாலும்.. பிரியலாம்”

சிங்கள தொலைக்காட்சியான ஹிருவின் அரசியல் நேர்காணல் நிகழ்ச்சியான சலக்குணவில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்து கொண்டு, தனிச் சிங்களத்திலேயே உரையாடியது, துணிச்சலானது.

சுமந்திரன் கலந்து கொண்ட நோக்கமும், நிகழ்ச்சியின் கருப்பொருளும் “தமிழ் மக்களின் பிரச்சினைகளை தென்னிலங்கைக்கு விளங்கப்படுத்துதல்” என்பதாக அமைய, கேள்வி கேட்ட மூன்று சிங்கள ஊடகவியலாளர்களின் ஊடாட்டமோ, சுமந்திரனை மடக்கி மட்டம் தட்டுவதிலும், தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை மலினப்படுத்துவதிலுமே மையம் கொண்டிருந்ததால், சுமந்திரனின் துணிச்சலான செயற்பாட்டை, “வரவேற்கத்தக்கது” என்று கூறுவது பொருத்தமாகப்படவில்லை.

நிகழ்ச்சியின் முதற் கேள்வியே, நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள் என்று தொடங்கி, அவர் கொழும்பில் கற்றதை விபரித்ததும், அப்படியானால் தமிழர் என்பதால், தமிழ் மொழியை பேசுவதால் நீங்கள் ஏதாவது பாதிப்பிற்கு உள்ளாகினீர்களா என்பதாக அமைகிறது.

1983 இனக்கலவரத்தில் யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்பட பல்லாயிரம் தமிழர்களில் அடங்கும் சுமந்திரனும், “ஓம், நிறையவே, தமிழன் என்றபடியால் நான் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டேன்” என்று மறுமொழி தருவதுடன் அவரது பதிலடி ஆரம்பமாகிறது.

ஊடகவியலாளர்கள் மறுவளமாக வந்து, வடக்கில் கல்விகற்ற பலர் இன்றும் இலங்கையில் பல்வேறு உயர் தொழில்துறைகளில் வீற்றிருக்கிறார்கள், அதேவேளை இந்தத் தீவில் தமிழ் மக்களிற்கு பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக கூறுகிறார்கள், அவ்வாறாயின் இந்த தொழில்துறைகளில் உள்ளவர்களின் முன்னேற்றத்திற்கு அவர்களது தாய்மொழி தடங்கலாக இருக்கிறதா என்ற அடுத்த கேள்விக்கும், “ஓம்” என்ற பதிலும் விளக்கமும் விடையாகிறது.

தெற்கில் வாழுபவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளும் வடக்கில் வாழுபவர்களின் பிரச்சினைகளும் ஒன்று என்று நீங்கள் நினைக்கவில்லையா என்ற கேள்வியை சிங்கள ஊடகவியலாளர் கேட்கும் போதே, எழுபதாண்டுகளிற்கு மேலாக நாங்கள் போராடிவரும் அரசியல் போராட்டத்தை, அதுவும் முப்பதாண்டுகளிற்கு மேலாக பல்லாயிரக்கணக்கான உயிர்களை ஆகுதியாக்கி நிகழ்த்திய விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியத்தை இன்றும் சிங்களம் புரிந்து கொள்ள மறுக்கிறது என்ற எண்ணம் தான் மேலெழுகிறது.

விடுதலைப் புலிகள் புரிந்தது பயங்கரவாதம் தான், அதேவேளை அப்பாவி மக்களை துன்புறுத்தி அரசாங்கம் அரங்கேற்றியதும் பயங்கரவாதம் தான் என்று சுமந்திரன் அளித்த நேரடியான பதிலை ஊடகவியலாளர்கள் எதிர்பார்க்கவில்லை போலிருந்தது.

இலங்கையின் இரண்டு பிரதமர்கள் தமிழர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை கிழித்தெறிந்த பின்னணியிலும், 1972ன் குடியரசு யாப்புருவாக்கத்தில் தமிழர்கள் பங்களிப்பு புறக்கணிக்கப்பட்ட பின்புலத்திலுமே, தமிழர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும் என்று சுமந்திரன் ஆணித்தரமாக சிங்களத்திலே கருத்துரைத்தது, சிங்களத்திற்கு புரிந்தருக்குமா என்பதும் சந்தேகமே.

நெல்சன் மண்டேலா தான் ஆயுதம் ஏந்தியதை நியாயப்படுத்திய கதையை சுமந்திரன் சொல்லப் போக, “அப்போ நீங்கள் பிரபாகரனையும் மண்டேலாவை போல தூய்மைப்படுத்த முனைகிறீர்களா” என்று ஊடகவியலாளர் கேட்ட தொனியில் பொதிந்திருந்த வன்மமும் ஆத்திரமும் தொலைக்காட்சியில் நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருப்பவர்களையும் பயமுறுத்தியது.

இருக்கும் அதிகாரங்களை வைத்துக் கொண்டு வட மாகாண சபையை உங்களால் திறம்பட இயக்க முடியவில்லை என்ற எள்ளல் நிறைந்த கேள்விகளிற்கு, எங்கள் தரப்பு குறைபாடுகளிற்கு நாங்கள் பொறுப்பேற்கிறோம், அதேவேளை ஆளுநர்கள் போட்ட முட்டுக் கட்டைகளும், சட்டத்தில் உள்ள குறைபாடுகளும் வடமாகாண சபை திறம்பட இயங்காமைக்கு காரணங்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார் சுமந்திரன்.

நீங்கள் தான் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறுகிறீர்கள், ஆனால் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் உங்களது வாக்கு வங்கி சரிந்து விட்டதே என்று குத்திகாட்டிய ஊடகவியலாளருக்கு, நாங்கள் அமைக்க உதவிய நல்லாட்சியினால் எமது மக்களுக்கு அரசியல் தீர்வோ பொருளாதார நன்மைகளோ கிடைக்கவில்லை. அதனால் எங்கள் மேல் அவர்களிற்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக, எங்களை விட தீவிரவாத சிந்தனை கொண்ட கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்று வெளிப்படையாகவே சுமந்திரன் பதிலளித்தார்.

தமிழ் மக்கள் என்றுமே தங்களது உரிமைகளுக்கு முன்னுரிமையளித்துத் தான் வாக்களிப்பார்கள், தெற்கில் உள்ளவர்களைப் போல தங்களது அன்றாட பிரச்சினைகளை முன்னிறுத்தி வாக்களிக்க மாட்டார்கள் என்பதையும் தென்னிலங்கைக்கு சுட்டிக்காட்ட சுமந்திரன் தவறவில்லை.

தமிழ் மக்கள் என்றுமே தேசிய கட்சிகளிற்கு வாக்களிக்க மாட்டார்கள், இந்த தீர்வு முயற்சியில் நாங்கள் தோற்றுப் போனால், எங்களை விட தீவிர சிந்தனை கொண்டவர்களே இனிவரும் தேர்தல்களில் வென்றுவிடுவார்கள் என்று தென்னிலங்கையை பயமுறுத்தவும் சுமந்திரன் பின்னிற்கவில்லை.

புதிய அரசியல் யாப்புருவாக்கம், நிபுணர் குழு அறிக்கை, ஏக்கிய ராஜ்ஜிய ∴ ஒருமித்த நாடு சொல்லாடல்கள், சமஷ்டி தான் உங்களுக்கு வேணுமா அது பிரிவினைக்கு வழிவகுக்குமே, என்பன தொடர்பான கேள்விகளும் அதற்கான தெளிவுபடுத்தல்களும்,இந்த நேர்காணலில் பெரும் பகுதிகளை ஆக்கரமித்திருந்தது.

இந்த நேர்காணலில் இடம்பெற்ற பெரும் பகிடி என்னவென்றால், தமிழ் தேசியவாதிகள் ஏக்கிய ராஜ்ஜிய/ ஒருமித்த நாடு, என்பது ஒற்றையாட்சி தான், சுமந்திரன் சுத்துறார் என்று கதற, ஒரு சிங்கள ஊடகவியலாளரோ “உண்மையை சொல்லுங்கள்...நீங்கள் தனி நாட்டுக்கு வழிவகுக்க தான் ஏக்கிய ராஜ்ஜிய ∴ ஒருமித்த நாடு என்ற ஐஸ்கிறீமை பூசி ஏமாற்றுகிறீர்கள்.. அது தானே” என்று கேட்பது தான்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்.




07ம் பக்கத் தொடர்ச்சி

# அவர்களின் பயமும்

ரணகளமான நேர்காணலின் நடுவிலே, ஆனந்தசங்கரியும் தேவானந்தாவும் தங்களுக்கு தெரிந்த அரைகுறை சிங்களத்தில் அரற்றி, தங்களுக்கு அளிக்கப்பட்ட நகைச்சுவை நடிகர்களிற்கான கதாபாத்திரத்தில் செவ்வனே கலக்கி விட்டு போனார்கள். ரணகளமான நேர்காணலின் நடுவிலே, ஆனந்தசங்கரியும் தேவானந்தாவும் தங்களுக்கு தெரிந்த அரைகுறை சிங்களத்தில் அரற்றி, தங்களுக்கு அளிக்கப்பட்ட நகைச்சுவை நடிகர்களிற்கான கதாபாத்திரத்தில் செவ்வனே கலக்கி விட்டு போனார்கள்.

நிகழ்ச்சி ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே சூடு பிடிக்க தொடங்கிய நேர்காணலின் உச்சக்கட்டம், அண்மையில் யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் நிகழ்த்திய உரையின் ஒரு சிறிய பகுதியில், "(நாடு) பிரிந்தாலும் பிரியலாம்" என்று போற போக்கில் சொல்லி போன சொல்லாடலின் காணொலியை போட்டுக் காட்டி விட்டு, "நீங்கள் நாடு பிரிய வேண்டும் என்று உள்ளார விரும்புகிறீர்கள்" மூன்று ஊடகவியலாளர்களும் ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நடாத்திய குறுக்கு விசாரணை தான்.

யாழ்ப்பாண மண்ணில் வைத்து ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு காண நாங்கள் இதய சுத்தியுடன் அதை அணுக வேண்டும், எங்களது செயல்களில் மட்டுமல்ல சிந்தனையிலும் நாங்கள் சுத்தமாக இருக்க வேண்டும், ஆதலால் நாங்கள் இன்னும் தமிழீழ கனவோடு பயணிக்க கூடாது என்று தமிழ் மக்களிற்கு பிரசங்கம் வைத்து விட்டு வந்த சுமந்திரனிற்கு,

"நாடு பிரிந்துவிடும் என்பது அவர்களிற்கு (சிங்களவர்கள்) இருக்கிற ஒரு பயங்கரமான பயம், அது ஏன் இருக்கிறது என்று எனக்கு தெரியாது, பிரிந்தாலும் பிரியலாம்" என்ற சொல்லாடலில் "பிரிந்தாலும் பிரியலாம்" என்று சுமந்திரன் கூறியதை உறுவி எடுத்து வைத்துக் கொண்டு, இலங்கையின் முதன்மையான சட்டத்தரணிகளில் ஒருவரான சுமந்திரனை, தொலைக்காட்சி நேர்காணலில் குறுக்கு விசாரணை செய்ய கொழும்பில் மூன்று சிங்கள ஊடகவியலாளர்கள் காத்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, கொழும்பில் படித்து, அங்கேயே வழக்கறிஞராக திரும்பட பணியாற்றி, கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் ஒட்டுமொத்த இலங்கையின் ஜனநாயகத்தையே உயர் நீதிமன்றில் வழக்காடி காப்பாற்றி, பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் தீர்வை வரைந்து, அதற்காக முழுமையான இதய சித்தியுடன் கடந்த பல ஆண்டுகளாக செயலாற்றும் சுமந்திரன் கூறிய, ஙரநல எநசய ஙநசய ரக "பிரிந்தாலும் பிரியலாம்" என்ற இரு வார்த்தைகளை வைத்துக் கொண்டு அவரை சல்லடை போடும் சிங்களம் தான் ஒட்டு மொத்த தமிழினித்திற்குமான ஒரு நியாயபூர்வமான அதிகார பரவலாக்கத்திற்கு இணங்கப் போகிறது?

ஒருமித்த பிளவுபடாத நாட்டுக்குள் எங்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து தாருங்கள், உங்களுக்கு உரியதை நாங்கள் கேட்கவில்லை, எங்களது உரிமையைத் தான் கேட்கிறோம் என்று பாராளுமன்றத்திலும் வெளியிலும் சிங்களவர்களை நோக்கி கெஞ்சும் தொனியில் அறைகூவல் விட்ட சுமந்திரனிற்கு, என்னதான் இருந்தாலும் நீரும் தமிழன் தான், ஆகவே நீரும் எப்படியும் நாட்டை பிரிக்கத் தான் பார்ப்பீர், என்ற தொனியில் வகுப்பெடுத்தார்கள் ஹிரு தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள்.

அவர்கள் பயப்பிடுகிறார்கள் இவர்கள் கைவிடச் சொல்கிறார்கள் என்பதற்காக நாங்கள் எங்களது தமிழீழ கனவை கலைத்து விடமுடியாது, தொலைக்கவும் மாட்டோம். தனித் தமிழீழத்திற்கான போராட்டத்தில் நாங்கள் தோற்றது உண்மை, எங்களது இலக்கு தவறிப் போனதும் யதார்த்தம், இன்றைய களயதார்த்தை அனுசரித்து பிரிவுபடாத நாட்டுக்குள் எங்களது சுயநிர்ணய உரிமைகளை உள்ளடக்கிய தீர்வை ஏற்க நாங்கள் தயாராகவே உள்ளோம் என்பதும் சத்தியம்.

அதற்காக, கனவு காணும் எங்களின் உரிமையையும் நாங்கள் ஏன் விட்டுத் தரவேண்டும்? எங்களது அப்பப்பாக்களும் அம்மம்மாமாரும் ஊட்டி வளர்த்த கனவல்லவா அந்தக் கனவு? எங்களது அம்மாமாரும் அப்பாமாரும் கண்ட அதே கனவல்லவா அந்தக் கனவு? எங்களது அண்ணாமாரும் அக்காமாரும் தம்பிமாரும் தங்கச்சிமாரும் இந்தக் கனவை நனவாக்கத் தானே தங்களை ஆகுதியாக்கினார்கள்? பக்கத்து வாங்கில் இருந்து படித்த நண்பனும் ஒன்றாக கிரிக்கட் விளையாடிய தோழனும் புத்தகத்தையும் டியவஜயும் எறிந்து விட்டு ஓடியது இந்தக் கனவை நனவாக்கத் தானே?

இன்றைய நாட்டு நிலைமை எங்களுக்கு நன்றாக விளங்கும். போரழித்து விட்டுப் போன எங்களது வாழ்வாதாரங்களையும் மொழியையும் கலாச்சாரத்தையும் சமூக கட்டுக்கோப்புக்கள்ளயும் மீளக்கட்டியமைக்க வேண்டிய முக்கியம் எங்களுக்கு நன்றாக புரியும். எங்களுக்குள் உறங்கும் எங்களின் தாயகக் கனவு நிகழ்கால தீர்வு முயற்சிகளுக்கு நிட்சயமாக இடைஞ்சலாக இருக்க மாட்டாது, இருக்கவும் முடியாது.
தமிழீழக் கனவு எங்களுக்குள் பத்திரமாக இருக்கட்டும், அந்தக் கனவை நாங்கள் எங்களுக்குள் ஆழமாக புதைத்து வைத்திருப்போம், எங்களது அடுத்த சந்ததிக்கும் அந்தக் கனவை நாங்கள் கடத்தி விட்டு தான் நாங்கள் கண் மூடுவோம், என்றோ ஒரு நாள் எங்களின் கனவு நனவாகட்டும்.

Que sera, sera
Whatever will be, will be
The future's not ours to see
Que sera, sera
What will be, will be

## 18 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!


மலர்வு:
12.05.1988



பிரிவு:
16.03.2001

**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)

அன்பின் திருவுருவே! அருமைக்
கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயர் இன்னும்
நீங்கவில்லை.
ஆண்டுகள் பதினெட்டு ஆனதம்மா
இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம்
எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை
வளர்க்கிறது!
காலங்கள் கரைந்தாலும் கலையாத
உறவாக
வாழ்ந்திருப்பாய் எங்களுடன்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி
நிழலினிலே!
என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா அப்பா அக்கா அத்தான்
S.Thevarajah (U.K.)



10.03.2019 ஞாயிற்று கிழமை
மாலை 3.30 மணிக்கு யேர்மன்
**தமிழர் அரங்கத்தில்**
(Rheinische Str 76-80 44137 Dortmund)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
**நெடுந்தீவு முகிலனின் நூல் வெளியீடு**

**வெளியே புன்னகை அரசி**
**உள்ளே கண்ணீருக்கு அடிமை**
**கவிதை நூல்**

பன்னாட்டு புலம் பெயர்
தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின்
ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது.

எழுத்தாளர் ஏலையா க.முருகதாசன்
தலைமை தாங்கும் இன் நிகழ்வில்
பிரதம அதிதியாக
வெற்றிமணி சிவத்தமிழ் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்
கலாநிதி மு.க.சு சிவகுமாரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
வெளியீட்டுரையை
எழுத்தாளர் வி.சபேசனும்
ஆய்வுரையினை
எழுத்தாளர் சந்திர கௌரி சிவபாலனும்
வழங்கவுள்ளனர்.
நூலின் முதல் பிரதியினை ஆசியா சமுத்திரம்
உரிமையாளர்
இராசையா இரகுநாதன் பெற்றுக் கொள்கிறார்.



இலக்கிய பெண்ணுக்கு எழுத்துகளால்
தாலி கட்டினேன்.
உணர்வுகளால் சேலை கட்டினேன்.
வார்த்தை குங்குமத்தை தொட்டு
பேனாவால் பொட்டு வைத்தேன்.
சிந்தனை கட்டிலிலே நினைவுகளை
தாலாட்டி உறங்க வைத்தேன்.
வெள்ளை தாள் மெத்தையிலே - மொழிக்கு
முத்தம் கொடுத்தேன்.
மறை நிலை உத்திகளை உவமைகளால்
கட்டிப்பிடித்தேன்.
எதுகை மோனைகளால் அழகிய
போர்வை விரித்தேன்.
ரகசிய வரிகளால் இரவை வரைந்தேன்.
அந்தரங்க சொற்களுக்கு அடிக்கோடிட்டேன்.
கருவறையில் கற்பனையை - மகவுவாய்
சுமக்க விட்டேன்.
பிரசவ காலத்தில் தந்தை தகுதி பெற்றேன்.
எல்லா குழந்தைகளையும் கவிதை என்றே
கணக்கு வைத்தேன்.
வாசகர் முன்பள்ளிக்கு நாள் தோறும்
அனுப்பி வைத்தேன் - ஆனால்
இப்போதும் என் மனைவி
கர்ப்பமாகவே இருக்கிறாள்.
**நெடுந்தீவு முகிலன்**

# ஆண் மூளை - பெண் மூளை: பிரிவினை சரிதானா?




Dr. புஷ்பா கனகரட்ணம் , Ph.D., C. Psych.
Clinical Psychologist

Men are from Mars Women are from Venus - அதாவது, "ஆண்கள் செவ்வாய் கிரகத்தை சேர்ந்தவர்கள் பெண்கள் புதன் கிரகத்தை சேர்ந்தவர்கள்"- என்ற தலைப்பில் 1992இல் ஒரு நூல் வெளியானது உங்களில் சிலருக்கு தெரிந்திருக்கலாம். இந்த நூல் குடும்ப உறவுகள் சம்பந்தப்பட்ட உளநல ஆலோசகர் (relationship counsellor) John Gray என்பவரால் எழுதப்பட்டு, மிக பலரால் வாசிக்கப்பட்ட ஒரு நூலாகும். எதிர்பாலார், கணவன்-மனைவி, காதலன்-காதலி, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு இந்த நூல் மிகப்பெரும் துணையாக இருந்திருக்கிறது என்பது பலரின் அபிப்பிராயம்.

இந்த நூலில் அப்படி என்ன சொல்லப்பட்டு இருக்கிறது? சுருக்கமாக சொல்லப்போனால், ஆண்களும் பெண்களும் தம் உறவில் எவ்வளவு கொடுக்கல் வாங்கல் நடக்கிறது என்பதை அவதானிக்கிறார்கள் அந்த சமநிலை குழம்பும் போது, அவர்களுக்கிடையில் நல்ல தொடர்பாடல் இல்லையெனில், உறவில் சிக்கல் வருகிறது. பொதுவாக, பெண்கள் அன்போடு தம் கணவரோ காதலரோ செய்யும் எந்த சின்ன விடயத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால், ஆண்கள், பெரிதாக ஒரு விடயத்தை செலவு செய்து மனைவிக்கு வேண்டிக்கொடுக்கிறார்கள் என்றால், அதற்கு தம் மனைவியிடம் கூடுதல் அங்கீகாரத்தை எதிர்பார்ப்பார்கள். பெண்களின் சின்ன, சின்ன எதிர்பார்ப்புகள் ஆண்களுக்கு ஒரு பொருட்டாக தெரியாததால், உறவில் சிக்கல்கள் ஏற்படலாம். இதனை விடவும், புசயல ஆண்களும் பெண்களும் எப்படி அழுத்தத்தை (stress) சமாளிக்கிறார்கள் என்பது பற்றி எழுதுகிறார். ஆண்களுக்கு அழுத்தம் கூடும்போது, அவர்கள் "குகைக்குள்" ஒளிந்துகொள்கிறார்கள் அதாவது பிரச்சனையில் இருந்து விலத்திக்கொண்டு, நண்பர்கள், அல்லது ஏதாவது பொழுது போக்கில் ஈடுபட்டு, பிரச்சனையை ஆறப்போட்டு ஆராய்வோம் என விட்டுவிடுவார்கள். இது பெண்களுக்கு கடினமாக இருக்கிறது என்கிறார் Gray. பெண்கள் பிரச்சனையை பற்றி பேச விரும்புவார்கள். தீர்வு கிடைக்கிறதோ இல்லையோ, யாரிடமாவது கலந்தாலோசிக்க விரும்புவார்கள். ஆக, ஆண்கள் பிரச்சனையை விட்டு விலக நினைப்பதும், பெண்கள் பிரச்சனையை அணுக நினைப்பதும், ஆண் - பெண் இடையில் விரிசலை உண்டாக்குகிறது என்பது Men are from Mars Women are from Venus நூலினை எழுதிய Gray இன் வாதம்.

இந்த நூலுக்கு பல முனைகளாலும் எதிர்ப்பு வந்துகொண்டுதான் இருந்திருக்கிறது. Gray இன் நூலுக்கு சவாலாக பல பால்நிலை (gender) மற்றும் உளவியல் ஆய்வாளர்கள், கல்விமான்கள் குரல் எழுப்பி இருக்கிறார்கள்.



Dr. புஷ்பா கனகரட்ணம்

முக்கியமாக மனித உளவியலை படிவார்ப்பாக்குவது (stereotype) பற்றியது தான் அது. படிவார்ப்பு என்றால் என்ன? ஒருவர் குழு சார்ந்து (உதாரணமாக, நிறம், பால்நிலை, மதம், இயலாமை) அவர் பற்றி பிழையான/அதி-எளிமையான மாற்றமுடியாத அபிப்பிராயத்தை வைத்திருப்பது - ஒரு உதாரணம், கறுப்பினத்தவர்களை பார்த்து பயங்கரமானவர்கள் என்ற எண்ணத்தை வைத்திருப்பது).

( The Myth of Mars and Venus: Do Men and Women Really Speak Different Languages) செவ்வாய் புதன் பற்றிய இட்டுக்கட்டு: ஆண்களும் பெண்களும் உண்மையில் வெவ்வேறு மொழிகள் பேசுகிறார்களா? என்ற தம் நூலில், Deborah Cameron பால்நிலையை பற்றி நாம் எளிமையான ஒரு விளக்கத்தை கொடுக்க முடியாது என்கிறார். அதோடு ஆண்-பெண் வேறுபாடுகளுக்கு உயிரியலில் விளக்கம் இல்லை. ஆய்வு சான்றுகளும் இல்லை. சூழல் காரணிகளும், சமூக எதிர்பார்ப்புகளும் நம் பால்நிலை வெளிப்பாட்டில் பெரும் பங்கு வகிக்கின்றன, என்கிறார். அத்தோடு, எப்படி பெண்களுக்குள்ளும், ஆண்களுக்குள்ளும் ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் இருக்கின்றனவோ, அதே அளவுக்கு, இரண்டு பால் நிலைகளுக்கும் இடையில் பல ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் இருக்கின்றன என இவர் வாதிடுகிறார். ஆண்களும் பெண்களும் அடிப்படையில் வேறுபட்டவர்கள் அல்ல என வாதிடுகிறார் Michael Kimmel, Stony Brook சர்வகலாசாலை பேராசிரியர்.

இவரும், சமூக அழுத்தங்களே ஆண்-பெண் வேறுபாடுகளாக வெளிப்படு கின்றன சமூக, அரசியல் ரீதியில், இரு பாலாரும் ஒரே தேவைகளை, விருப்பங்களை தான் கொண்டிருக்கிறார்கள் என்கிறார். வேறு பல கல்விமான்களும் சொல்வதென்னவென்றால், இரு பாலாருக்கும் வேற்றுமைகள் இருந்தாலும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அந்த வேறுபாடுகள் பாரியதாக இல்லை என்பது தான். ஆணோ பெண்ணோ, ஒரு உறவில் அவர்கள் எதிர்பார்ப்புகளும் தேவைகளும் ஒரேமாதிரியாக தான் இருக்கின்றன என்கிறார்கள். Gray இன் அபிப்பிராயப்படி, ஆண்மை என்றால், உணர்வுகளை புறக்கணிப்பவர்கள், பிரச்சனைகளை உதாசீனம் செய்பவர்கள் அது தவறு. அதிகமான ஆண்கள் அப்படி நடப்பதில்லை. இப்படியான கருத்துக்கள், ஆண்கள், பெண்கள், இருவருக்கும் பாதகமானவை என்கிறார்கள்.

அண்மையில், New York Times ஆய்வுக்கட்டுரை ஒன்று இந்த ஆண் மூளை, பெண் மூளை என்று பாகுபடுத்தி பேசும் பேச்சுக்கு இனி ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதை அழுத்துகிறது. உளவியல், நரம்புவிஞ்ஞானம், மற்றும் வரலாறு என்ற துறைகளில் பேராசிரியர்களாக இருக்கும் Dr. Joel மற்றும் Dr. Fine இருவரும் இணைந்து இந்த விடயம் பற்றி சொல்வது இது தான்:

ஐரோப்பாவில் சமத்துவவாதம் வளர்ந்துவந்த 17ம் 18ம் நூற்றாண்டுகளில், பெண்களின் தாழ்மை நிலைக்கு விஞ்ஞான அடிப்படையில் விளக்கங்கள் தேவைப்பட்டன. அந்த காலம் தொட்டு, நடைமுறையில் இருந்துவரும் ஆண்-பெண் இன வேறுபாட்டை விளக்குவதற்கு, உயிரியலையும், விஞ்ஞானத்தை யும் ஏதோ ஒரு வகையில் நாம் நாடிக்கொண்டு தான் இருக்கிறோம்.


தொடர்ச்சி 10ம் பக்கம்



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

09ம் பக்கத் தொடர்ச்சி

## ஆண் மூளை - பெண் மூளை:



அடிப்படையில், ஆண், பெண் என்று மிக வேறுபட்ட, இயல்பில் வித்தியாசமான இரு இனங்களாக நம்மை நாமே பிரித்து காண்கிறோம். இது எம் தகைமைகள், விருப்பு வெறுப்புகள், நடத்தை என பலவகைகளில் எம் நாளாந்த வாழ்க்கையில், மற்றும் வேலைத்தலங்களில் எல்லாம் நம்மையே நாம் ஆண், பெண் என்று பிரித்து பார்க்கும் ஒரு இயல்பாய் உருவாகி யிருக்கிறது. இந்த சிந்தனை விஞ்ஞான ஆய்வுகளை கூட நாசூக்காக ஊடுருவி இருக்கிறது. உதாரணமாக, Autism "ஆண்-மூளை" யுடன் தொடர்புபடுத்தப்பட்டு இருக்கிறது ஆண்-மூளை ஒழுங்குபடுத்தும் மூளையாகவும், பெண் மூளை மற்றவர்களுக்காக அனுதாபப்படும் மூளையாகவும், தவறாக தரப்படுத்தப்பட்டிருக்கிறது.

மற்றுமொரு ஆய்வு, ஆண்-மூளை புலனுணர்வுக்கும் செயலுக்குமான தொடர்பில் திறம்பட செயல்படுவதாகவும், பெண்-மூளை பகுத்தறிவுக்கும் உள்ளுணர்வுக்கும் இடையான தொடர்பில் திறம்பட செயல்படுவதாகவும் ஒரு கருத்தை முன்வைக்கிறது. அதாவது, இந்த கருத்தின் படி, ஆண்-மூளைக்கென ஒரு கட்டமைப்பு, பெண்-மூளைக்கென இன்னொரு கட்டமைப்பு இருப்பது போல் ஒரு கோட்பாடு முன்வைக்கப்படுகிறது.

மேல்குறிப்பிட்ட அணுகுமுறைகளில் பிரச்சனை இருக்கிறது. மூளை கட்டமைப்பு, தொழிற்பாடு, மற்றும் நடத்தையில் இருக்கும் பால்நிலை வேறுபாடுகள் எல்லாம், ஒவ்வொன்றாக ஒன்றோடு ஒன்று இணைந்து, ஆண்-மூளை-பெண்-மூளை, ஆண் இயல்பு-பெண் இயல்பு என எம்மை இரு வேறுபட்ட மனிதர்களாக, இருவேறு கிரகங்களில் இருந்து இறங்கியிருக்கும் ஜீவராசிகளாக, உருவாக்கியிருக்கிறது என நாம் ஊகிக்க ஆரம்பித்து விடுகிறோம்.

பாரிய அளவில் மூளை ஊடு கதிர்படங்கள் (scan) சம்பந்தப்பட்டு Joel and Fine செய்த ஆய்வுகள், ஆண்-மூளை என்றோ பெண்-மூளை என்றோ ஒழுங்குமுறையான, சீரான வேறுபாடுகளை மனிதமூளையில் காணமுடியாமல் இருக்கிறது என்பதை உறுதி செய்திருக்கிறது. இன்னொரு வகையில் சொல்லப்போனால், பெண்-இயல்புடன் அல்லது ஆண்-இயல்புடன் கூடிய மூளை என்று ஒன்றுமில்லை. ஆனால், எம் மூளை பல்வண்ண mosaic போல் பல இயல்புகளை கொண்டிருக்கிறது. இந்த இயல்புகள் சில ஆண்களின் மூளையில் மிக பொதுவாகவும், வேறு சில இயல்புகள் பெண்களின் மூளையில் கூடுதலாக காணக்கூடியதாகவும் இருக்கிறது.

அதே போல் தான், ஆளுமை, மனப்பாங்கு, விருப்பங்கள், நடத்தை என எமக்குள் இருக்கும் உளநிலை சார்ந்த பால்நிலை வேறுபாடுகள் எம்மை ஆண்-பெண் என்று இருவேறு விதமான மனிதர்களை உருவாக்குகிறதா என அறிவதற்கான முயற்சிகளில் இவர்கள் மேற்கொண்ட பாரிய அளவிலான ஆய்வுகளும், அப்படியான வேறுபாடுகள் நமக்குள் இல்லை என்பதை தான் தெளிவுபடுத்துகிறது. மூளை கட்டமைப்பு போலவே, எம் வேறுபாடுகள் பெண்மை, ஆண்மை சார்ந்த பல்வேறுபட்ட ஆளுமை, மனப்பாங்கு, விருப்பங்கள் மற்றும் பழக்கவழக்கங்களையே பிரதிபலித்தது.

உதாரணமாக, 4,860 பதின்மவயதினர் அடங்கிய தரவுகளை இவர்கள் பரிசீலித்தபோது, பால்நிலை வேறுபாடுகளை உடல்பருமன் சார்ந்த கவலை, மன அழுத்தம், ஒழுக்கத்தவறுகள், சூதாட்டம், வீட்டுவேலைகளில் ஈடுபாடு, விளையாட்டு போன்றவற்றில் காணக்கூடியதாக இருந்தது. அதாவது, பால்நிலை சார்ந்த நம் எதிர்பார்ப்புகளுக்கு இணைய இந்த கண்டுபிடிப்பு இருந்தது. இருந்தும் கூட, இந்த ஆய்வில் பங்கேற்ற ஒரு தனி மனிதர் கூட, தனியாக ஆண்மை சார்ந்த அல்லது பெண்மை சார்ந்த புள்ளிவரவை பெறவில்லை. எதிர்மாறாக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக இருந்தது, கிட்டத்தட்ட 70% ஆண்மைக்கான அல்லது பெண்மைக்கான கலந்துபட்ட குணாதிசயம் தான்.

இந்த ஆண்டு ஐப்பசி மாதம் இதே ஆய்வில் 2,100 மனித மூளைகள் கணித முறையில் தரப்படுத்தப்பட்டன. பால்நிலை வேறுபாடுகளை சில "அசாதாரண" மூளைகளில் தான் அவதானிக்க கூடியதாக இருந்தது. மற்றபடி, ஆண்களுக்குரிய மூளைக்கும் பெண்களுக்குரிய மூளைக்கும் வேறுபாடுகளை காணமுடியாமல் போனது. இந்த விளக்க அடிப்படையில், Autism - ஆண்களில் அதிகமாக அவதானிக்கப்படும் ஒரு நிலை - ஒரு அரிதான ஆண்-பெண் இயல்பு வேறுபாடான மூளையுடன் தொடர்புள்ளதாக இருக்க கூடும். அண்மையில் இன்னொரு ஆய்வும் Autism உள்ள ஆண்கள் மூளையில் ஒரு அசாதாரண பெண்-மற்றும் ஆண்- இயல்புடனான செயல்பாடுகளை அவதானித்திருக்கிறது.

Joel and Fine ஆய்வின் முக்கிய புள்ளி என்னவென்றால், இன அடிப்படையில் குழு மட்டத்தில் மூளை, மூளை செயல்பாடு என ஆண்-பெண் வேறுபாடுகளை நாம் காணக்கூடியதாக இருந்தாலும், ஒரு தனி மனிதர் என்று பார்க்கும்போது, பலமாதிரியான வேறுபாடுகளை தான் நாம் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஆண் என்றோ, பெண் என்றோ, அல்லது ஆண்மை கூடியதாகவோ பெண்மை கூடியதாகவோ ஒருவிதத்திலும் மூளையை சீராக வேறுபடுத்த முடியாமல் இருக்கிறது. உளவியல் சார்ந்த ஒரு தனிப்பட்ட விடயத்தை எடுத்தால் கூட - உதாரணமாக ஆண்களை பொருள்-சார்ந்தவர்கள் என்றும், பெண்களை மனிதர்கள்-சார்ந்தவர்கள் என்றும் பிரித்துப்பார்ப்பதில் அர்த்தம் இல்லை என அண்மை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒருவர் மனித நேயம் உள்ளவராக இருப்பதற்கும், அவர் பொருள்-சார்ந்த எண்ணோட்டம் உள்ளவராக இருப்பதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. அந்த ஒரு மனிதரே, இரண்டு ஆர்வங்களும் உள்ளவராக இருக்கலாம், ஒன்றில் ஆர்வம் உள்ளவராக இருக்கலாம், அல்லது இரண்டு விடயங்களிலும் ஆர்வம் குறைந்தவராகவும் இருக்கலாம்.

அடிப்படையில் ஆண் மூளை, பெண் மூளை என சிந்திப்பது ஒரு பிழையான கருத்து. மூளையும் அதன் செயல்பாடும், பால்-சார்ந்த விடயங்களுக்கும் மேலாக, பல்வேறுபட்ட காரணிகளின் தொடர்ச்சியான பரிமாற்றத்தால் வரும் கூட்டு விளைவாகவே தெரிகிறது. ஆக, விஞ்ஞான ரீதியில் பால்நிலைகளில் வேறுபாடு இருக்கிறது என்ற வாதத்தை, பால்நிலைவேறுபாடுகளை குறைப்பதற்கான எம் முயற்சிகளுக்கு தடையாக நாம் பாவிக்க முடியாது. ஏனென்றால் அத்தகைய வாதங்கள், சமூகங்களின் சராசரி பால்நிலை வேறுபாடுகளையும், எவற்றை எல்லாம் நாம் "ஆண்மைக்கோ" :பெண்மைக்கோ" முக்கியம் என்று ஊகிக்கிறோமோ, அந்த அனுமானங்கள் சார்ந்தும் இருக்கின்றன. இல்லாவிட்டால், வேலைத்தலங்களில் ஏன் ஆண்களுக்கு தன்னடக்க பயிற்சி பட்டறைகள் வழங்காமல், பெண்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் பயிற்சி பட்டறைகளை வழங்குகின்றார்கள் என கேள்வி எழுப்புகிறார்கள் Dr. Joel மற்றும் Dr. Fine.

உலகில் மனிதர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் தனித்தன்மையான இயல்புகளை பால் நிர்ணயிப்பதில்லை. பால்நிலை வேறுபாடுகளை, படிவார்ப்புகளை களைந்து, சமூக தடைகளை தாண்டிவர நாம் தொடர்ந்தும் முயற்சி எடுக்கவேண்டும். ஏனென்றால், சமூக கட்டமைப்புகளே இன்றைய பால்நிலைவேறுபாடுகளின் உயிர்நாடியாக இருக்கிறதே அல்லாமல், விஞ்ஞானத்தில் இதற்கு விளக்கமில்லை என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.



# முதுமையில் இயலாமை

**முதுமை என்பதை வருடங்களால் மட்டும் கணிக்க முடியாது.**

Dr IN



டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

“பொறு பொறு. நான் எழும்பிறன். நீ பிடியாதை. என்னை சும்மா விடு“

என்னுடனான மருத்துவ ஆலோசனையை முடித்துக் கொண்டு வெளியே செல்வதற்காக கதிரையில் இருந்து எழ முற்பட்ட போது அவரது பேரன் உதவ முன் வந்தார். அப்போதுதான் அவர் அவ்வாறு சொன்னார்.
அவரது வயது 85 தான்.
இந்த வயதிலும் அவரால் மற்றவர் உதவியின்றி கதிரையிலிருந்து எழுந்திருக்கவும் நடக்கவும் முடிகிறது.

மாறாக அதே நாளிலில் என்னிடம் வந்திருந்த மற்றொரு பெண்மணியை அவளது மகன் கைபிடித்து அணைத்து நடத்திக் கொண்டு வந்திருந்தார். உட்காருவதற்கும் எழுந்திருப்பதற்கும் அவளால் முடியவில்லை. முழுக்க முழுக்க மகனிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. இத்தனைக்கும் அவளது வயது 62 மட்டுமே.
முதுமையில் இயலாமை ஏற்படுவது நாம் எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். அதே நேரம் முதுமை என்பதை வருடங்களால் மட்டும் கணிக்க முடியாது. அதனால்தான் 85 வயதில் அவரால் சுயமாக இயங்கவும், 65 வயதில் அவள் மற்றவர்களில் தங்கியிருக்கவும் நேர்கிறது. இருந்த போதும் இதில் ஆண் பெண் என்ற வேறுபாடு கிடையாது. 85 வயதில் பெண் திடகாத்திரமாகவும் 65 வயதில் ஆண் சோர்ந்து கிடக்கவும் நேரலாம்.

அதே நேரம் வயது காரணமில்லை என்பதையும் முற்கூறிய உதாரணத்திலிருந்து புரிந்து கொள்ள முடியும்

வயது என்பது வாழ்கின்ற காலத்தை வருடங்களில் கணிக்கிற ஒரு முறை மட்டுமே. ஆனால் முதுமையும் நொய்ம்மைமையும் வயதினால் மட்டும் ஏற்படுகின்றவை அல்ல.

முதுமையில் ஏற்படும் அத்தகைய தளர்சியை, ஒரு நோய்க் குறியாக இப்பொழுது மருத்துவத்தில் அடையாளம் காண்கிறார்கள். முதுமையில் ஏற்படும் இத் தளர்ச்சியை பலவீனம், இயலாமை, நொய்ம்மை என பல்வேறு பதங்களால் அழைக்க முடியும் ஆங்கிலத்தில் Frailty என்கிறார்கள்.


## நொய்ம்மை

ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் நொய்ம்மை அடைந்துள்ளார் என்பதை எவராலும் சொல்ல முடியும். ஒருவர் எவ்வாறு நடந்து வருகிறார். திடமாக நடக்கிறாரா. மெதுவாக அடியெடுத்து வருகிறாரா, தள்ளாட்டம் இருக்கறதா. மிக மெதுவாக நடக்கிறாரா, கதிரையில் எவ்வாறு இருக்கிறார், இருக்கவும் எழுந்திருக்கவும் சிரமம் படுகிறாரா. பேச்சு எவ்வாறு இருக்கிறது போன்ற பலவற்றை வைத்து எம்மை அறியாமலே ஒருவரது நிலமையை கணித்துக் கொள்கிறோம்.

ஆயினும் மருத்துவத்தில் அவ்வாறு எழுந்தமாட்டில் சொல்ல முடியாது. சில சுட்டிகளை வைத்தே கணித்தறிந்து தெளிவாகச் சொல்ல முடியும்.


கைகளால் ஒன்றைப் பற்றும் போது உள்ள உறுதித்தன்மை தளர்தல், எல்லா விதச் செயற்பாடுகளிலும் ஆற்றல் குறைதல், நடையின் வேகம் குறைந்து போதல், உடற் செயற்பாடுகள் குறைந்து போதல், காரணமின்றி எடை குறைதல் ஆகியவற்றை நொய்ம்மைக்கான சுட்டிகளாகக் குறிப்பிடலாம்.
நொய்ம்மையால் பாதிக்கபட்டவர்களது கை கால் அசைவியக்கம் விரைவானதாக இருக்காது. மிக மெதுவாகவே கை கால்களை அசைக்கவும் செயற்படுத்தவும் முடியும். அனிச்சையான செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே இயங்கும்.

தொடர்ச்சி 14ம் பக்கம்






# பெண் உளவியலும் வெள்ளிவீதியார் பாடல்களும்






வெள்ளிவீதியார் என்னும் பெயர் இவருக்கு வரக் காரணமாக இருந்தாலும் Milkyway என்று சொல்லப்படுகின்ற பால்வீதியைக் குறிப்பதுவாகவும் எடுத்துக்கொள்ளலாம். நாம் காணும் விஞ்ஞான உலகத்தை சங்ககாலத்திலேயே கண்டுதேறிய மக்கள் இவருக்கு இப்பெயரைச் சூட்டியிருக்கலாம். இதேவேளை வெள்ளி என்பது வானத்திலிருக்கின்றது. வீதி என்பது நிலத்தில் இருக்கின்றது.

இவை இரண்டும் சேராதது போல் இவருடைய காதல் நிறைவேறாத காதலால் இவ்வாறு அழைக்கப்பட்டார் என்று கூறுவாரும் உண்டு. இவர் பாடல்கள் கற்புநிலை அற்று காமம் நிறைந்த பாடல்களாகவே காணப்படுகின்றன.



கௌசி

பெண்களின் உளவியல் பற்றிப் பேசும் உரிமை பெண்களுக்கே உண்டு. அவள் உள் உணர்வுகளும், தெளிவடையாது மனதுக்குள் தோன்றுகின்ற தவிப்புக்களும், வெளியே சொல்ல முடியாது சமூகத்தின் கண்களுக்கு திரையிடத் துடிக்கும் துடிப்புக்களும், அவளை அவளாக வாழமுடியாது செய்து விடுகின்றன. பெண் என்பவள் தன்னுடைய மனதை மையமாக வைத்து ஆராய வேண்டியது அவசியமாகின்றது. மொத்தத்தில் தம்முடைய மனதைக் கொன்றுவிட்டே பல பெண்கள் தம்முடைய வாழ்க்கைக்குப் பாதை போட்டிருக்கின்றார்கள்.

மூச்சுவிடத் தெரியாது ஒரு குழந்தை பிறக்கும்போது டாக்டர் பிறந்த குழந்தையை தலைகீழாகப் பிடித்து முதுகிலே தட்டி மூச்சுவிடச் செய்கின்ற போது முதல் முறையாக மூச்சுவிட்டாலேயே உலகத்தில் வாழலாம் என்று அக்குழந்தை ஆழ்மனதிலே பதிக்கின்றபோது, அக் குழந்தை நினைக்காமலே நித்திரையில் கூட மூச்சுவிடுகின்ற தன்மையைப் பெறுகின்றது. இது போன்றுதான் சிறுவயதிலே ஆழ்மனதிலே பதியப்படுகின்ற பதிவுகள் மனிதனை முழுவதுமாக ஆட்டிப்படைக்கின்றன. ஆண்களின் உளவியலின் படி தமக்கு ஏற்படுகின்ற கருப்பை இழப்புப் பொறாமை, மார்பக இழப்புப் பொறாமை, தாய்மை இழப்புப் பொறாமை, போன்ற பொறாமைகளால் பெண்களை அடக்கி வைக்க முற்படுகின்றனர். குழந்தைகளைப் பெறுதல், அதற்குத் தம்மைத் தயார்படுத்தல், குழந்தைக்குப் பாலூட்டுதல் போன்ற முயற்சிகளைத் தம்மால் செய்ய முடியாத இயலாமையின் வெளிப்பாடாகப் பெண்களை அடக்கி ஆள முற்படுகின்றனர் என்பது உளவியல் உண்மையாகப்படுகின்றது.

உயிர்ப்படைப்பாக்கங்களின் முயற்சியில் ஈடுபடும் பெண்களுக்கு இலக்கியப்படைப்பாக்க முயற்சிக்கு வழியில்லாமல் போகிறது. ஆயினும் அவற்றையும் மீறி எழுதுகின்ற பெண்கள் தம்முடைய பெண்ணியல் சார்ந்த பிரச்சினைகளை எழுதுவதற்குத் தயங்குகின்றார்கள் என்றே சொல்ல வேண்டும். பெண் சுதந்திரம் என்ற போர்வையில் தம்முடைய எழுத்துக்கு முலாம் பூசுகின்றார்கள்.

பொதுவாக சங்ககாலத்துப் பெண்புலவர்களில் 32 பெண்பாற்புலவர்களே சங்கப் பாடல்களில் எமக்கு இனங்காட்டப்படுகின்றார்கள். அவர்களில் உயிர்களைப் படைக்க முடியாத அதிகமான பெண்களே அதிகமான பாடல்கள் புனைந்திருப்பது அறியக் கூடியதாக உள்ளது. அவர்கள் காரைக்கால் அம்மையார், ஆண்டாள், ஔவையார், நக்கண்ணையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார் போன்றோர் ஆவார்கள். இவர்களில் அகப்பாடல்களை மட்டுமே பாடிய வெள்ளிவீதியார் பாடல்கள் பெண் உளவியல் சம்பந்தமாக சிந்தனையைத் தூண்டுவனவாகக் காணப்படுகின்றன. இவர் பாடல்களில் வெண்மை என்னும் சொல் அதிகமாக இடம்பெற்றதனால்

இப்பாடல்களில் வெள்ளிவீதியார் பாடல்கள் நிறைவேறாக் காதலினால், தன்னை விட்டுப்பிரிந்து சென்று எவ்வித தொடர்பும் இல்லாத தன் தலைவனை நினைத்துப் பாடும் அகத்திணைக்குரிய பாடல்களே முழுவதுமாக இருக்கின்றன. காதல் தோல்வியைச் சந்தித்த இவர் பாடல்கள் பெண் உளவியலின்படி சிந்திக்கத்தக்கனவாக இருக்கின்றன என்பதை முனைவர் மு.பழனியப்பன் சுட்டிக்காட்டியுள்ளார். வெள்ளிவீதியாரைத் தன் காதலன் ஏன் விட்டுப்பிரிந்தான் என்பது கேள்விக்குறி. வெள்ளிவீதியாரிடம் இருக்கும் உயிர்ப்படைப்பாக்கத் திறன், இலக்கியப்படைப்பாக்க இயல்பு தலைவனுக்கு அச்சத்தையும் இவள் எனக்கு அடங்கி நடப்பாளா என்னும் பயத்தையும் ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்று சான்றுகள் காட்டி விளக்குகின்றார். இது இன்றும் இயல்பாகவே ஒரு ஆணிடம் உள்ள அச்ச உணர்வாகக் காணப்படுகின்றது.

வெள்ளிவீதியார் பாடல்களில் பெண் உளவியல் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது என்று நோக்கினால்,

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காஆங்கு
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் மாமைக் கவினே"

தொடர்ச்சி 28 பக்கம்







# பெண் படைப்பில் ஒரு பிரமாண்டம் அவளுக்குள் படைப்பின் பேரண்டம்



ஓவியம்: கண்ணா 2019

பெண் என்பவள் படைப்பின் பெரும் சக்தியாகவே கருதப்பட்டு வருகிறாள். காவியத் தலைவர்களும், காப்பியங்களும், புலவர்களும் பெண்ணைப் போற்றி ஏத்திப் பாடியுள்ளார். உயிர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் இப் பூமியும் "பூமாதேவி" என பெண்ணின் அம்சமாகவே பார்க்கப்படுகிறது.

முன்பின் அறிமுகமற்ற ஒருவரை மணம்புரிந்து அந்த கணவனோடு துணிந்து சென்று புதிய சூழலில் இருக்கின்ற அத்தனை புதியவர்களையும் ஏற்றுக் கொண்டு தனது பணிவிடைகளை செவ்வனே செய்து அந்த குடும்பத்தையே உயர்விக்கும் பெண்ணின் மனவலிமையை என்னவென்பது?

"பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பார்கள். ஏனெனில் அவ்வளவு மென்மையாக நடத்தப்பட வேண்டியவள் பெண். மிகுந்த உணர்வு மிக்கவள். அவள் மனதை கரைப்பதும், உடைப்பதும், உருகச் செய்வதும் அவ்வளவு சுலபம். ஆனால் அவள் மனதை அழிப்பது என்பது மிக மிகக் கடினம்.

இயற்கை மீண்டும் மீண்டும் தன்னை புதுப்பித்து கொள்வதற்காக ஆண், பெண் என்கின்ற இரு வேறு தன்மைகளை மிகவும் அழகாகவும் அதீத நுட்பமாகவும் வடிவமைத்து இருக்கிறது. இவை உருவம் தாங்கி வருகின்ற பொழுது உடல்ரீதியான பல சிறப்புத் தன்மைகளையும் அதேவேளை உருவமில்லா நிலையில் சக்தி நிலையாக சூட்சுமமாக பலவிதமான தன்மைகளையும் வெளிப்படுத்தி ஒரு அழகான இயக்க நிலையை தொடர்ந்தும் இயக்கிக் கொண்டே இருக்கின்றது.

இந்த இயற்கையில் ஒவ்வொன்றுக்கும் என்று பற்பல பன்முகத் தன்மைகள் இருக்கின்றதைப் போன்றே இந்த பெண் என்ற தன்மை மிகவும் அற்புதமாகவும், அழகாகவும் வடிவமைக்க பட்டிருக்கின்றது.

பெண்மைக்கேயான சிறப்பியல்புகள் பெண்ணுக்கே உரியது. அவ்வாறான தன்மைகளை பெண் இயற்கையாகவே பெற்றிருப்பாள். இந்த இயற்கையின் பேரழகுடன் கலந்து ஒரு பரிணாமத்தை தருவாள். அந்த பரிணாமத்தை அவள் படைப்பதற்கு இயற்கை அவளுக்கென்றே பற்பல தனிச் சிறப்புகளை கொடுத்திருக்கின்றது.

பெண் என்பவள் படைப்பில் ஒரு சிறிதாக தெரிந்தாலும் அவள் ஒரு பிரமாண்டம். அவளுக்குள்ளும் படைப்பாற்றல் குடியிருக்கிறது. ஒரு புதிய உயிரை இப்பூமிக்கு கொண்டு வருவதற்கான தயார்ப்படுத்தல் பெண்ணின் வயிற்றில்த்தான் நிகழ்கிறது. அதற்கான பொறுமை, காத்திருப்பு, மென்மை, தாங்குசக்தி, அளப்பரிய அன்பு, கருணை, சகிப்புத்தன்மை போன்ற இனிய குணங்கள் பெண்மையின் இலக்கணங்களாகவே திகழ்கிறது. மனிதருள் உடல்வலிமை ஆணுக்கும், மனவலிமை பெண்ணுக்கும் அதிகமாக இருக்கின்றது.

இங்கு பெண் விடுதலை என்பதை பலர் தவறாக புரிந்து கொண்டுள்ளார்கள் ஒரு பெண் விடுதலை என்பது ஒரு பெண் தன் பெண் தன்மையில் முழுமையாக வாழுகின்ற பொழுதுதான் அது நிகழும்.



கரிணி

பெண்கள் கூடத் தம்மைப்போல் ஆண்கள் சிந்திக்கவில்லை என்று பல இடங்களில் கருத்து மோதல்கள் கொள்வதுண்டு. தான் வெளிப்படுத்தும் அன்புக்கு சமமாக ஏன் தனது துணைவன் அன்பு செலுத்துவதில்லை என்பது போன்ற விடயங்களில் பலத்த கருத்து முரண்பாடுகளில் ஈடுபடுவதுண்டு. படைப்பில் பெண்ணின் உணர்வுகளும், ஆணின் உணர்வுகளும் சிறிதளவு வேறுபாடுடையன. பெண்மை அன்பை வாரிவழங்குவதில் இன்பமடைகின்றது வெளிப்படுத்தாத அன்பினால் தன்னைத்தானே மனதளவில் தாக்கப்பட்டு வேதனையடையும். தாகம் கொள்ளும். எனவேதான் பெண் பிள்ளைகள் குறைந்தபட்சம் ஒரு கரடிப் பொம்மையிலாவது தமது அன்பைக் கொட்டித் தீர்த்து தம்மை திருப்திப்படுத்திக் கொள்கின்றனர். ஆண்களை இத்தகைய பொம்மைகளோடு காண்பது அரிது. படைப்பில் ஆண்கள் அன்பை பெற்றுக் கொள்வதில் தாகம் உடையவராக இருப்பார்கள். தனித்திருக்கும் பெண்களை விட அன்பு கிடைக்கப்பெறாமல் தனிமையிலிருக்கும் ஆண்களே மனதளவில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

படைப்பில் ஒவ்வொருவருக்குள்ளும் ஆண்மையும், பெண்மையும் இருந்தாலும் ஆண்களுக்கு ஆண் தன்மை அதிகமாகவும், பெண்களுக்கு பெண் தன்மை அதிகமாகவும் காணப்படும். ஆனால் பிரபஞ்ச சக்தியின் துணை கொண்டு யோகப் பயிற்சி மூலம் தனக்குள் இருக்கும் ஆண், பெண் தன்மையை சமநிலைப்படுத்தி இந்த இயல்புகளை கடந்தவர்களும் இருக்கிறார்கள்.










# 5 ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அமரர் தியாகராஜா தனபாலசிங்கம்



இலங்கை எழுவைதீவை பிறப்பிடமாகவும்
யேர்மனி எசன் நகரை வதிவிடமாகவும்
கொண்ட அமரர் தியாகராஜா தனபாலசிங்கம்
அவர்களின் 5 ம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் அன்பு அப்பா
நீங்கள் ஆழப்பதித்த அன்பினால்
அம்மாவும் நானும் ஆற்றொணா வலிதாங்கி
அனலிடைப் புழுவாய் வெந்து வெடிக்கின்றோம்.
உங்கள் பூமுகம் காணப் புலம்புகின்றோம்
பொழுதெல்லாம் முத்துக்குள் சிப்பியெனப்
பார்த்துப்பார்த்து நாம் பாங்காய் வளர்த்த
செல்வ மகள் ஏற்றமதை
எண்ணி எண்ணி இறுமாந்திருந்த
எம்துணைத் தெய்வமே
வெண்ணை திரண்டுவர தாழி
உடைந்தாற்போல்
விளைந்த பயிரின் விளைச்சல் பார்க்க முன்
எங்கு சென்றீர்கள்
ஓம் சாந்தி

அன்னையின் மடியில் 24.04.1961

இறைவனடியில் 01.03.2014

திதி 07.03.2019

என்றும் உங்கள் நினைவாக
மனைவி பாரதா, மகள் கார்த்தனா (இலங்கை- மாவிட்டபுரம்)

# St Patrick's College Jaffna.

## யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியின் [யேர்மனி] பழையமாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்:23.03.2019 (சனிக்கிழமை)
16.00 மாலை.

யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியின் நினைவுதினமும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் பங்குனிமாதம்(23.03.2019) சனிக்கிழமை மாலை 16.00மணிக்குகீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தேவாலயத்தில் கல்லூரியின் நினைவுத் திருப்பலியைத்தொடர்ந்து ஆலயமடண்டபத்தில் இடம்பெறும். நாட்டின் பல பாகங்களிலும் சிதறிவாழும் கல்லூரியின் பழையமாணவர்கள் இந்நிகழ்வில் தவறாது பங்கேற்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம். அன்றைய தினம் பழையமாணவர்கள் இணைப்பும், புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறும்

ஆலய முகவரி.
**Dreifaltigkeit Kirche, Flur str. 08, 44145 Dortmund.**
காலம்:23.03.2019 (சனிக்கிழமை) நேரம்: 16.00 மாலை.
மேலதிக விபரங்களுக்கு தமிழ்க்கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனரும், சங்கத்தின் தலைவருமான அருட்பணி. நிரூபன் தார்சீசியஸ். Tel. 0201/4397602 (017662142184) தற்காலிக செயலர் திரு. எஸ் ஆர். ஸ்ரீபன்.
0202/5157120(017645941924 )

11 ம் பக்கத் தொடர்ச்சி

## முதுமையில் நொய்ம்மை (பலவீனம் இயலாமை)

உதாரணமாக தசைத் தொகுதியானது நலிவடையத் தொடங்கியிருந்தால் அதைத் தடுப்பதற்கான சுலபமான சில பயிற்சிகளை செய்வது நன்மை பயக்கும். தசைகளை நீட்டி மடக்கும் சிறிய சிறிய பயிற்சிகளைச் செய்வதன் மூலம் தசைகளை வலுப்படுத்தலாம்.

எலும்புகள் பலவீனம் அடைந்திருந்தால் அவற்றைத் தடுப்பதற்கான விற்றமின் டி, கல்சியம் போன்ற மருந்துகள் உதவக் கூடும். அத்துடன் மேற் கூறியவாறு பயிற்சிகள் செய்வதும் அவசியமாகும். ரூமட்ரொயிட் ஆத்திரைடிஸ் போன்ற மூட்டு வாத நோய்கள் இருந்தால் அவற்றிக்கான சிகிச்சைகளை சரியான முறையில் தொடர வேண்டும்.
இவற்றைத் தவிர நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்டரோல், இரத்த சோகை, இருதய நோய்கள், சுவாச நோய்கள் போன்றவையும் நொய்மைக்கு காரணமாகலாம். சில சாதாரண பரிசோதனைகள் மூலம் அவற்றைக் கண்டறிய முடியும். அவற்றிற்கான சிகிச்சைகளை உரிய மருத்துவரின் கண்காணிப்பின் கீழ் ஒழுங்காக செய்ய வேண்டும்.
இருந்த போதும் பல நோயாளிகளை அவர்கள் தீவிரமான நொய்ம்மை நிலைக்கு சென்ற பின்னரே காண முடிகிறது. அந்த நிலைக்கு சென்ற வர்களுக்கு சடுதியான ஆபத்துகள் ஏற்படாமல் காப்பதே முக்கியமானது. முக்கியமாக அவர்கள் விழுந்து விடுவதைத் தடுக்க வேண்டும்.

'முடியாமல் கிடக்கிற இவர் பேசாமல் கிடவாமல் அங்கினை இங்கினை தட்டுத் தடுமாறி நடந்து திரிஞ்சு விழுகிறார். சும்மா கிடவுங்கோ என்றால் கேக்கிறாரே' என்பதுதான் பல பிள்ளைகளின் குற்றச் சாட்டாக இருக்கிறது.



பேசாமல் கிடந்தால் நொய்ம்மை இன்னும் தீவிரமடையவே செய்யும். செயற்பட்டுக் கொண்டே இருப்பதுதான் உடலை நலிவடையாமல் காப்பாற்றும். நடமாடுவதும் மற்றவர்களுடன் ஊடாடுவதும் அவர்களது மன மற்றும் உடல் நிலைகள் மேலும் மோசமடையமல் தடுத்து உற்சாகமாக இயங்க வைக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே அவர்கள் விழாமல் நடப்பதற்கு உதவியான உபகரணங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். கைத் தடிகள், வோக்கேர்ஸ் போன்றவை நிறையவே உதவும்.இவை எல்லாவற்றையும் விட வருமுன் காப்பதே சிறப்பாகதாகும். நொட்டு நொறுக்கு உணவுகளைத் தவிர்த்து போசாக்கான உணவுகளை உண்பதும், நாளாந்தம் உடற் பயிற்சிகளில் ஈடுபடுவதும் பெரும்பாலான நோய்களிலிருந்து எம்மைக் காப்பதுடன் முதுமையில் நொய்ம்மை ஆட்படாமல் ஆரோக்கியமாக இயங்கவும் வழி செய்யும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.



# உடலைவிட உளத்தைரியம் என்றும் பெண்களுக்கே அதிகம்!



**குடும்பங்கள் பல இன்னமும் குடும்ப அமைப்பை குலைக்காமல் இருப்பதற்கும் பெண்களே காரணம்!**



அனித்தா செல்வராஜா பூஷன்

மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் உளத்தைரியம் என்பது அத்தியா வசியமானது. உளத்தைரியம் இல்லாவிடின் வாழ்வில் குறித்த இலக்கை எட்ட முடியாது.

பொதுவாக ஆண், பெண் வேறுபாடு என்பது எல்லா துறையிலும் இன்னமும் இருந்து கொண்டே இருக்கின்றது. உடல் ரீதியான பலத்தை வைத்தே இதனை நிர்ணயிக்கின்றனர். ஆயினும் இன்றைய நிலையில் பெண்கள் ஒவ்வொரு துறையிலும் சாதிப்பதற்கு முக்கியமான காரணம் பெண்களிடம் உள்ள உளத்தைரியமே ஆகும். ஆணைவிட பெண் பலவீனமானவள், மென்மையானவள் என்ற கருத்துக்களுக்கு அப்பாலும் ஆணுக்கு நிகர் பெண் அனைத்து துறையிலும் முன்னிற்பதற்கு இந்த உளத்தைரியமே முக்கிய காரணமாக அமைகிறது.

சமுதாயத்தின் அடிப்படை அலகான குடும்ப அமைப்பை எடுத்து நோக்கின், அதிலும் பெரும்பங்கு வகிப்பது பெண்ணாகவே இருப்பாள். ஏனெனில் குடும்பத்தில் பல்வேறுபட்ட பங்குகளை ஏற்று குடும்பம் ஒழுங்குமுறையில் இயங்க முக்கிய காரணம் பெண்ணே.

குறிப்பாக ஓர் தந்தையை இழந்த குடும்பத்தில் ஒரு தாயாக அப்பெண் பல்வேறுபட்ட சமூக பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருப்பினும், எல்லாவற்றையும் கடந்து பிள்ளைகளை வளர்த்து சீரான முறையில் கொண்டு செல்ல முடியும். ஆனால் தாயை இழந்த குடும்பத்தில், ஓர் ஆணால் எல்லாவற்றையும் கையாளுவது என்பது அனைத்து ஆண்களாலும் இயலுவதில்லை. அதாவது வேலைக்கும் சென்று, பிள்ளைகளுக்கான பராமரிப்பையும் சமாளிப்பது என்பது மிகுந்த சிரமத்திற்குரியதாகவே அமைகின்றது.

குடும்பங்களில் மன்னிப்பு என்பது பல சமயங்களில் பலமாக அமைகின்றது. அதாவது குடும்பத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்கு மன்னிப்பே காரணமாகின்றது. குறிப்பாக குடும்ப தலைவரின் மோசமான செயல்கள், உதாரணமாக மதுபோதைக்கு அடிமையாதல், வேறு பெண்களுடனான தவறான தொடர்பு போன்றவற்றையெல்லாம் தாங்கி மன்னிக்கும் பக்குவம் பெண்களுக்கே உள்ளது. இதனால் தான் பல குடும்பங்கள் இன்னமும் குடும்ப அமைப்பை குலைக்காமல் இருப்பதற்கு காரணமாகின்றது.

கீழைத்தேய நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்கள் பல்வேறுபட்ட சுரண்டல்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து சாதாரண சமூகவாழ்வு வாழ்வதற்கு உளத்தைரியம்தான் ஏதுவாக அமைகின்றது. இதிலும், சுரண்டல்களுக்கு உள்ளான பெண்கள் சமூகத்தில் மீண்டும் வாழ்வதற்கான சக்தியும் அவர்களுக்குள் இருக்கும் தன்னம் பிக்கையே ஆகும்.

## கலைக்கும் சேவைக்கு வயது ஒரு தடையல்ல

### கலாபூசணம் திரு.நடராஜா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு முதலமைச்சர் விருது



வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாண கலைத்துறையின் முன்னேற்றத்திற்காக உழைத்த வர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கி கௌரவித்து வருகின்றது.

கோப்பாயைச் சேர்ந்த திரு.நடராஜா சிவசுப்பிரமணியம் அவர் களுக்கு கைவினைக் கலைத்துறைக்கு சிறப்பாகச் சேவை யாற்றியமையைக்கு கௌரவித்து, முதலமைச்சர் விருது 2018 வழங்கப்பட்டது.

இவற்றோடு,கலாபூசணம் விருது, ஜனாதிபதிவிருது, செம்புலக் குரிசில் விருது, என பலவிருதுகள் பரிசுகள் இவர் பெற்றுள்ளார்.

திருமுருகன்பாமாலை, திருமுருகன் பவளமமலர் திருமா மலர்கள், இந்து திருமணமும் அதன் சிறப்புக்களும், தற்போது ஏறுபடி என்னும் நூல் வெளியீட்டுள்ளார்.

தேங்காய் சிரட்டையிலும் பனம்பழத்தின் ஊமலிலும் அருமை யான இயற்கை அழகியல் கைப்பணிப் பொருட்கள் இவரால் உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டும் உள்ளது.

சுவாமி அலங்காரம், அலங்காரப்பொருள் தயாரிப்பு, சிரட்டை யில் வாத்திய கருவி, அறநெறி வகுப்புக்கள், சமூக சேவை, முதியோர் சங்கம், கோவில் பணி, தேவாரம் பாராணயம், என பலவற்றுள் தம் நேரத்தை செலவு செய்யும் சேவையாளர்.

இவர் நீர்வை கந்தசாமிகோவில் 2018 வரை உப தலைவர் பதவியில் இருந்து பல பயனுள்ள சேவைகள் புரிந்தவர்.

கலைக்கும் சேவைக்கும் வயது ஒரு தடையல்லயென தாயகத்தில் வாழ்ந்து காட்டும் இச்சேவையாளனை வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

HK Hammacher

Fahrschule- hk- hammacher.de

எமது இணையத்தளத்தை பார்க்கவும்

ஆங்கிலம்,யோர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454

HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU ASF FES — இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.

**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளளோம்

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de


Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்
தங்க நகைகள் தரமானவை மட்டும் என்றும் எம்மிடம் கிடைக்கும்
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து மளிகைப்பொருட்களும் பசுமையான மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும் நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை நீங்கள் பெறுவீர்கள்
KADHIR
Laila
Basmati Rice
BASMATI RICE
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425





றஜினா
தருமராஜா

# அம்மா சும்மா இருக்கப் பிறந்தவள் அல்ல

வாழ்க்கை என்பது ஒரு மரதன் ஓட்டம். ஒவ்வொருவரும் ஒருவர் விட்ட இடத்தில் இருந்து ஓடிக்கொண்டே இருக்கின்றோம். அந்த ஓட்டம் யாவருக்கும் சமமாக அமைந்து விடுவதுமில்லை, ஓட்டமும் முடிந்துவிடுவதும் இல்லை.

அன்று பாட்டி ஓடிமுடித்த இடத்தில் இருந்து அம்மா ஓடுகிறா. நாளை அம்மா விட்ட இடத்தில் இருந்து நான் ஓடுவேன். ஒவ்வொருவருக்கும் முன் ஓடியவர்களது கஸ்டம் மட்டும் தெளிவாகத் தெரியும், புரியும்.
அதனால் அம்மமாவுக்கு முன் பாட்டி (ஆச்சி) வாழ்ந்த வாழ்வும் சிரமமும் அம்மா நன்கு அறிந்திருப்பா. அன்றும் இன்றும் ஓர் ஒப்பீடாக பார்ப்போம்.

இன்று அம்மா செய்யும் ஒவ்வொரு வேலையும் அன்று இலகு அல்ல. நவீன முறையும் இன்று போல் இல்லை. எல்லா வேலைகளுமே தாமாகவே செய்துகொண்டார்கள். அவைகள் அனைத்தையும் நம்மால்செய்யமுடியுமா? உங்கள் அம்மாவை நினைத்துப் பாருங்கள்.

முதலில் சமையலை எடுத்துக் கொள்வோம். அன்று அம்மா மூன்று நேரமும் சமையல் தயார் செய்து கொள்வார். இன்றைய காலத்தில் முதலிலே மூன்று நேர சமையலைச் சமைத்து வைப்பார்கள். பின்னர் குளிர் சாதனப் பெட்டியில் வைத்து மறுநாளும் உண்ணுவார்கள். அப்பாதே இக்குளிர் சாதனப் பெட்டி வசதிகளில்லை. அன்று காலையில் பிட்டு அல்லது இடியப்பம் அவிப்பார் அம்மா. இன்று பாண். பிள்ளைகளும் இங்கு பாடசாலைக்கு பாண் கொண்டு செல்வார்கள். பெரிதாக காலையில் சமைக்கத்தேவையில்லை, ஆனால் இறைய அம்மா பாணையும் அன்பாடே சுவையாக செய்து வைப்பார். அன்று இருந்த அம்மா வேலைக்குப் போகின்றவராக இருந்தால் முதலே உணவு செய்து பிள்ளைகளுக்குப் பாடசாலை போக சோறுகறி கட்டியும் கொடுப்பார். இங்கு அப்படியல்ல பாணே போதும்.
இரவு மழை பெய்தால் காலையில் நெருப்பு எரிக்க விறகு இல்லையென்று, நடு இரவில் மழைக்குள் வெளியில் இருக்கும் விறகு எடுத்து வருவா அம்மா. இப்போது இப்பிரச்சினையே இல்லை.

சரி சமையலை விடுவோம். மற்றைய வேலைகளைப் பார்ப்போம். அழுக்குத் துணிகளை ஆச்சி தன் கைகளாலே தோய்ப்பார். இன்றைய அம்மாவுக்கு வாஷின்மிஷின். கடினமேயில்லை. தானாகவே சுத்தம் செய்யும். வேலை குறைவல்லவா.
வீட்டில் உள்ளவர்களுக்கு வருத்தம் வந்தால் அம்மாவின் வீட்டு மருந்துதான் முதலில். புளிக்கஞ்சி, மல்லித்தண்ணி இப்படி பல. இம்மருந்துகளே போதுமே. ஆனால் இன்று உடனே வைத்தியரிடம் சென்று மருந்து வாங்குவார்கள். வீட்டு வைத்தியம் தெரியாதவர்களாக இருப்பார்கள். இளம் வயதிலுள்ள அம்மாக்களுக்கு: உங்கள் அம்மாவையோ அல்லது ஆச்சியைக் கேளுங்கள்.

அன்று போக்குவரத்துப் பிரச்சினையும் இருந்தது. இன்று போக்குவரத்தும் இலகு. கூடுதலானவர்களிடம் சிற்றூந்து இருக்கின்றது. அம்மாவும் ஓடுவார். நினைத்த இடங்களுக்கு நினைத்த நேரங்களில் செல்லலாம். ஆனால் அன்று... நடந்தே செல்வார்கள் அவ்வெய்யிலிலும்.
அடுத்ததாக அன்றைய காலத்தில் தொடர்பு ஊடகமும் இல்லை. பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த பின் என்ன செய்வார் அம்மா. அஞ்சல்கள் எழுதுவார்கள்...எழுதி அனுப்பிய பின் பிள்ளையின் அஞ்சல் வரும் வரை ஏங்கிக் கொண்டு இருப்பார். பார்க்க முடியாது பேசவும் முடியாது. இப்பொழுது என்னவென்றால் வட்சப். பார்த்தும் பேசலாம். உடனே பதிலும் வந்துவிடும்.
இன்றைய காலத்தில் தாயும் பிள்ளைகளும் நண்பர்கள் போன்று வட்சப்பில் உரையாடுகின்றனர். ஆனால் அன்று இது முடியுமா? வட்சப்பில் மட்டுமல்ல. எல்லா விடயங்களிலும் ஒரு நண்பி போல் இருக்கிறார் அம்மா. அதனால் பிள்ளை அம்மா உறவுகள் ஆரோக்கியமாக இருக்கின்றன.
பிள்ளைகளைப் புரிந்துகொள்வதற்கு நாம் அவர்களின் நண்பர்களாக மாறவேண்டும்!
அன்று பத்து பிள்ளைகளும் நிறைய வேலைகளும். தற்போது ஒன்றிலிருந்து மூன்று வரை பிள்ளைகள். ஆகையால் நேரங்களைப் பிள்ளைகளுக்காக ஒதுக்கமுடியும். அன்று கடினம்.

அம்மா என்பவர் அன்பு காட்டுபவர். அவர் செய்யும் வேலைகள் அன்று கடினமானவை. ஆனால் இன்று இலகுவானது வேலைகள். அது உண்மைதான். அதற்காக அம்மாவின் பொறுப்பு குறைந்துவிடவில்லை. அது மேலும் அதிகரித்துள்ளது. அன்று குறிப்பிட்ட சதவீத பெண்களே வேலைக்குச் சென்றார்கள். இன்று எண்பது சதவீதப் பெண்கள் வேலைக்குச் செல்கின்றார்கள். அத்துடன் வீட்டு வேலையும் பார்க்கிறார்கள். அம்மா சும்மா இருக்கப்பிறந்தவள் அல்ல. சுமைகளைச் சுகமாகச் சுமக்கப்பிறந்தவள். எம்மைக்கட்டி அணைத்து தூங்கும் அவள், அன்னையல்ல, அவள்தான் தெய்வம் என்றுணர்வோம்.




as products are available in Star impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
Star Impex
Asia & Afro Großhandel
Franziusstrasse 150(Tor 3) - 44147 Dortmund Germany
e.mail:info@star-impex.de Tel: 0231 860 26 96



## நெடுந்தீவு முகிலனின்





பிரிந்து விடுவோம் என்று தெரிந்தால்
பிரியம் வைக்காதீர்கள் - பிறகு அதை
மறப்பதற்கு உயிரை விட வேண்டும்.

இனி நீ தேவை இல்லை என சொல்பவர்கள்
விலகுவதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கிறது.
உங்களிடத்திலான அவர்களின் தேவைகள் முடிந்து விட்டது.

பிடிக்கவில்லை என்றால் பொய்யாக நேசிக்காதீர்கள்.
அன்புக்கு ஏங்கிக் கொண்டிருப்பவர்களால்
ஏமாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாது.

யார் வெறுத்தாலோ விலகிப்போனாலோ - நீங்கள் நொந்து போகாதீர்கள்.
கிளை உடைந்தாலோ மரம் சாய்ந்தாலோ - சிறு குருவியே சிறகை நம்பி பறக்கிறது.

யாராவது உங்களை வெறுக்கிறார்கள் என
தெரிந்தால் நீங்களாகவே விலகிவிடுங்கள்.
அவர்கள் அதை வார்த்தைகளால்
வெளிப்படுத்தும்போது - உங்களால்
தாங்கிக்கொள்ள முடியாது



சுற்றி இருப்பவர்கள் தவறானவர்கள் என தெரிந்தால்
முடிவுகளை எடுப்பதற்கு தனிமையே தேடுங்கள்
தனிமைக்கு பதில் சொல்ல தெரியாது என்பதற்கு அல்ல
- பிழையான கருத்துகளை அது உங்களுக்கு திணிக்காது.

நமக்கு பிடித்தவர் பிழையான
ஒரு செயல் செய்யும் போது
அவரை நமக்கு பிடிக்காமல் போகிறது
இருந்தாலும்
இனி அவ்வாறு செய்யாதே
என கண்டித்தால்
அவருக்கே
நம்மை பிடிக்காமல் போகிறது.



அன்பை வாரி வழங்குவதில்
கொடை வள்ளலாக இருப்பீர்கள்
அதை நீங்கள் எதிர்பார்க்கும் போது
பிச்சை எடுப்பது போல் இருக்கும்


மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



Stuttgart நகரில்.....
Hanuman astrological Center
அனுமான்
ஜோதிட நிலையம்
பண்டிற் ராஜு
VISIT ONCE TO CHANGE YOUR LIFE
* தொழில்
* கல்வி
* வியாபாரம்
* திருமணம்
* உடல்நலம்
* வாஸ்து சாஸ்திரம்
* காதல் விவகாரம்
* குழந்தை பாக்கியம்
* நாம நட்சத்திரம்
* கண்திருஷ்டி கழித்தல்
* லக்ஷ்மி வசீகரம்
* தாம்பத்தியக் கோளாறு
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
கிழமை 7 நாட்களும் 09.மணி முதல் 20.00 மணி விரை வரலாம். பேசும் மொழிகள் தமிழ் ஆங்கிலம்
HANUMAN ASTROLOGICAL CENTRE
+49(0) 152 190 73899 +49(0) 151 2499 4882



Thushi -Deko

Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.Thiruselvam
உங்கள் தெரிவுகள் அனைத்தும்
எங்கள் கைவிருப்பில்.....

Christal mandapa
Set round
Rada Krishna Stage
and
Raja Gopuram



# மனைவி இல்லாட்டி மாதங்கியா?

ஒரு சகோதரியின் 6 வயது மகளுடன் அவளுக்கு பேனா வாங்கச் சென்றேன். அங்கே „இன்றுமுதல் புதிது: பெண்சிறுமிகளுக்கான பேனா“ என ஒரு பேனாவை விளம்பரப்படுத்தினர். இத்தனை காலம், பெண்கள் ஆண்களுக்கான பேனாவால் சாதனை படைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்!

அடுத்ததாய் சிறியவளுக்கு Shampoo வாங்கச்சென்றோம். அங்கே பெண்சிறுமிகளுக்கான Shampoo ரோசா நிறத்திலும், ஆண்குழந்தை களுக்கான Shampoo நீல நிறத்திலும் இருந்தது. பெண்சிறுமிகளிற்கென விளம்பரப்படுத்தப்பட்ட அந்த Shampoo வையே நான் கூட்டிவந்த சிறுமி நாடினாள். அதில் ஒரு இளவரசியாக இருக்கக்கூடிய பெண், தாழ்வு மனப்பான்மையுடன் நீலக்கண்ணால் அகலத்திறந்த நாணப் பார்வையாய் ஒரு சித்திரம். அவளின் மிக நீண்ட கூந்தலில் இளவரசிகளுக்கான Shampoo என குறிப்பிடப்படிருந்தது.

அதில் „கண்ணீர் வராமலே கூந்தலைக் கழுவிக்கொள்ளலாம்“ எனவும் எழுதியிருந்தது. அதே நிறுவனம், ஆண்குழந்தைகளுக்கும் ஒரு Shampoo வை விளம்பரம் செய்தது. அதில் கடல்வீரனின் சித்திரம் இருந்தது. அவன் மிக கம்பீரமாய், கோபமாய் வாளைநீட்டி எம்மைக் காணாததுபோல் தன் இலக்கை நோக்கினான். அதே வடிவம் கொண்ட கொள்கலனில், கண்ணீரைப்பற்றிக் கதை இல்லை. முடிகழுவும் பாட்டிலேயே பெண்குழந்தைகள் „கற்றுகோள்ள வேண்டிய“ நாணமும், பவ்வியமும், ஆண்குழந்தைகள் கற்றுகோள்ளவேண்டிய வைராக்கியமும், துணிவும், கண்ணீர்சிந்தா „ஆண்மையும்“ முடிகழுவும் வழியில் மூளைச் சலவை செய்யப்படுகின்றன.

சென்றவருடத்திலிருந்து தான் ஜேர்மனியில் மகப்பேற்றின் எண்ணிக்கை ஒரு குறுகிய அளவு அதிகரித்துள்ளது. அப்படி இருந்தாலும், வீட்டிற்கு வீடு ஆசியநாடுகளைவிட சிறுவர்கள் குறைவாகவே உள்ளன. இது பொருளாதாரத்திற்கு சேதமாகாமல் இருக்க, Marketing வல்லுனர்கள், அதாவது விளம்பரவல்லுனர்கள் ஆண், பெண்ணென சிறுவயதிலிருந்தே தீவிரமாகப் பிரித்து, கூடிய இலாபத்தை பெற்றுக்கொள்கின்றனர். ஜெண்டர்மார்கேட்டிங் (Gendermarketing) எனப் பெயர்பெறும் இது, ஒரே வீட்டில் வாழும் அக்காவுக்கும், தம்பிக்கும் ஒரே விளையாட்டுப்போருள் இரு நிறங்களில் வாங்கப்படுவதில் தெரியவருகிறது. இருவரும் ஒரே பொருளுடன் விளையாடமுடியாது, காரணம்: இது ஆணுக்கானது, அது பெண்ணுக்கானது. பொருளாதாரத்திற்கு வெற்றியாக இருக்ககூடிய இவற்றால், சிறுவர்களிடையே தவறான பாகுபாடுகளை நிலை நாடுகிறது.

இளவரசி நாணமாகப் பார்ப்பதும், கடல்வீரன் தன் இலக்கை நோக்கி வீரமாகப் பார்ப்பதும் சிறுமிகள் மனங்களிலே தாழ்வுமனப்பான்மையை கிருமிபோன்று உண்டாக்குகின்றன.

பெண்குழந்தைளிற்கான சூப் (Soup) „இளவரசி-சூப்பாக“ இருக்கும் போது, ஆண்குழந்தைகளின் சூப் „தீயணைப்புக்குளுசூப்பாக“ உள்ளது. (SWR 25.01.2019) ஆண்குழந்தைகளுக்கு தீயணைப்பாளி என்று உன்மையான, துணிகரமான தொழில்களை முன்வைத்து, பெண்குழந்தைகளின் சிந்தனை களை கற்பனைத்தொழில்களால் சிதைக்கின்றனர், சிறுவர்பாடசாலை களில் „நீ என்னவாக வரப்போகிராய்?“ என்று கேட்டால்: ஆண்குழந்தைகள் „போலிசார்“, „தீயணைப்புக்குளுவினர்“ என்று நிஜத்தொழில்களைக் கூற, பெண் குழந்தைகள் „தேவதை“, „இளவரசி“ „வண்ணாத்திப்பூச்சி“ என்று கனவுலகில் வாழ்வது தெரியவருகிறது. ஆண் இளைஞர்கள் சிறுவயதிலேயே தம் தொழிற்போக்கை முடிவுசெய்ய, பெண்கள் பள்ளி முடிந்ததும் என்ன செய்வது எனத் தெரியாமால் திணறிப்போகின்றனர்.



Ram Paramanthan

சிறு வயதிலேயே Genderrolesia அதாவது பாலுலகின் கதாப்பாத்திரங்களை ஊட்டிவந்த வினை இது. இழவரசிகள் ஆண்கள் தம்மை காப்பாற்றும் வரை இக்கட்டான நிலைமைகளில் சிக்கி இருக்கவேண்டியதுதான் யதார்த்தம் என்பதை விளம்பரக்கனவுகள் நியமித்துக்காட்டும் வழியில், சிறுவர் உள்ளங்களில் இவை பதிகின்றன. (SWR 25.01.2019)

இதனால் விளையாட்டுத்திடலில் இடம்பெறும் ஆண் / பெண் வீர வேறுபாடுகள் பாடசாலைகள் முதல் தொழிலிடங்கள் வரை நீடிக்கின்றன. ஆணழகன் தன் இழவரசியைக் காப்பாற்றும் எண்ணத்தில் பாலியல் தாக்குதல்கள் அலுவலகத்தில் தொடங்குகின்றன.

பெண்குழந்தைகளுக்குச் செய்யப்படும் ஆடைகள் வர வர செயல்முறைப் படுத்தக்கூடிய நிலைகளில் இல்லை. சிறுமிகளின் காற்சட்டைகள் அவர்களை ஏறிக்குதித்தோ, தாவி விளையாட அனுமதிக்கும் முறையில் தைக்கப் படுவதில்லை. சிறுவயதிலெயே கவர்ச்சியெனும் பாணியில், அவர்களை ஆண்குழந்தைகளுக்கு சமனாக விளையாடி, தம் எல்லைகளை அறிய விடுவதில்லை. உடற்பயிற்சிக்கான ஆடைகளை விளம்பரப்படுத்துகையில் ஆண்களின் ஆடைகளை உண்மையான வீரர்கள் விளையாடும் அட்டவணைகளைப் போட்டு விளம்பரப்படுத்தி, பெண்களின் ஆடைகளை விளையாடுவதுபோல் „போஸ்“ கொடுக்கும் பெண்களைவைத்து விளையாட்டு வீராங்கனைகளை காமப்படுத்தி கற்பனை செய்கின்றனர். ( Lean In Podcast 14.11.2018) விளம்பரத்தில் வரும் இளவரசியிலிருந்து , செய்திவாசிக்கும் பெண்கூட, அதிகூடிய கச்சிதத்துடன்தான் ஊடகங்களில் காட்டபடுகிறாள். இளம்பெண்கள் அதைக்கண்டு என்னிலையிலும் அழகாய், கச்சிதமாய் மாசு இலாது இருக்கவேண்டும் என்ற எண்னத்தை வளர்த்து, தம் கச்சிதத்தை கத்திமுனையில் பணையம் வைத்து எந்த வீரச்செயலுக்கும் இறங்கு வதில்லை. இதனால் புதிய தொழில்வாய்ப்புக்களையோ, புதிய வாழ்க்கைத்திருப்பங்களை நேர்கொள்ள சிறுவயதிலிருந்து பெண்மக்கள் தயங்குகின்றனர்.

இது வகுப்பறையில் படிப்பிப்போர் கேள்வி ஒன்றை கேட்டதும், ஆண்மாணவர்கள் மிக வேகாமாக பதிலளிப்பதும், பெண்மாணவிகள் பதில்களை பலமுறை யோசித்தே சொல்வதற்கும் காரணமாக இருக்கலாம் என வளர்ப்புமுறை அறிஞர்கள் கூறுகின்றனர்.

„மனைவி இல்லேனா, மாதங்கி!“ என்று ஒரு பெண்ணின் உள்ளடக்கத்தை கறித்தூளுக்கு சமனாக்கி, அவளை பழையபடி சமையலடிக்கு அனுப்புகிறது மார்க்கேட்டிங் (Marketing) உலகம்.

இத்தகைய சிக்கல்களை ஒன்றாக முடிவுகட்ட „Pink Stinks“ என்ற ஒரு பிரச்சாரத்தை Dr.Stevie Schmiedel எனும் கலாச்சாரவியலாளர் பல அறிஞர்களுடன் இணைந்து தொடங்கியுள்ளார். அகிலம்தழுவி, இதுவே Gendermarketing இற்கு எதிரான முதற்பிரச்சாரம். விளம்பரங்களில் தவறான பால் சம்மந்தப்பட்ட பாரபட்சங்களை இவர்கள் கண்டித்து, அதற்கான மாற்றுநோக்கங்களை எடுத்துக்காட்டுகின்றனர். இருந்தும் தனது மகளின் பிறந்த நாள் அன்று „உண்மையிலே உனக்கு Barbie பொம்மை வேண்டாமா?“ என்று காலில் விழுந்து கெஞ்சியதாக முன்னணிப்பெண்ணுரிமையாளர் Dr.Stevie Schmiedel கூறுகிறார். காரணம் சமுதாயத்தின் கட்டுப்பாடு களிலிருந்து விலகுவது என்றும் கடினமாகவே உள்ளது, ஆகவே எம் பெண்குழந்தைகளுக்கு என்ன சொல்வது? என்னோடு வந்த சிறுமிக்கு பெண்குழந்தைகளுக்கோ, ஆண்குழந்தைகளுக்கோ அல்லாது, குழந்தை களுக்கான பொருட்களையே கொள்வனவு செய்தேன். ரோசா நிறமும் இளவரிசியும் தான் உன் அடையாளம் அல்ல, தீயை அணைக்க நீயும் எழலாம் என அவளிடம் சொல்லிக்கொண்டேன்.



# பெண் விடுதலை ஆண்கள் கொடுக்கத் தேவையில்லை



சேவியர்




பறக்கலாமா ? என சிறகுகள் பறவையிடம் அனுமதி கேட்பதில்லை. வானம் விரிந்திருந்தால், தனது அழகிய சிறகுகளை விரித்து அவை வானில் எழும்புகின்றன.

நகரலாமா என நதி நிலத்திடன் அனுமதி கேட்பதில்லை. தன் ஈரப் பாதங்களினால் நிலத்தின் முதுகில் பாதை உருவாக்கி அவை இசையை விதைத்தபடி நகர்ந்து கொண்டே இருக்கின்றன.

வீசப் போகிறேன் என காற்று வானிடம் அனுமதி கேட்பதில்லை, உதிரவா என இலைகள் தரையிடம் அனுமதி கேட்பதில்லை, உதிக்கவா என கதிரவன் யாருக்கும் மனுபோடுவதில்லை. அதனதன் பணிகளை அதனதன் பாணியில் அவை செய்து கொண்டே இருக்கின்றன.

இயற்கையின் விதியில் ஒவ்வொன்றும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன, எதற்கும் தயங்கிக் கொண்டே இருப்பதில்லை. அவரவர் பணிகளை அவரவர் செய்வதே இயற்கையின் விதி. அவரவர் இயல்புக்கேற்ப அவரவர் செயல்படுவதே இறைவன் வகுத்த நியதி.

இந்த விதிகளின் பாதையில் தடைக்கற்களாகவும், வேகத் தடைகளாகவும் வந்து நிற்பவை எல்லாமே மனிதனின் விதிமுறைகளே. இயற்கை வகுத்த சட்டங்கள் பொதுமையைப் போதித்தது, அதை சுயநலச் சுருக்குக்குள் இறுக்க நினைத்தான் மனிதன். இறைவன் கொடுத்த வாழ்க்கை சமத்துவத்தைப் போதித்தது மனிதன் சமத்துவம் உடைக்க புது விதிகளை வகுத்தான்.

மனித விதிகளே பாகுபாடுகளை உருவாக்கியது. மனித விதிகளே வேறு பாடுகளை உருவாக்கியது. மனித விதிகளே உலக சமநிலைக்கு உலை வைத்தது.

கர்வத்தை மனிதன் தலையில் அணியத் துவங்கியபோது, சமத்துவச் சங்கிலி உடைபடத் துவங்கியது. சமமாய் இருப்பது சரியல்ல என மனிதன் நினைத்தபோது தன்னை உயர்வாய்க் காட்ட விரும்பினான். சிறிய கோட்டைப் பெரிதாய்க் காட்ட, அதனருகில் இருப்பதை விடச் சிறிய கோடொன்றை இழுத்தால்போதும். அதையே மனிதன் செய்தான்.

தன்னை விட பிறரை தாழ்வானவர் என்றான். தனக்கு மட்டுமே சொர்க்கத்தைத் திறக்கும் சாவி உண்டு என்றான். நான் திறந்தால் மட்டுமே வானத்தின் கதவுகள் திறக்கும் என்றான். பொய்களின் மூட்டைகளை அவன் இறைவனின் தலையில் சுமத்தினான். கடைசியில் இறைவனையும் தரையில் இருத்தினான்.

இருப்பதை ஏற்றுக் கொள்ளாத மனிதன், கொடுப்பதைப் பெற்றுக் கொள் என சமூகத்தை நிர்ப்பந்தித்தான்.

தனது பயணத்தின் பாதையை சற்றே திருப்பிய மனுக்குலக் கப்பல் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தபின் இலக்கை விட்டு எங்கேயோ சென்று விட்டது.

இறைவன் அன்பினால் உலகைப் படைக்க நினைத்தார். மனிதன் தனக்கென உலகைப் பிரிக்க நினைத்தான். இறைவன், இயற்கையால் உலகை அலங்கரிக்க நினைத்தார். மனிதன் இயற்கையின் விதிகளை மாற்றியமைத்தான்.

தன்னிடம் அனுமதி கேட்கவேண்டுமென மனிதன் சட்டங்களை உருவாக்கியபோது மனுக்குலம் மாண்பிழந்தது.

இறைவன் ஆணையும் பெண்ணையும் சமமாய்ப் படைத்தார். இருவரையும் இணையாய்ப் படைத்தார். துணையாய்ப் படைத்தார். மனிதனோ பெண்ணை தன்னை விடக் கீழானவளாய் வைத்துக் கொண்டான்.

பெண்ணுக்கு வலிமையில்லை என தன்னம்பிக்கையை உடைத்தான். "முறத்தால் கூட புலியை விரட்டிய" வீர வரலாறுகளைப் புரட்ட மறுத்தான்.

பெண்ணுக்கு தலைமைத்துவமில்லை என பிரகடனம் செய்தான். பெண்களே கடவுளர்களாய் இருக்கும் கதைகளை நினைக்க மறுத்தான்.

பெண்ணுக்கு பாதுகாப்பில்லை என்றான். பாதுகாப்பற்ற சூழலை அவனே உருவாக்கினான்.
இப்படி பெண்மைக்கு எதிரான மதில்சுவரை படிப்படியாகக் கட்டியெழுப்பிழுப்பி பெண்மையை ஆண்களின் காவலில் வைத்தான். வெளியேற இயலாத பூட்டுகளால் இணைத்தான்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்

Schalksmühle (Lüdenscheid ) Germany

**Restaurant வேலைக்கு ஆட்கள்தேவை**

**உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை!**

Restaurant Fair Way
Gelstern 2
58579 Schalksmühle

Fairway by Suren
Restaurant im GC-Gelstern

உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை!
Restaurant வேலைக்கு உடன் தொடர்பு கொள்ளவும்
முழுநேர (Full time job) பகுதி நேர (Part time job) வேலைக்கு உடன் ஆட்கள் தேவை. பகுதி நேர வேலைக்கு மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம். Schalksmühle (Lüdenscheid ) நகரத்தைச் சுற்றி 20 கி.மீற்றர் தூரத்தில் இருந்தும் வேலைக்குவரமுடியும்.

தொடர்புகளுக்கு:Tel: 0152-18693895



20ம் பக்கத் தொடர்ச்சி...

**பெண் விடுதலை ஆண்கள் கொடுக்கத் தேவையில்லை**



காலம் தனது கால்களினால் தலைமுறைகளைத் தாண்டித் தாண்டி ஓடியது. பெண்கள் ஆண்களை விட தாழ்ந்தவர்கள் எனும் சிந்தனை எங்கும் எழுதப்பட்டது. அது படிப்படியாய், எழுதப்பட்ட விதியானது. வலிந்து எழுதப்பட்ட புனைவுகள் பெண்களின் புனிதத்தை ஆண்களின் அதிகாரத்துக்குக் கீழே அமைத்தது.

பெண்களும் நம்பினார்கள். கூண்டுக்குள் அடைக்கப்பட்ட சிங்கம் கர்ஜிக்க மறந்ததைப் போல ஆனார்கள். கூண்டுகளின் அனுமதியில்லாமல் கர்ஜிக்கக் கூடாது என கற்பித்துக் கொண்டார்கள். பிடரி சிலிர்க்க வேண்டுமென்றால் கூட வேறு பிறவி எடுக்கவேண்டும் என நினைத்தார்கள்.

வலைகளுக்குள் இருக்கிறது என்பதற்காக பறவைகள் புழுக்களாவதில்லை. அணைகளுக்குள் இருக்கிறது என்பதற்காக தண்ணீர் உறைந்து போவதில்லை.
பெண்மை சிறகு விரிக்கும் காலம் இது. டிஜிடல் யுகத்தின் நவீனக் கதவுகளுக்கு பழமையின் துருக்கள் பொருட்டல்ல. உலகின் எல்லைகளெல்லாம் உள்ளங்கைக்குள் உறைந்து கிடக்கும் நிலையில் தீண்டாமையின் திமிர்த்தனங்கள் தேவையில்லை.

பெண்மையின் வாழ்க்கை அனுமதிக் கதவுகளைத் தட்டுவதற்கானதல்ல, உரிமைக் கதவுகளை திறப்பதற்கானது. வாய்ப்புகளின் ஏணிகளைக் கண்டறிந்து வலிமையாய்ப் பற்றிக் கொள்வதில் அமைந்திருக்கிறது பெண்மையின் வெற்றி.

பெண்களுக்கான வாழ்க்கை பெண்களிடமே இருக்கிறது. பெண்களின் வாழ்க்கைக்கான திறவுகோல்களும் பெண்களிடமே இருக்கின்றன. எதிர்ப்புகளின் குரலொலியில் அடங்கிவிடாத மனம் மட்டுமே அவர்களுக்குத் தேவை. மறுப்புகளின் பேரொலியில் மிரண்டு விடாத குணம் மட்டுமே தேவை.

அந்த வலிமை இருந்தால் போதும். யாரிடமும் விடுதலை கேட்க, பெண்மை அடிமையாய் இல்லை. யாரிடமும் அனுமதி கேட்க பெண்மை யாரின் தயவிலும் இல்லை. பெண்களின் உரிமை என்பது புதிதாய்க் கொடுப்பதல்ல. பிடுங்கியதை திருப்பியெடுப்பது.

ஆண்களின் எதிர்ப்பு அச்சத்தின் பிரதிபலிப்புகள். பெண்களின் வளர்ச்சியும், அங்கீகாரமும் தங்களை விட அதிகமாய் இருந்துவிடுமோ எனும் அச்சத்தின் பிள்ளை. தன்னைத் தாண்டிச் சென்று விடுவார்களோ எனும் பதட்டத்தின் படிக்கட்டுகளில் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். எனவே தான் தங்களுக்குப் பின்னால் பெண்கள் தங்கிவிட வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.




இது புதுமைக் காலம்.

இங்கே உடல் வலிமையை விட மன வலிமையே வெற்றிகளைக் குவிக்கும். கடின இதயங்களை விட மென்மையான இதயங்களே வலிமையாய் உருவெடுக்கும். ஆயுதங்களை விட ஆளுமையே வெற்றிகளாய் மாறும். இந்த சூழல் பெண்களின் உலகத்துக்கான கதவுகளை அகலத் திறந்திருக்கிறது.

இனிமேல் யாருடைய அனுமதிகளுக்கும் காத்திருக்கத் தேவையில்லை. இனிமேல் யாருடைய அங்கீகாரங்களுக்கும் மனு கொடுக்கத் தேவையில்லை. பெண் விடுதலை என்பது பெறுவதல்ல, ஏற்கனவே இருப்பது. பெண் விடுதலை என்பது ஆண்கள் கொடுப்பதல்ல, பெண்கள் எடுப்பது.

பெண் விடுதலை என்பது தனது சிறகுகளை நம்பும் பறவையின் பயணம். பெண் விடுதலை என்பது தன் துடுப்புகளை நம்பும் மீன்கள் பயணம். இல்லாததைப் பெறுதலல்ல இது, இருப்பதை இயக்குதலே.

பெண்விடுதலையின் சாசனம் எழுதப்பட வேண்டியது சட்டத்தின் பக்கங்களிலல்ல, பெண்மையின் இதயங்களில். காரணம் பெண்விடுதலை, ஆண்கள் கொடுக்கத் தேவையில்லை.

ஆண்கள் பெண்களுக்கு விடுதலை கொடுக்கத் தேவையில்லை. கொடுத்து வாங்க இது ஒன்றும் தயவல்ல, பெண்மையின் உரிமை. பெண்களாகவே எடுத்துக் கொள்ள வேண்டியது.

எடுக்க நினைக்கும் பெண்களைத் தடுக்க நினைக்கும் ஆண்கள் தான் பெண்ணினத்தின் எதிரிகள். மீண்டும் சொல்கிறேன், பெண்களுக்கான விடுதலையை ஆண்கள் கொடுக்கத் தேவையில்லை, பெண்களை ஒடுக்காமல் இருந்தாலே போதும்.






## திடீர்புத்தர் சிலைகள்

3ம் பக்கத்தொடர்ச்சி….




தொல்பொருள் திணைக்களம் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. அதனால், மாகாண சபை அதில் தலையிட முடியாது. காணி அதிகாரமும் மத்திய அரசிடமே உள்ளது. இருந்தபோதிலும் கூட, இதில் அத்துமீறல்கள் பல உள்ளன. ஒரு பகுதியில் பௌத்த அடையாளங்கள் காணப்படுவதாகச் சொல்லப்பட்டால், அந்தப் பகுதியைப் பாதுகாப்பதற்கும், மேலதிக ஆய்வுகளை முன்னெடுப்பதற்குமான அதிகாரம் மட்டுமே தொல்பொருள் திணைக்களத்துக்கு உள்ளது. அதில் புதிதான புத்தர் சிலைகள், விகாரைகளை அமைப்பதற்கான அதிகாரம் தொல்பொருள் திணைக் களத்துக்கு இல்லை.

பௌத்த சின்னங்கள் காணப்படுவதாக தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காணப்படும்போது, அது உடனடியாக சிங்கள பௌத்தர்களின் பாரம்பரிய வாழ்விடங்களாகத் திரிவுபடுத்தப்படுகின்றது. இவ்வாறு திரிவுபடுத்துவதன் மூலம், தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்த முற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தொல்பொருள் திணைக்களம் மேற்கொள்ள வேண்டிய ஆய்வில், பிக்குகளும், இராணுவ அதிகாரிகளும் சம்பந்தப்படுவது கூட, இவற்றின் பின்னணி குறித்த சந்தேகங்களைத்தான் ஏற்படுத்துகின்றது.

தொல்பொருள் திணைக்களத்தில் தகுதிவாய்ந்த தமிழ் தொல்பொருளாளர்கள் யாரும் இல்லாத நிலையில், இன,மத பேதமற்ற முறையில் செயற்ப வேண்டிய திணைக்களம் முற்றுமுழுதாக இனவாத அடிப்படையிலேயே செயற்படுவதை காண முடிகின்றது. இதனால், ஒரு பகுதியில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டதாகக் காணப்பட்டால், புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு விகாரைகளும் கட்டப்பட்டு அதற்குப் பொறுப்பாக சில பிக்குகள் நியமிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு நியமிக்கப்படும் பிக்குகளுக்கே அந்த விகாரைகளும், அந்தப் பகுதியும் சொந்தமாக்கப்படும் வழமை உள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில், அமைச்சர் மனோ கணேசன் இந்த ஆக்கிரமிப்பின் பின்னணியை வெளிப்படுத்தியிருக்கின்றார். "தொல் பொருளாராய்ச்சி திணைக்களத்தில் உருப்படியான தமிழ் தொல்பொருள் ஆய்வாராட்சியாளர் கிடையாது. வடக்கு கிழக்கில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் புத்தர் சிலை வைக்க வழி செய்கிறீர்கள். உங்களுக்கு தமிழ் பௌத்தர்களை பற்றி தெரியுமா? இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கு கிழக்கிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த சமயத்தை தழுவி இருந்தார்கள். இன்று நீங்கள் வடக்கு கிழக்கில் எங்கேயாவது பௌத்த சின்னங்களை காணுவீர்கள் என்றால் அது, தமிழ் பௌத்த சின்னங்கள். அதை சிங்கள பௌத்த சின்னங்கள் என்று கூறி அத்துமீறிய குடியேற்றம் செய்கிறீர்கள். அடாத்தாக பௌத்த தேரர்களை அழைத்து சென்று புதிய விகாரைகளை கட்ட உதவுகிறீர்கள்" என தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் மண்டாவெலவிடம் மனோ கணேசன் கேள்விகளை எழுப்பியிருக்கின்றார்.

இதேபோல திருமலை மாவட்டத்தில் தென்னமரவாடி பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பில் சுமந்திரன் கேள்விகளை எழுப்பியிருந்தார். "திருகோணமலையில் பொலிசாரின் நேரடி ஆதரவுடனேயே திருகோணமலை தென்னமவராடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. அந்த சிலை வைப்புக்கு தொல்பொருளாராய்ச்சி திணைக்களம் துணை செய்கிறது.

இதை நாம் அனுமதிக்க முடியாது. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் சமயத்தில் எப்படி ஒரு பௌத்த தேரர் அங்கே புத்தர் சிலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்?" சுமந்திரன், தொல்பொருளாராய்ச்சி திணைக்கள பணிப்பாளர் நாயகம், திருகோணமலை பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த இருவரது கேள்விகளுக்கும் அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

போரில்லை. திட்டமிட்ட முறையிலான சிங்களக் குடியேற்றங்கள் இல்லை எனச் சொல்லிக்கொண்டு, இவ்வாறு புதிய உபாயத்துடனான நில ஆக்கிரமிப்பை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. அரசியல் தீர்வு வரும், புதிய அரசியலமைப்பு வரும், ஜெனீவாவில் அரசுக்கு நெருக்கடி என்றெல்லாம் நாம் ஒரு பக்கம் சொல்லிக்கொண்டிருக்க எமது தாயகத்தை ஆக்கிரமிப்பதற்கான புதிய - புதிய உபாயங்களுடன் அரசாங்கம் களமிறங்கிக்கொண்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் அண்மைக்காலத்தில் மட்டும் ஆறு இடங்கள் இவ்வாறு தொல்பொருள் பகுதிகளாக இனங்காணப்பட்டு புத்தர் சிலைகள் - விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இவ்வாறு 117 இடங்கள் பொத்த சின்னங்கள் காணப்படும் இடங்களாக தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஆக, ஆபத்து தலைக்கு மேல் தொங்கிக்கொண்டுதான் இருக்கின்றது.



# மங்கையராக பிறந்திடவே
# நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா !



## தனசேகர் பிரபாகரன்

அடிப்பதும் அணைப்பதும் அறமாய் நிலைப்பதும் பெண்ணினமே. மனம் சோர்ந்த போதும், தயக்கத்தில் தடுமாறிய போதும் கருணை முகத்தால் அஞ்சேலென ஆறுதல் அளிக்க ஒரு பெண்ணால் மட்டுமே முடியும், மென்மையும் காருண்யமும் பெண்களுக்கே அணியாய்விளங்கும் ஆபரணங்கள் !

தாய், தங்கை, தோழி இவர்கள் அருகில் இருக்கும் போது அவர்களின் அருமையை நாம் அறிவதில்லை, அறுசுவை உண்டி அடுக்களையில் சமைத்து வழிய
நெய்யிட்டு அம்மை தரும் உணவை உதாசீன படுத்திய நாட்கள் அரைவேக்காட்டு சோறு உண்ணும்போது ஏங்க வைக்கிறது. வாயாடி வார்த்தைகளால் மொய்க்கும் தங்கை, அவளைவிட்டு வேறெங்கோ தனியறையில் அமர்திருக்கும் போது காதுகள் நம்மை சாடுகின்றன !

கதை சொல்லியே வளர்த்து விட்ட மூதாட்டி, இற்றைக்கு கதை கேட்கவும் சொல்லவும் யாருமில்லை!
பெண்களே தெய்வங்களாகி நடமாடும் இடம் நம் நாடு, இங்கு பெண் தெய்வங்களுக்கு பஞ்சமே இல்லை. நதிகளெல்லாம் பெண்களே ! எழுத்தறிவிக்கும் கலைமகளும் ! தமிழரின் கானுறை தெய்வமாம் கொற்றவையும் பெண்ணே !
இப்படி நம்மில் ஊடே நடமாடி தெய்வமாய் நிற்கும் பெண்கள் ஏராளம். தமிழ்த்தாய்மார்களின் வீரக்கதைகளை படிக்க நீங்கள் சற்றே சங்க இலக்கியங்களை புரட்டவேண்டும்.
தமிழ் இலக்கியம் என்றாலே முகம் சுளிக்கும் பலர் இந்த ஒரு பாட்டை படித்தாலே போதும், மனதை பறிகொடுத்து வீறு கொள்வர், இதில் ஐயமில்லை.
இதைப் படித்தால் பூனையும் புலியாகுமன்றோ ?
கோழையும் வீரன் ஆவான்...!

பல நாட்கள் தவமிருந்து பெற்ற பிள்ளை,குலத்தின் விளக்கென எஞ்சியிருக்கும் ஒரே பிள்ளை,பல வருடம் கழித்து பிறந்த பிள்ளை,அந்நேரம் பார்த்து நாட்டிலே போர் ! இவள் குலமே போரில் வீர மரணம் அடைவதை பீடாக கருதும் தமிழ்க்குலம். வீட்டிற்கொருவர் நாட்டை காப்பாற்ற வேண்டுமல்லவா ? வீரம் செறிந்த குலத்தில் பிறந்த அந்த தாய், பாலகனை அழைத்து கையிலே வேல் கொடுத்து போர்க்களம் அனுப்பினாள்.

முதல் நாள் போர் முடிவில் பலர் சொல்லும் செய்திகள் இவளை தூக்கி வாரிப்போட்டது. மகன் எங்கே மகன் எங்கே என்று போருக்குச் சென்று திரும்பி வந்தவர்களை கேட்டாள் அந்தத் தாய், ஒரு வீரன் சொன்னான் ”அம்மா உமக்கு அறிவு இருக்கிறதா ? பாலகனை போருக்கு அனுப்பினாயே அவன் சிறுபிள்ளை பயந்து ஓடியிருப்பான்” என்றான்.இதோ புறநானூற்றில் காக்கை பாடினியின் இந்த உடல் சிலிர்க்கும் வரிகள்

நரம்புஎழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படைஅழிந்து மாறினன்” என்று பலர் கூற,
“மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்டஎன்
முலைஅறுத் திடுவென், யான்' எனச் சினைஇக்,
கொண்ட வாளடு படுபிணம் பெயராச்,
செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!

நரம்பு வெளியே தெரியும் அளவு வற்றிய தோளினையும், தாமரை இல்லை போன்ற ஒட்டிய வயிற்றையும் உடைய அந்த வயதான பெண் தன் மகன் போரில் புறமுதுகிட்டு இறந்தான் என்று பலர் கூறக் கேட்டு, மகன் இறந்ததிற்கு வருந்தவில்லை மாறாக அதைக் கேட்ட அத்தாய், தீவிரமாக நடைபெற்ற போரைக்கண்டு அஞ்சி என் மகன் தோற்றோடி இறந்தது உண்மையானால், அவன் பால் உண்ட என் நெஞ்சினை அறுத்திடுவேன் என்று சூளுரைத்து !

தள்ளாத வயதிலும் கையில் தீவர்த்தியுடன் போர்க்களம் சென்று, அங்கே, குருதி தோய்ந்த போர்க்களத்தில், கீழே விழுந்து கிடந்த பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துத், தன் மகனின் உடலைத் தேடினாள். சிதைந்து பலதுண்டுகளாகிய விழுப்புண்பட்ட அவன் உடலைக் கண்டு தன் மகன் நெஞ்சில் அடிபட்டு இறந்ததை கண்டு, அவனைப் பெற்ற பொழுது அடைந்ததைவிட பெருமகிழ்ச்சி அடைந்தாள் !
தமிழ்ச்சமூகம் இன்றும் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறது என்றால் அதற்கு கட்டாயம் அவளைப்போன்ற எண்ணற்ற தமிழ்த்தாய்மார்களின் அன்பும் வீரமும் தியாகமுமே காரணம் ! பெண்பிறவி அத்துணை சாதாரண பிறவியா ? அல்லவே. கவிமணி சொல்லுவார் ”மங்கையராக பிறந்திடவே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா”




**சிவராத்திரி தினத்தில் 04.03.2019**
**சிவத்தமிழ் வழங்கும்**
**சிறப்பு நிகழ்ச்சி**
ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம் சுவெற்றா
சாந்தநாயகிசமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்
(சிவன் கோவில்) டோட்மூண்ட்
**சைவப்பிரசங்கம்**
**வெண்திரையில்**
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி ஆறு.திருமுருகன்
மற்றும் கம்போடியா
ஆற்றில் ஆயிரம்.சிவலிங்கங்கள்.


கலாநிதி
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா
அப்பாக்குட்டி


கலாநிதி
ஆறு.திருமுருகன்




அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்





அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்

# குழந்தையும் தெய்வமும்

-மாதவி



குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. தெய்வீக குணம் படைத்த குழந்தைகள் தெய்வீக கலையாம் பரதம் தன்னில் பிஞ்சுப்பாதங்கள் தடம் பதிக்கும் வேளை பரதம் பரவசம் அடையும்






Nantha Foto

குழந்தைகள் செய்யும் அபிநயம் என்றுமே அழகுதான். இந்த அழகை நெறிப்படுத்தி, அதேவேளை அவர்களை அவர்களாகவே நடனமாட வைத்தது சிறப்பாகும். யேர்மனியில் கடந்த பொங்கல் விழாக்களிலே இந்தச் சுட்டிகளின் நடனங்கள் பெரும் அட்டகாசமாக இருந்தது. தாயகத்தில் நடனப் பாடசாலைகளிலும்சரி ஊரிலும் சரி குழந்தைகளுக்கு பஞ்சமில்லை. அங்கு விழாக்களில் 200 க்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரே மேடையில் நடனம் புரியலாம். ஒரு முறை கண்ணன் பாட்டிற்கு 200 குழந்தைகளில் ஒரு குழந்தையை தெரிவு செய்ய, மற்ற 199 குழந்தைகளும் மனம் நொந்து நிற்க, இதனை அவதானித்த நடன ஆசிரியை 200 குழந்தைகளையுமே நீங்கள் எல்லோருமே கண்ணன்தான் என்று எல்லோருக்கும் கண்ணன் வேடமிட்டு மேடையேற்றியதையும் அவர்கள் அடைந்த மகிழ்வையும் நேரில் தாய்மண்ணில் பார்த்திருக்கின்றேன்.

ஆனால் புலம்பெயர்ந்து யேர்மனியில் வாழும் நம் குடும்பங்களில் குழந்தைகள் எண்ணிக்கையில் மிகக் குறைவு. ஒன்று இரண்டு அதற்குமேல் எண்ணத்தோன்றாது. இப்படியான நிலையில் 20 க்கு மேற்பட்ட குழந்தைகளை மேடையேற்றுவது இங்கு அந்த 200 குழந்தைகளுக்கு சமம்.

பிலபெல்ட் நகரில் நடந்த பொங்கல் விழாவில் நடன ஆசிரியை கலாஜோதி சாமினா போல் அவர்கள் குழந்தைகளை வைத்து அழகான நடனத்தை தந்திருந்தார். தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விப்பது கலை. இதனை சிறப்பாகச் செய்தது அந்த நடனம். மாணவர்களோடு ஆசிரியையும் ஆடிப்பாட என்தவம் செய்தனையோ யசோதா அவர்களைக் கேட்கத்தோன்றுகின்றது.

இந்த நடனத்தை கோபியருடனும் கண்ணனுடனும் ஆட பயிற்சிகொடுத்த தரணம் முதல் மேையில் அரங்கேறும் கணம் வரை மனம் கோகுலத்தில் சஞ்சரித்திருக்கும் என்பது திண்ணம். ஆசிரியைக்கும் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பாராட்டுக்கள்.

# ஆண்டவனை பிஞ்சுக் குழந்தைகள் அரங்கிற்கே அழைத்து வந்த அற்புத நடனம்.



வுப்பெற்றால் நகரில் நவதுர்க்கா ஆலயம் வழங்கிய பொங்கல் விழாவில் கலாஜோதி செல்வி கார்த்திகா ஈஸ்வரலிங்கம் அவர்கள், 25 மாணவர்களை வைத்து கந்தசஷ்டி கவசத்துடன், மேலும் நான்கு பாடல்களை இதமாகக் கலந்து, பிஞ்சுக் குழந்தைகள் செய்த நடனம், பார்ப்பவர் மனங்களை கசிந்து கண்ணீர்மல்க வைத்து விட்டது.

-ஜெய.சக்தி




கலாஜோதி செல்வி கார்த்திகா ஈஸ்வரலிங்கம்

**வுப்பெற்றால் நகரில் நவதுர்க்கா ஆலயம் வழங்கிய பொங்கல் விழா**

அது மட்டுமன்றி பார்வையாளர்களை இருக்கையை விட்டு எழுந்து நின்று, கைகூப்பி வணங்கவும் செய்துவிட்டது. இது தெய்வீக கலை. குழந்தைகள் மூலம் பரதத்தின் புனிதம் அங்கு போற்றப்பட்டது,பேணப்பட்டது.

குழந்தைகளின் அசைவுகள் இயல்பாகவே அபிநயம்போல்தான் இருக்கும். அந்த அபிநயங்கள் படர கொடி ஒன்று கொடுத்தால் போல், ஆசிரியை அற்புதமான பாடல்களைத் தெரிவுசெய்து, அதற்கு ஏற்ற அபிநயங்களை குழந்தைகள் மூலம் அள்ளித் தெளித்து மகிழ்ந்துள்ளார். தாம் பெற்ற இன்பம் வையகம் பெற குழந்தைகளும் இசைந்து மகிழ்ந்து ஆடியுள்ளனர்.

ஆண்டவனை பிஞ்சுக் குழந்தைகள் அரங்கிற்கே அழைத்து வந்த அற்புத நடனம். மீண்டும் பிஞ்சுப்பாதங்கள் பரதம் சொல்ல குருவான ஆசிரியர் பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றியும் பாராட்டுதலும்.







Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€89
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£/€69
13 மாதங்கள்
60க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
SUN
JAYA TV HD
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ் திரைப்படங்கள்
+
EROS NOW
4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்
BAJIRAO MASTANI
Ki & Ka
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download TV episodes to watch on the go without using data
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி
* Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THERE-OF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

# நீ பாதி நான் பாதி கண்ணே!




**-சுருதி**

நான் ஒரு சங்கத்தில் பொருளாளராக இருந்தேன். எமது கலைவிழா நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தமுறை நுழைவுச்சீட்டு நிகழ்ச்சியாக வைத்திருந்தோம். நாடகம், குறும்திரைப்படம், கவிதை அரங்கு, நாட்டுக்கூத்து, தென்னிந்தியாவிலிருந்து திரைப்பட நடிகர்கள், பாடகர்கள் என ஒரு அமர்க்களமாக இருப்பதால் நுழைவுச்சீட்டுகளை தனிநபருக்கு 40 டொலர்கள் எனவும், குடும்பத்திற்கு 80 டொலர்கள் எனவும் போட்டிருந்தோம்.

ரிக்கெற் விற்பனை வேட்டையில் ஒரு மார்க்கமாகச் சுற்றித் திரிந்தேன். என்னைக் கண்டு ஆக்கள் கண்மண் தெரியாமல் ஓடத் தொடங்கினார்கள். என்னுடன் படித்த சக நண்பர்கள் சிலர் இங்கிருக்கின்றார்கள். அவர்களிடமிருந்து முதலில் ஆரம்பிப்போம் என்ற நினைப்பில் நண்பன் சிவபாலனைத் தேடி 'வொடங்கா' என்னுமிடம் நோக்கிச் சென்றேன். மெல்பேர்னில் இருந்து மூன்றரை மணி நேரப் பயணம். ரிக்கெற் விற்க வருகின்றேன் என்று சொல்லாமல், "ஒரு சந்திப்பு மச்சான்! கனநாள் காணேல்லைத்தானே... நீயும் தனிய இருக்கிறாய்..."

"தனிய வாறாயோ... குடும்பமா வாறாயோ...? ஏன் கேட்கிறன் எண்டால் என்ரை சமையல் சாப்பாடு அப்பிடி இப்பிடி.... அதுதான்" அவுக் என்று கேட்டான் சிவபாலன்.

"குடும்பமாத்தான் வாறன். உன்னட்டை வாறதெண்டால் ஒருநாள் பயணம். நான் சாப்பாடு செய்துகொண்டே வாறேனே! உனக்கும் சேர்த்து..."

கடந்த வருடம் சிவபாலன் எனக்கொரு அதிஸ்டலாபச் சீட்டு 25 டொலருக்கு வித்திருந்தான். அதிஸ்டம் விழுந்திருந்தால் இப்ப இந்தச்சங்கப் பொருளாளராக இருந்திருப்பேனா?
நண்பனைக் கண்டு, குசலம் விசாரித்து, உண்டு மகிழ்ந்தபின் "எப்பவடா கலியாணம் செய்யப் போறாய்?" என்றேன்.
"அது அதுக்குக் கொடுப்பினை வேண்டும். காசு சேர்க்க வேணும். பெம்பிளை ஸ்லிம்மா வடிவா இருக்க வேணும். வேலை செய்ய வேணும். சீதனம் எக்கச்சக்கமா தர வேணும்..." அடுக்கிக் கொண்டே போனான் சிவபாலன்.

நான் சங்கத்தில் இருப்பதும், கதை கட்டுரை கவிதை எழுதுவதும் அவனுக்குத் தெரியும். இருப்பினும் அவை பற்றி ஒரு மூச்சு... கதைக்க மாட்டான். அவை எல்லாம் ஏதோ தனக்குச் சம்பந்தம் இல்லாதவை என்பதுபோல இருந்துவிடுவான்.

ஒரு மாதிரி மகிழ்வாக இருக்கும் தருணத்தில் ரிக்கெற்றை எடுத்து நீட்டினேன். பாம்பு படமெடுத்துக் கொத்த வந்தது போல் பின் வாங்கினான். பலாத்காரமாக அவனது கைகளுக்குள் திணித்தேன். நுழைவுச் சீட்டைப் பார்த்தான். 40 டொலர்கள். பதறிப் போனான்.

"இதென்ன மச்சான். ரூ மச்!"

'நான் 25 டொலருக்கு அதிஸ்டலாபச் சீட்டுத் தந்தேன். நீயும் 25 டொலருக்குத்தான் தரல் வேண்டும்' என்பது போன்ற பார்வை அது. அப்படித்தான் அவன்.

"காசு தர வேண்டாம். வைச்சிரு. புறோகிறாமுக்கு வா" நான் சொன்னேன்.

"மச்சான்! இரண்டு நாளைக்கு முதல் எங்களோடை படிச்சான் குகதாசன், ரெலிபோன் எடுத்தவன். உவன் கரன் ரிக்கெற் வித்துக்கொண்டு திரிகிறானாம்... உன்னட்டை ஏதேனும் கேட்டவனோ எண்டு என்னைக் கேட்டான். நான் நினைச்சனான் நீ வரேக்கையே! சோழியன் குடும்பி சும்மா ஆடாதெண்டு.... பொறு அவனுக்கொரு கோல் போட்டுக் கதைச்சுப் போட்டு வாறன்"
வீட்டுக்குள்ளே போய் அவனுடன் குசுகுசுப்புச் செய்தான் சிவபாலன்.

"சரி மச்சான். இந்தா பிடி 40 டொலரையும். நீ ஒண்டும் எனக்கு ஃபிறீயாத் தர வேண்டாம். நானும் குகதாசனும் ஆளுக்குப் பாதி பாதி போட்டு ரிக்கெற் எடுக்கின்றோம். நான் அவனிட்டை அவன்ரை பங்கை வாங்கித் தொலைக்கிறன்" சொல்லிக் கொண்டே என் கைகளுக்குள் 40 டொலர்களையும் திணித்தான்.

"இதென்னடா ஒரே குழப்பமா இருக்கு. ஒரு ஆள் தானேடா ஒரு ரிக்கற்றுக்கு வரலாம்?"

சிவபாலன் கெக்கட்டம் போட்டுச் சிரிச்சான்.

"மச்சான்... நாங்கள் இரண்டு பேருமே புறோகிறாமுக்கு வரமாட்டோம்." சொல்லிவிட்டு திரும்பவும் சிரித்தான். இந்தத் தடவை சிரிப்பு வேறு மாதிரி இருந்தது.

"இந்தா பிடி உன்ரை காசை. ரிக்கெற்றும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம். வந்தா வா... வராட்டிப் போ. ஒண்டு சொல்லுறன் கேள்... உவன் குகதாசனும் இன்னும் கலியாணம் செய்யேல்லைத்தானே! இரண்டு பேருமா 'ஒரு வடிவான' ஸ்லிம்மான சீதனம் கொண்டுவாற வேலை செய்யுற பெம்பிளையாப் பாத்து கலியாணத்தைக் கட்டுங்கோ. நீ பாதி.... அவன் பாதி..."





## நாட்டைக்காத்த நாய்க்கு ஓய்வின் போது மரணம் பரிசாக வழங்கப்படுகின்றது.

நாட்டைக்காத்த நாய், வீட்டைக்காத்த நாய், பதவி இழந்தபின் பரிதவித்து இறக்கின்றன! நன்றி கெட்ட மனிதா! நாய்க்கு நலமெடுப்பதிலும் குறிசுடுவதிலும் ஆரம்பித்தது உன் வன்மம். தன் வீட்டு நாயை தானே பிறர் வீட்டுக்கு அழைத்துச்சென்று அங்குவைத்து சுடச்சுட கம்பி காய்ச்சி குண்டியில் குறிவைத்தும், அதன் ஆண்மையை அறுத்தும்விட பாவம் நாய் தனது எஜமான்தான் தனக்கு இக்கொடுமையை செய்தார் எனப் புரியாமல் ஓடோடிச் சென்று தன் வீட்டில் அழுதுகொண்டு எஜமானைச் சுற்றிவரும். இதற்குப்பிறகும் அந்த நாய் நன்றியுடனே இறக்கும் வரை வாழும்.

வீடுகளில் மட்டுமல்ல நாடு காத்த நாய்களுக்கும் நடக்கும் வதைகளைக் கவனியுங்கள். இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற நாய்கள் கொல்லப்படுவது ஏன் தெரியுமா ?

இந்தியாவின் பொலிஸ் பிரிவிலும், இராணுவ படைகளிலும் நாய்கள் இடம் பெற்றுள்ளன. இராணுவ வீரர்கள் போல, இராணுவ நாய்களுக்கும் பணி காலம் மற்றும் ஓய்வு பெறுவதற்கான காலம் இருக்கிறது. இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு அவரவர் படிப்பு மற்றும் ஓய்வு பெறும் காலத்தில் அவர் வகித்த பதவி சார்ந்த வேறு அரசு வேலைகள் தரப்படும்.

ஆனால், இராணுவத்தில் நாட்டுக்காக பணியாற்றிய நாய்களுக்கு என்ன நிலை ஏற்படுகிறது என்று உங்களுக்கு தெரியுமா? ஓய்வு பெறும் இராணுவ நாய்கள் வலியற்ற முறையில் கொலை செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் இராணுவ நாய்களை ஏன் கொல்கிறார்கள்?
இராணுவ நாய்கள் மட்டுமல்ல, குதிரைகளும் கூட உடற்தேர்வு குறைப்பாடு அல்லது நோய்வாய்ப்பட்டு போகும் போது, ஓய்வுபெறும் காலத்தை எட்டும் போது கொலை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. வலியின்றி பிராணிகள் கொலை செய்யப்படும் முறையில் இராணுவ நாய்கள் மற்றும் குதிரைகள் கொலை செய்யப்படு கின்றன.
ஒவ்வொரு இராணுவ நாயும் ஏதோ ஒரு சிறப்பு பிரிவில் பயிற்சி பெறுகின்றன. வெடிக்குண்டு கண்டிபிடித்தல், பாதுகாத்தல், விபத்து, காயம் பட்டவரை கண்டறிதல், காலாட்படை ரோந்து, கண்காணிப்பு என பல திறன் வேலைகளில் இராணுவ நாய்கள் பணிபுரிகின்றன.

இராணுவ நிபந்தனைகளின் படி தெரியாதவர்கள், தவறானவர்களின் கைகளில் இராணுவ நாய்கள் நோய் வாய்ப்பட்டோ, திறன் இழந்தோ, ஓய்வுபெற்ற பிறகோ சிக்கினால் அதனால் ஏதேனும் தவறுகள் ஏற்படலாம். அதனால் தேசத்திற்கு அபாயங்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.

இதனால் தான் இராணுவ நாய்கள் சில காரணங்களால் இராணுவ பணியில் இருந்து விலகும் நிலை ஏற்படும் போது நிரந்தரமான, நிம்மதியான உறக்கமளிக்கப்பட்டு பிரியாவிடை பெறுகிறது என்று கூறுகிறார்கள். பொதுவாக இராணுவ பிரிவில் லேப்ரடர்ஸ் (Labradors) ஜெர்மன் ஷெப்பர்ட் (German shepherds), பெல்ஜியன் ஷெப்பர்ட் (Belgian shepherds) போன்ற வகைகளை சேர்ந்த நாய்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன.

நன்றி போல்ட் ஸ்கை

---


12 ம் பக்கத் தொடர்ச்சி

### பெண் உளவியலும் வெள்ளிவீதியார் பாடல்களும்

இனிய சுவையுடைய பசுவின் பாலானது அதனுடைய கன்றாலும் அருகப்படாமல் பாத்திரத்திலும் கறக்கப்படாமல் நிலத்திலே சிந்துவதுபோல எனக்கும் பயனின்றி என் தலைவனுக்கும் உதவாமல் என் அழகு பசலை நோய் உண்ணும் நிலையைப் பெற்றுவிட்டதே என்று பாடுகின்றாள். பசலை நோய் எனப்படுவது தலைவனை பிரிந்து வாடும் தலைவிக்கு உடல் மெலிந்து, உடல் அழகு போய், முகப்பொலிவு இழந்து, கைகளில் அணிந்திருக்கும் வளையல்கள் கழன்று விழும் நிலை ஏற்படல். இதனை ஒரு பெண் ஆண் இல்லாமல் தனிமையில் பசலைநோய் வாய்ப்பட்டு நிற்கும் நிலையை வெள்ளிவீதியார் அழகாகப் பாடுகின்றார்.

இடிக்கும் கேளிர்! நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல்போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்க அரிதே

என்னைப் பற்றித் தப்பாகக் கருதும் உறவினர்களே! ஞாயிறு கதிர் பரப்பும் வெப்பமாகிய பாறையிலே வைக்கப்பட்டிருக்கின்ற வெண்ணெய் கையிழந்த ஊமையால் காவல் காக்கப்படுகின்றது. அவ்வெண்ணெய் அவனால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது உருகி அழிவது போல காமநோய் பரவிய எனது உடலில் உள்ள உயிரும் அழியப் போகிறது முடிந்தால், நீங்கள் என்னுடைய காதல் நோயைத் தடுத்து நிறுத்துங்கள் என்கின்றாள். இவ்வாறு தலைவனைப் பிரிந்து வாடுகின்ற ஒரு பெண் அவனுக்காகக் காத்திருந்து அவனைத் தேடிச் செல்லும் மன உறுதியையும் கொண்டிருக்கின்றாள் என்பதை




நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலில் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்


கெடுநரும் உளரோ நம் காதலோரே

என்னும் பாடலிலே தலைவன் நிலத்தை
அகழ்ந்து அதனுள் புகுந்து செல்ல முடியாது.
வானின் உயரே பறந்து செல்ல முடியாது.

பெரிய கடலிலே காலால் நடந்து சென்றிருக்க முடியாது. எனவே ஒவ்வொரு நாடு தோறும், ஊர்தோறும், குடிதோறும், சென்று தேடினால், நிச்சயமாகக் கண்டுபிடித்து விடலாம் என்கிறார். இப்போதுள்ள முகநூல் இல்லாத சமயத்திலேயே ஒரு பெண் இவ்வாறு சிந்திக்கின்றாள் என்றால், அவள் காதலுக்காக எவ்வாறு மனவுறுதி பெற்றிருக்கின்றாள் என்பது அறியக் கூடியதாக இருக்கின்றது.

பலகாலம் ஒரு பொருளை நினைத்து ஏங்குபவர்கள், கனவிலே அப்பொருள் கிடைத்துவிட்டதாக நினைத்து நிறைவு பெறுவதைக் குறிக்கும் பாடல்களும் வெள்ளிவீதியார் பாடல்களில் காணப்படுகின்றது.
தொல்காப்பியப் பொருளதிகாரத்திலே மண்கலத்திலே நீருள்ளது என்பதை அதன் கசிவு காட்டுவது போல ஒரு பெண் தன் வேட்கையை உணர்த்த வேண்டும் எனப்படுகிறது. இப்போது கூட ஒரு பெண் தன் உணர்வுகளை சமுகத்திடையே வெளிப்படையாகக் கூறத் தயங்கும் நிலை காணப்படு கின்றது. ஆனால், சங்க காலத்திலேயே வெளிப்படையாகத் தன் உணர்வுகளைப் பாடிய ஒரு முற்போக்குவாதியாகவே வெள்ளிவீதியாரை நான் காண்கின்றேன்.




# எம் முற்றத்தில் உள்ள கல்
# நிலா முற்றத்தில் கிடைத்தது எப்படி?

Apollo 14 விண்வெளிக்கலம் கற்களை சந்திரனில் இருந்து பூமிக்கு கொண்டுவரும் போது அந்தகற்களின் இடையே பூமியில் உள்ள கல் ஒன்றும் இருந்தது.
இது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பூமியில் கிடைக்கப்பெறும் கிறனைட் கல் அதில் ஒரு சிறு கிறனைட் கற் துண்டு ஒன்று சந்திரனில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

சந்திரனில் வேற்றுகிரகங்களில் இருந்து விழும் சிறு துண்டங்கள் போல பூமியில் இருந்தும் சிறு கற்கள் சந்திரனில் வீழ்ந்திருக்கலாம்.
அதாவது பூமியில் வேற்றுகிரகங்களில் இருந்து கற்கள் விழுவது எப்படிச் சாத்தியமோ அது போல் சந்திரனுக்கு வேற்று கிரகமான பூமியில் இருந்து சந்திரனில் விழுவதும் சாத்தியமே.

சந்திரனில் கண்டு எடுக்கப்பட்ட இந்த பூமியின் சிறு கிரணைட் கல், இன்று பூமியில் இருக்கும் கற்களில் மிக மிக பழமைவாய்ந்த கல்லாகும்.

சுவீடன் அருங்காட்சியகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் Jearemy dellucci நாசா வழங்கிய இக்கல்லை இரசாயண முறையிலும்,பௌதீக முறையிலும் பரிசோதித்தனர். இப்பரிசோதனை இக்கல் உருவக்கம்பற்றி அமைந்தது.

கல்லில் உள்ள படிகங்கள் சந்திரனில் உள்ள ஒக்சியினை விட மிக அதிகமாக ஒக்சியின் உள்ள இடத்தில்தான் இக்கல் உருவாகியிருக்கும். உயர் அழுத்தமும் தாழ்ந்த வெப்ப நிலையும் இருக்கும் இடத்தில் இக்கல் உருவாகி இருக்கவேண்டும் என்கிறது அவர்களது ஆய்வு.
4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியில் உருவான இக்கல் சந்திரனில் வீழ்ந்துள்ளது.



சிவஜெனனி

சந்திரன் காலத்தால் பெருமாற்றம் அடையாத ஒரு கிரகம். பூமி பலமாற்றங்களை அடைந்து விட்ட கிரகம்
எனவே பூமியின் ஆரம்ப கால அல்லது மிக மிக பழைய காலத்தை சந்திரனில் கண்டு எடுக்கப் பட்ட இக்கல் மூலமாக அறிய முடியும் என்கிறது இவர்களது ஆய்வு.

சந்திரனை ஆய்வு செய்யப் போனவர்களுக்கு முதலில் நீ வாழும் பூமியை கவனி என்கிறதோ சந்திரன். பூமி தன்வடிவத்தை இழந்துகொண்டு செல்கிறது. பழமையின் சுவடுகளைக்கூட வேற்றுக் கிரகங்களில் தேட வேண்டியுள்ளது?
எத்தனை கோடான கோடி மக்கள் வாழ்ந்துவிட்டுப்போன பூமியிது. யார் செய்த தவறோ இந்த பூமிக்கான மாற்றம்.


மங்கல இசைக் குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Tel: 0049 157 89 15 95 71





# தாய்த் தமிழின் குழவி சமஸ்கிருதம் புதிய கோணத்தில் புதிரின் விடை

## இது முடிந்த முடிவுமல்ல முடியாத புதிருமல்ல?





சிந்தனை சிவவினோபன்

தமிழில் ஆங்கிலம் கலந்தால் உடனடியாகத் தெரிகின்றது. ஆனால் தமிழனுக்கே தெரியாமல் தமிழில் பல மொழிகள் கலந்துள்ளன. இதையெல்லாம் யார் தட்டிக் கேட்ப்பார்கள்? இன்று நாம் தமிழ் என்ற கோணத்தில் பாவிக்கும் பாதிக்கு மேற்பட்ட வார்த்தைகள் தமிழே அல்ல, என்று சொன்னால் நம்பமுடிகின்றதா? நம்பா விட்டாலும் நறுக்கென்று குத்தும் உண்மை இது தான்.


பாளி மொழி, சமஸ்கிருதம், லத்தின், அரபு என்று மட்டும் இல்லாது போர்த்துக்கேய, ஒல்லாந்த, டச்சுமொழிகள் கூட கலந்து கிடைக்கும் எம் மொழியின் தற்கால நிலை, கவலைக்குரிய கலிகால நிலையாகும். ஒரு மொழியானது காலத்தின் அடிப்படையில் பல்வேறு இணைப்புக்களிலும் பணிப்புக்களிலும் கலந்து புதிய மொழியாகத் திரிவடையும் ஆபத்து நிலையில், தமிழ் மொழி மட்டுமே 3000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட வார்த்தைகளைக் கூட இன்றும் வாசித்து புரிந்து கொள்ளக் கூடிய அதிசய மொழியாக காணப்படுகின்றது. அதற்கு கண்கூடு உதாரணமே எங்கள் திருக்குறள்.

திருக்குறளின் வார்த்தைகளையும் வசன நடையையும் வாசிக்கும் தூய தமிழனுக்கு கண்டிப்பாக அதன் கருத்துக்கள் மனக்கண்ணில் விழுந்துவிடும். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" இது மூவாயிரம் ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட வார்த்தைகள் ஆனால் இவ்வார்த்தைகள் இன்றும் பாவனையில் உண்டு. இப்படிப்பட்ட சிறப்பு பல மொழிகளில் இல்லை. இதற்கெல்லாம் ஒரே காரணம் தமிழனின் புத்திசாலித்தனம் என்று சொன்னால் நம்ப முடியுமா? இதோ ஆதாரங்களுடன் அடுத்த எடுத்துக் காட்டலைக் கவனியுங்கள்.

தமிழ் மொழி பலமுறை அழிவு வரை சென்று மீண்டும் உயிர்த்து வந்த மொழியாகக் காணப்படுகின்றது. அதற்கு நாயன்மார்களின் கதை முதல் நாடோடிக் கதைகள் வரை பல ஆதாரங்கள் உண்டு. உலகில் பல இனத்தவர்களால் தமிழ் இனத்தவர்கள் மீது பலமுறை தாக்குதல்கள் நடத்தப்பட்டு இறுதியில் இயற்கையே அழித்த ஒரு இனமாக, இன்றும் தெற்கே இந்துசமுத்திரத்துள் உறங்கி கிடைக்கும் தமிழனின் சரித்திரமும் ஒரு சாட்சி. இப்படி தலைசிறந்த மொழியாக இருந்த தமிழ் மொழி ஒரு காலத்திலும் எந்த மொழியையும் எதிர்க்கவில்லை. ஏன் என்றால் அனைத்து மொழி மக்களும் தமிழ் மொழி கற்க ஆசைப்பட்டனர். தமிழ் கற்று தமிழனானால், தலைசிறந்த வாழ்க்கை கிடைக்கும் என்று அனைவரும் தேடித் தேடி தமிழ் கற்றனர் எப்படி இன்று அனைவரும் ஆங்கிலம் கற்கின்றோமோ அதே போல அன்று அனைவரும் தமிழ் கற்றனர். இதற்கு உதாரணம் வேற்று மொழிக்காரர்கள் தமிழ் கற்று, தமிழ் அரச சபையில் மந்திரியாகவும் அமைச்சராகவும் வீற்றிருந்தனர். என்பதற்கு அன்று முதல் இன்று திரு.கருணாநிதி வரை பல சாட்சிகள் உள்ளனர்.

அப்படிபட்ட எவரையும் எதிர்க்காத தனிக்காட்டு ராஜாவாக இருந்த தமிழர்கள் இன்று பிறமொழிகளை எதிர்க்கும் நிலை ஏற்பட்டு விட்டதா! என்ற ஆச்சரியத்தில் ஆரம்பித்த என் தேடல் ஒரு அற்புதத்தைக் கண்டு பிடித்தது. இதோ அந்த அற்புதம் உங்களுக்காக.

ஆரியரின் படையெடுப்பின் பின் அவர்கள் முதலாவதாகக் கைவைத்த இடம் கோவில்கள். கோவில்களில் உட்செல்ல மறுப்பு விடுத்து சாதி பிரிவு ஆரம்பமானது. அரச சபையைக் கூட ஆக்கிரமிக்காத ஆரியர்கள் ஏன் கோவில்களை ஆட்கொண்டனர் என்ற பெரும் கேள்வி எனக்குள் எழுந்த போது தான் ஒரு பொறி தட்டியது. ஆரிய மொழிகளில் அதிக சமஸ்கிருதக் கலப்புக்கள் உண்டு. அதே நேரம் அவர்களின் பொருளாதாரமும் அறிவாற்றலும் அதிகரித்தும் உள்ளது. ஆனால் சமஸ்கிருதமோ தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழிச் சொல்லப்பட்ட கலைகளின் சிறப்பையும் பறைசாற்றிக்கொண்டுள்ளது. இது எப்படி சாத்தியம் என்று உற்றுப் பார்க்கும் பொது ஒரு பெரும் உண்மை என்னை விழிக்கச் செய்தது.




தமிழனின் பாதுகாப்பு உணர்வு எப்படிப்பட்டது என்ற ஆச்சரியத்தை இப்போது உங்களுக்கு விளக்கவுள்ளேன். பிறமொழிக்காரர்கள் தமிழைக் கற்று, தமக்குள் புகுந்து கொள்வதை உணர்ந்த தமிழர்கள் தமெக்கென ஒரு ரகசிய மொழியை உருவாக்கினார்கள். அந்த மொழியைப் பாதுகாக்க அதன் ஓசை வடிவங்களை செதுக்கினார்கள். அம்மொழியை பேசுவோர் அனைவரும் ஒரே சந்தத்தில் பேசும்வண்ணம் மந்திரக் கட்டுக்களாக செதுக்கினார்கள். அந்த மொழிக்குள் தமிழனின் மருத்துவம் விஞ்ஞானம் பொருளாதாரம் என்று அனைத்து ரகசியங்களையும் ஓசைக்கு கட்டாக மாற்றி மறைத்து வைத்தார்கள்.

அதனால்த் தான் கோவில்களில் பல இடங்களில் ரகசிய அறைகளும் அந்த அறைகளுள் பொன் பொருள் என்பதோடு சேர்த்து ஒரு சில ஓலைச் சுவடிகளும் காணப்பட்டன. ஒற்றர்கள் மூலம் இவற்றை அறிந்த ஆரியர்கள், தமிழை விட்டுவிட்டு சமஸ்கிருதத்தை கோவில்களுக்குள் புகுந்து கற்றுக் கொள்ளத் தொடங்கினர். இவற்றை நம்பக் கஷ்டமாக உள்ளது என்றால் சமஸ்கிரதம் எப்படி எழுதப் படுகின்றது என்று மட்டும் எடுத்துக் பாருங்கள். சமஸ்கிரத எழுத்துக்களையும் தமிழ் அகர வரிசையையும் சேர்த்து வைத்துப் பாருங்கள், அதன் பின் நீங்களே முடிவெடுக்கலாம், சமஸ்கிரதம் எப்படி உருவாகி உள்ளது என்று. அது மட்டுமின்றி இதோ வந்து சென்றதே பொங்கல் சிறப்புத் தினம் அதற்கு ஒரு நாள் முதல் இந்தியர்கள் அனைவரும் போஹி என்று ஒன்று கொண்டாடுகின்றார்கள், இந்தப் பண்டிகை இலங்கையில் கொண்டாடுவது இல்லை, ஏன்? அது எதற்காகத் தெரியுமா? எங்கள் வீடுகளிலும் ஏதேனும் சமஸ்கிருத புத்தங்களையோ, ஓலைச் சுவடிளையோ வைத்திருந்தால், அதை அழித்துவிட வேண்டும் என்பதற்க்காக ஆரியர்கள் மேற்கொண்ட சூட்சி தான் இந்த போஹி.

இனிமேல் நாம் செய்யவேண்டிய ஒரே ஒரு வேலை எம் முன்னோர்கள் எமக்கென்று சேர்த்து வைத்த அறிவுப் பொக்கிஷத்தை தெடிக் கற்றுக் கொள்வோம். எம் முன்னோர்கள் சொன்னதெல்லாம் மூட நம்பிக்கை செய்ததெல்லாம் முட்டாள்த் தானம் என்று யாரோ ஒருவர் சொல்வதை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளாமல், சற்று நீங்களும் யோசித்துப் பாருங்கள் வான்மீகி ராமாயணத்திற்கும் கம்ப ராமாயணத்திற்கும் என்ன வித்தியாசம் என்று? சிந்தியுங்கள். சமஸ்கிருதம் எழுதிய தமிழனிற்கும் தமிழ் எழுதிய ஆரியருக்கும் என்ன வித்தியாசம் என்பதை அதில் புரிந்துகொள்வீர்கள்.

வா புதிதாய்ச் சிந்திப்போம், ஓர் புதிரைச் சந்திப்போம்.
ஏன் பிறரை நிந்திப்போம்? நாம் உயர விண்விற்போம்.



# இறந்தவர்களை உயிர்ப்பிக்கலாமா?



## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

மனிதனின் வாழ்க்கையில் நிச்சயமாக நடைபெற்றே தீரும் என்று சொல்லக்கூடியது எது? அது இறப்பு மட்டும் தான். மனிதர்களாகப் பிறந்த நாங்கள், இறப்பை நோக்கிப் போகின்றோம். ஏதாவது ஒரு விபத்தால் இறப்பது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் இன்று வரை ஒரு வித சிகிச்சை முறைகளுமே கிடையாத நோய்களால் இறப்பது என்பது, மிகவும் வேதனைக்குரிய விஷயம் ஆகும், அல்லவா? ஆனால், அப்படி ஒரு நோயால் இறந்தபின், உங்கள் உடலை வைத்திருந்து, பின் எதிர்காலத்தில் அந்த நோய்க்குச் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்த பின் உங்களைக் குணப்படுத்தி உயிர்ப்பித்தால் எப்படி இருக்கும்? அட அது எப்படி முடியும்? முடியவே முடியாது, என்று நினைக்கின்றீர்களா?

ஒரு மனிதன் ஒரு நோயின் காரணத்தால் இறந்த பின், உடனடியாக அவனது உடலை உறைய வைத்து அதாவது freeze பண்ணி, மருத்துவ அறிவியல் பன்மடங்கு வளர்ந்த பின்னர், அதாவது மருத்துவம் இறந்தவரின் உடல் குறைபாடுகள் மற்றும் நோய்களைக் குணப்படுத்த மருந்துகள் கண்டுபிடித்த பின், அவரை மீண்டும் இறப்பிலிருந்து எழுப்ப முடியும் என்றால் எப்படி இருக்கும்? உங்களுக்கு ஒன்று தெரியுமா? அது ஏற்கனவே செய்யப் பட்டு வருகின்றது.

இதை கிரையோனிக்ஸ் (Cryonics) என்று அழைப்பார்கள். நவீன மருத்துவ முறைகளால் தீர்க்க இயலாத நோய்களால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் மற்றும் மிருகங்களை உறைந்த நிலையில், அதாவது குறைந்த வெப்பத்தில் பதப்படுத்தி எதிர் காலத்தில் மீள் இயங்கச் செய்யலாம் என்ற நம்பிக்கை முறையைக் குறிக்கும். அதற்கு இறந்தவர்களை நீர்ம நைட்ரஜனின் உதவியுடன் -196 பாகை செல்சியசுக்கு உறைய வைப்பார்கள்.

ஆனால் என்ன தான் தற்போது இந்த உடல்களை கிரையோனிக்ஸ் முறை ஊடாக உறைய வைத்திருந்தாலும், அவற்றை மறுபடியும் வெப்பமாக்குவதில் பல்வேறான சிக்கல்கள் உள்ளன. உதாரணத்திற்கு பிராணவாயு, அதாவது oxygen இல்லாத காரணத்தால், அல்லது உறைந்த நிலையில் இருக்கும் உடலிலும், எலும்புகளிலும் ஏற்படும் முறிவுகள் மற்றும் வெடிப்புகளால் உருவாகும் பிரச்சனைகளுக்கு இன்று வரை விஞ்ஞானிகளால் தீர்வுகள் காண முடியவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இதற்கும் ஒரு வழி இருக்கும் என்று நம்புகிறார்கள்.

நண்பர்களே, இவ்வாறான ஆராய்ச்சியில் உங்களுக்கும் ஆர்வம் இருக்கிறதா?

அப்படி என்றால் bioengineering molecular nanotechnology அல்லது nanomedicine போன்ற துறைகளில் படித்து உங்கள் ஆராய்ச்சிகளைச் செய்யுங்கள்!

அது சரி, இன்று வரை எத்தனைப் பேர் கிரையோனிக்ஸ் முறையில் உறைநிலைப் படுத்தப்பட்டுளனர் என்று தெரியுமா? 270 மனிதர்களுக்கும் மேல்! இது ஆச்சரியமாக இல்லையா? உங்கள் இறப்புக்குப் பின் உங்களை உறைநிலையில் பதப்படுத்த நீங்களும் அனுமதி கொடுப்பீர்களா?



# நமது கண்கள் எத்தனை மெகா பிக்சல் கொண்டிருக்கிறது?



ஒரு புதிய நிழற்படக் கருவி, அதாவது photo camera, வாங்குபவர்கள் பல விஷயங்களைப் பார்த்து வாங்குவார்கள். குறிப்பாக அந்த நிழற்படக் கருவி எத்தனை மெகாபிக்சலில் (mega pixel) படங்களை எடுக்கும் என்பதும் ஒன்றாகும். ஆனால் உண்மை சொல்லப்போனால் நமது கண்களும் கூட ஒரு விதமான நிழற்படக் கருவி தானே?

அப்படிப் பார்த்தால் கண்களாகிய நமது இந்த நிழற்படக் கருவிக்கு எத்தனை மெகாபிக்சல் இருக்கும் என்று எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக் கின்றீர்களா? இல்லையா? அப்படி என்றால் கண்டிப்பாக தொடர்ந்து படியுங்கள்.



ஒவ்வொரு மனிதனின் கண்களும் அசைந்து அனைத்தையும் பார்ப்பதற்கு 6 தசைகள் செயல் படுகின்றன. ஒவ்வொரு மனிதனின் கண்களும் தினமும் சுமார் 1 லட்சம் தடவை அசைகின்றது.

ஒரு சராசரி மனிதனின் விழித்திரையில் ஐந்து மில்லியன் உழநெ receptors என்று அழைக்கப்படும் உயிரணுக்கள் உள்ளன. நாம் காணும் படங்களின் நிறங்களைப் பார்க்க இந்தக் cone receptors காரணமாக இருப்பதால், நம் கண்களை ஐந்து மெகாபிக்சல் நிழற்படக் கருவிக்கு ஒப்பாகக் கருதலாம்.

ஆனால், நாம் காணும் படத்தைப் பார்க்கவும், அதன் வண்ணங்களைப் பிரித்துணரவும் மேலும் 100 மில்லியன் Rods என்று அழைக்கப்படும் உயிரணுக்கள் கண்களில் உள்ளன. எனவே, இவை அனைத்தையும் வைத்து நமது கண்களை 105 மெகாபிக்சல் நிழற்படக் கருவிக்கு ஒப்பாகக் கூறலாம், ஆனால் அதுவும் குறைவான மதிப்பீடு தான்.

அதற்குக் காரணம், நமது கண்கள் ஒன்றும் அசைவில்லாத நிழற்படக் கருவி இல்லையே. நமக்கு மொத்தம் இரண்டு கண்கள் உண்டு, எனவே இந்த இரு விழிகளும் தொடர்ந்து அங்கும் இங்கும் சுழன்று காட்சிகளைக் கண்டு, அவற்றை மூளையில் விரிவான படமாகப் பதிவு செய்கின்றது. எனவே, விஞ்ஞானிகளின் கணிப்புப் படி நமது கண்கள் 576 மெகாபிக்சல் நிழற்படக் கருவிக்கு ஒப்பானது எனக் கூறுகின்றனர்.

நண்பர்களே, இப்படி ஒரு high tech camera வை உங்கள் உடலுக்குள்ளே வைத்திருப்பது ஆச்சரியமாக இல்லையா?

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். உங்களுக்கு இந்த விஷயம் முன்பே தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!


சிறந்த ஒளிப்பதிவு!
0049 152 33 83 29 55
Nimal
Video & Photo
namilvideo@gmail.com





# The role of Sri Lankan Tamil girls in maintain and preserving the traditional values in Sri Lanka





Bavvatharani Ravindran
Nallur

Sri Lanka is an island which attracted very many people from foreign countries. Sri Lanka is popular for its natural beauty and resources. Besides these Sri Lanka is a country which has been strictly following socio cultural economics and religious values, there are numerous Hindus, Buddhist temples, churches and mosques. In ancient Sri Lanka people were very pious and strictly follows the religious rituals and followed their traditional norms. In this article the role of Sri Lankan teenage girls in maintaining and preserving the traditional values are discussed.

**Traditional values**

In earlier times people in Sri Lanka lived together. Quantity of one family in the past was larger than today. The great grandparents dominated the families in all the manner. They read the Ithikasa Puranas and other religious literature and explained the morals embedded in them. They lived an exemplary life. Their children and grandchildren respected them, followed their values. When a baby girl is born the entire family took care of the girl. The teenage girls in the families are very much cared by giving good and nursing food. The girls were taught how to be safe and secure and not to get deceived by others. They were taught to look after themselves as well as others by learning to cook and doing other family chores. Generally, the girls learned aesthetic skills and they were trained to get involved in other skills such as embroidery, knitting, weaving and making handy crafts. The girls were fully engaged in work at home. In earlier time only a handpicked number of girls were allowed to study. In present Sri Lanka, the teenage girls play a different role here unlike the earlier time the family shifted from their home town for educational and occupational purposes. They live as single families. Both the parents go for work and children are left at home in order to make their children occupied and stay at home. Parents give them phones, computers and televisions. But majority of the teenagers misuse them without proper guide and knowledge and get fully engaged in them and neglect their studies. Gradually they get into the present trend of using social medias and attend parties with unknown people and spend time in coffee shops and snack bars. Driven by the rootless teenagers' behavior by fake attractions and trends. They will be dragged and to do mean deeds if they are not guided by the parents.


Now a days, teenage girls in Sri Lanka except the few take their own decisions without discussing with their parents. It is when there are some serious incident take place. The parents, teachers and others have no knowledge about the activities of the teenage girls. The teenage girls are helpless when they are caught in the so-called fashion, trend and behavoiur which bring harm to them and destroyed their good future. So, there are lots of drop outs in schools. They look for jobs in teenage itself. Therefore, the situation has worsened to the level of hunting jobs at teenage to fulfill their mean deeds.

Teenage is a period where confusion and small matters seem really big. Today teenage girls in Sri Lanka very much behaved like the ones in the developed countries. The most common problems the girls facing are changes in their appearance, self-esteem, education, bullying, friendship, opposite gender attraction, menstruation and depression. In the developed countries there are many organizations to check the behavior and gave counselling for the teenage girls. In Sri Lanka every day we hear, watch horrible gender-based harassment and raping and murdering and hiring teenage girls for child labour and for various other men purposes. Even in Sri Lanka teenage girls are tempted by giving money, dresses and other facilities by drug traffickers and other sexual activities and also, they are using them for robbing and pickpocketing.

In conclusion, the teenage is the sensitive age girls facing lots of challenges like two sides of a coin. The parents, school, neighbors, kit and kin and the country have to take urgent and necessary actions and make them involved in other productive educational activities and redeem them from getting involved in malicious activities. Teenage girls must be cared advised, entertained, and watched by their parents. The use of phones and computers should be restricted. Make sure that your teenage girl understand that she should focus on study well and obtain good marks also do not forget that grades are no way of judging a child's talent. Low grades do not make anyone less educated or less talented. There are plenty of ways in this earth to show her skills and talents that she can prove herself in. Encourage her to take up extra-curricular activities that she likes. Teach how to be safe and all about precaution too, as you may not always be able to control her relationships and tell that it is alright to fight with friends and learn to say no. Having problems and difference in opinions are not bad. The best way is to discuss these problems and then forget about them. Monitor friends that she makes and ensure that they are the right company.

Looking after, safe guarding and protecting teenage girls and making them good citizen is not only a parent's duty but also the country's responsibility.





# திருமந்திரமும் வாழ்வியலும் 35

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## பெரிய புராணமும் திருமந்திரமும் (பாகம் 2)

இளையான் குடிமாறநாயனார் (4) - மகேசுர பூசை.

“படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே.” பாடல் எண் 1857

படம் போன்ற அமைப்பை உடைய கோபுரங்களையுடைய கோயிலின் உள்ளே இருக்கும் இறைவனுக்குப் படைத்தால் அது இறைவனுக்குத்தான் சேரும் அடியார்களுக்குச் சேராது. ஆனால் நடமாடும் கோயிலாக விளங்கும் சீவன்களுக்குத் தருகின்ற ஒன்று சீவன் உள்ளே சிவன் இருக்கும் காரணத் தால் அது சிவனுக்கும் போய்ச் சேரும்

இளையான் குடிமாறநாயனார் (சிவ அடியார்களுக்கு அமுதூட்டி) வரலாற்றின் மூலம் சீலமார் பூசை என சேக்கிழார் சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட மகேசுர பூசை சிவலோகம் சென்று இன்புற்றிருப்பதற்கான வழி என உணர்த்தப்பட்டுள்ளது.

விறன்மிண்ட நாயனார் (6) சிவமே சிவனடியாரும்

“ஏறுடையாய் இறைவா எம்பிரான் என்று
நீறிடுவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை அண்ணல் இவரென்று
வேறு அணிவார்க்கு வினைஇல்லை தானே” பாடல் எண் 1862

“விடை ஏறும் எங்கள் பெருமானே! இறைவா! எம் உயிர்த் தலைவா!” என்று சிவப் பரம்பொருளைப் போற்றி வணங்கும் திருநீறு பூசும் அடியவர்கள் பூமியில் வாழுகின்ற தேவராவார்கள். கங்கை ஆற்றைத் தலையிலே கொண்டிருக்கின்ற, சிவந்த சடைமுடி உடைய சிவப் பரம்பொருள் இவரே என்று கருதி, அச்சிவனடியார்களைச் சிவனாகவே எண்ணிச் சிறப்பாகத் தொழுபவர்களுக்கு, வினைத் துன்பம் இல்லாது போகும்.

விறன்மிண்ட நாயனார் (சிவனடியார்களை சிவன் எண்றே வணங்குபவர்) வரலாற்றின் மூலம் சிவனடியார்களும் சிவனே என எடுத்துக் காட்டப்பட்டது.

அமர்நீதி நாயனார் (7) அறம் செய்


“தன்னை அறியாது தான்நல்லன் என்னாதுஇங்(கு)
இன்மை அறியா(து) இளையார்என்று ஓராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னம்
தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே” பாடல் எண் 255

உயிரை எடுக்க வரும் எமன் எம்மை எப்படிப்பட்டவர் என எண்ணிப் பார்க்கமாட்டான். எம்மை பாவம், நல்லவன், ஏழை, சிறுபிள்ளை என விட்டு விடவும்மாட்டான். எமன் வலிமையுடையவன். எனவே அவன் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு முன்பாக நல்லதான தானம், தவம் என்பனவற்றைச் செய்யுங்கள் மனிதர்களே. அமர்நீதி நாயனார் (உணவு, உடை கொடுத்து) வரலாற்றின் மூலம் அறம் செய்வதன் மூலம் சிவலோக வாழ்வையும் பெறலாம் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கண்ணப்பநாயனார் (10) அன்பே சிவம்

“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.”
பாடல் எண் 270

அன்பு வேறு, இறைவன் வேறு இரண்டும் ஒன்றல்ல தனித்தனியானவை என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே இறைவன் என்பதைப் பலரும் அறியாது இருக்கிறார்கள். அன்புதான் இறைவன் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான இறைவனாய் ஆனந்த வெள்ளத்தில் அமர்ந்திருப்பார்கள் (வாழ்ந்திருப்பார்கள்).



பூசலார் நாயனார்

கண்ணப்ப நாயனார் (காளத்தி நாதர் மேல் அன்பு வைத்து) வரலாற்றின் மூலம் இறைவன் மேல் மெய்யன்பு தலைப்படுமாயின் முத்தி கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசு நாயனார் (21) சரியை வழிபாடு

“நேர்ந்திடு மூல சரியை நெறி இதென்று
ஆய்ந்திடும் காலங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரதே”
பாடல் எண் 1443

முத்தியாகிய பேரின்ப நிலை அடைவதற்கான மூல காரணமாகவும், முதன்மையான வழியாகவும் இருக்கின்ற சரியை நெறி இன்னதென்று ஆய்ந்தறிகின்ற, நுணுகி உணர்ந்திடும் சந்துரு ஆகிய என் அன்புச் சீடர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். பூவுலகில் உண்மை உணர்ந்திடும் சுத்த சைவர்ருக்கு உயிர் போன்றதே இந்தச் சரியை நெறிதான்.

திருநாவுக்கரசு நாயனார் (உளவாரத் தொண்டு) வரலாற்றின் மூலம் இறைவனை அடைவதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய சரியை வழிபாட்டின் மகிமை விளக்கப்பட்டுள்ளது.

பூசலார் நாயனார் (65) - உள்ளம் பெரும் கோயில்

“காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துஉள்ளே எங்கும் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே.”
பாடல் எண் 2550

சீவர்கள் உடம்போடு பொருந்தி அவர்கள் உயிரில் நுண்ணுயிராய்க் கலந்து இருப்பவனை, ஆருயிர்களின் உடம்பையே தான் அருளாட்சி செய்யும் திருநாடாகக் கொண்டு திகழ்பவனை, உடம்புக்குள்ளே ஒளிவடிவாய்த் திகழ்பவனை, பாவம் இந்தப் பேதை மக்கள் எங்கெங்கோ தேடித் திரிகிறார்களே! இவர்கள் அப்பெருமான் இவர்கள் உடம்புக்குள்ளேயே இருக்கின்ற உண்மை அறியாதவர்கள்.

பூசலார் நாயனார் வரலாற்றின் மூலம் ( மனத்திலேயே இறைவனுக்குக் கோயில் கட்டியவர்) இறைவன் எம்முடன் எமது உள்ளத்தில் இருக்கின்றான்

என நம்பிக்கையுடன் செயல்பட்டால் இறைவன் எம்முடனேயே இருந்து எம்மை வழிநடத்துவான் என உணர்த்தப்பட்டுள்ளது.


ஓம் பூரணம் ஓம்

மானுடம் முழுமை பெறும் பூரணம்

பூரண ஆச்சிரமம்

சுவிற்சர்லாந்து

0041 79 839 27 73

உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐபதப சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65

# Fat makes you slim



Jayanthan

A unique tissue we have effortlessly burns up calories. This could be answer to easy weight control.

In the war on our waist lines, fat is the enemy. It is fat, or adipose tissue, that gives us our beer bellies and love handles, our man boobs and our muffin tops. When plastic surgeons shape people into slimness, it is fat tissues they suck up and throw out with the clinical waste.
It is interesting to see a type of fat tissue could also be a key to weight loss. Not the ordinary white adipose tissue, but a special kind called brown fat. In some mammals, brown fat turns the energy obtained from food into heat, burning up calories without the animal expending any effort. It was initially thought only baby's have this brown fat and Adults don't. But latest evidence indicates that it is not correct and it is in fact present and functional in at least some individuals. It's typically stored in small deposits around the shoulders and neck.

Differences in the amount of brown fat each person has may help to explain why some of us are slim while others slim while others are overweight, and why many of us pile on the pounds as we age.
Scientists are experimenting with various ways to increase the amount or activity of our brown fat either pharmaceutically or even surgically by extracting white fat through liposuction and transforming it into brown fat and re-implanting it. It is well worth it as a mere 50 grams of brown fat can burn some 500 calories per day!!
Exposing your body to cool and even cold temperatures may help recruit more brown fat cells. Some research has suggested that just two hours of exposure each day to temperatures around 66˚F (19˚C) may be enough to turn recruitable fat to brown.

You may consider taking a cold shower or ice bath. Turning the thermostat down a few degrees in your home or going outside in cold weather are other ways to cool your body and possibly create more brown fat.

Also ursolic acid (found in apple peels, which gives apples their sheen) boosted brown fat in mice- even when they were fed high fat diet.
Various studies have shown that brown fat burns may help control blood sugar and improve insulin levels, decreasing the risk for type 2 diabetes. It may also help with removing fats from the blood, decreasing the risk for hyperlipidemia. Other studies show promise for brown fat's role in treating obesity. It's important to note that until recently, most studies on brown fat have been done on animals, particularly mice. More research is needed on humans.


விநாயகா ஜோதிட நிலையம்
பண்டித் துர்க்கா பிரசாத்
எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!
குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள், கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை
CONFIDENTIAL
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach





April, july, Aug ,
மாதங்களில்
எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.
லூர்ட்ஸ் மாதா
புனிதப்பயணம்
லூர்ட்ஸ் மாதா கோவில்
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.
K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89





SJ SOUTH INDIAN FOOD
0621 33 93 53 64
SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT
G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
Ludwigshafen
Schulstr 7-9
67059 Ludwigshafen
Tel: 0621 545 44 276
Mannheim
S1 -11
68161 Mannheim
Tel: 0621 862 43 212
info@asian-afro.de
S.J ASIAN - AFRO STORE

# பொட்டா அல்லது பார்பியா:

## சமூக ஊடகங்களுடன் /ஊடகங்களில்லாமல் எங்களைக் கண்டறிதல்






**சங்கரி விஜேந்திரா**

என்னுடைய முதலாவது மின்னஞ்சல் கணக்கை ஆரம்பித்த நாள் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அப்போது, எனக்கு ஐந்து வயது, கூகிளுக்கு ஏழு வயது, என்னுடைய பெரிய அக்கா பல்கலைக்கழகத்துக்காக வீட்டைவிட்டு வெளியேறத் தயாராகிக் கொண்டிருந்தாள். அதற்கு முதல் வருடம்தான் இந்தப் புதிய மின்னஞ்சல் சேவையை கூகிள் அறிமுகப்படுத்தியிருந்தது. எனக்குப் பிடித்த அக்காவுடன் நான் தொடர்பில் இருப்பதற்கு மின்னஞ்சலொன்றை உருவாக்குவது நல்லதென நாங்கள் நினைத்தோம். இது, என்னுடைய நண்பர்களில் பலர் அவர்களுடைய சொந்த மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்குவதற்குப் பல வருடங்களுக்கு முன்னையதானது, இணைய உலகுக்கான என்னுடைய நுழைவு 2005ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது.

நானும் வளர வளர என்னைச் சூழ்ந்து தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்தது. பாடசாலையை நான் ஆரம்பித்தபோது, சமூக ஊடகம் உதயமானது முதலில் Twitter, Facebook, Youtube என ஆரம்பமாகிப் பின்னர் Google Plus, Instagram, Tumblr, Snapchat எனப் பல்வகையாக விரிவடைந்தது. அதன் பின்னர் iMessage, Facebook Messenger, Whatsapp, Viber எனும் செய்தியனுப்பும் பயன்பாடுகள் தோன்றின. என்னுடைய பதின்மூன்றாவது பிறந்தநாளன்று, தமிழ் வாசிக்க ஆரம்பித்த ஒரு வருடத்தின் பின்னர், Facebook உடன் நான் இணைந்து கொண்டேன்.

என்னைப் பொறுத்தவரையில், கையடக்கத் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் ஒருமித்த முன்னேற்றம் என்பது பிரமிப்புடன் நோக்க வேண்டிய மனிதகுலத்தின் ஆக்கச் சிந்தனைக்கு/உருவாக்கும் திறனுக்கு சிறந்ததொரு உதாரணமாகும். முதலில் உலகம் முழுவதும் நாங்கள் பரவினோம். இப்போது சமுத்திரங்கள் எங்களைப் பிரித்தாலும்கூட நாங்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளக்கூடியதாக உள்ளது. கடந்த கோடைகாலத்தில், முதல் முறையாக, தன்னந்தனிய நான் இலங்கைக்குச் சென்றிருந்தபோது, என்னுடைய ஸ்ரீலங்காச் சித்தியை அவரின் Facebook சுயவிவரப் படத்திலிருந்தே நான் அடையாளம் கண்டுகொண்டேன். அங்கிருந்தபோது கனடாவிலுள்ள என்னுடைய குடும்பத்தவர்களுடனும் நண்பர்களுடனும் WhatsApp மூலமாகத் தொடர்புகள் வைத்திருந்தேன். இப்போது, அங்கு எனக்குக் கிடைத்த நட்புகளை Facebook மூலம் பேணுகிறேன். வெள்ளையின மற்றும் கிழக்கு ஆசிய மாணவர்கள் அதிகமாகவிருக்கும் உயர்தரப் பாடசாலை ஒன்றில் நான் கல்விகற்பதால், இங்கு கனடாவிலும், பொதுவான பாரம்பரியம் கொண்ட என் வயது ஒத்தவர்களை Facebook அல்லது Snapchatஐத் தவிர பிறவிடங்களில் நான் சந்திப்பது அபூர்வமானதாக இருக்கிறது. அவற்றில், எங்களுடைய பதிவுகளுக்கு நாங்கள் ஒருவருக்கொருவர் விருப்புக்குறி இடுகிறோம். அத்துடன், எங்களுடைய கலாசாரப் பெருமைகளை எங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுமுகமாக நாங்கள் கலந்துகொள்கின்ற எங்கள் கலாசார நிகழ்வுகளைப் பற்றி ஆளுக்கு ஆள் செய்திகள் அனுப்புகிறோம். சமூக ஊடகங்கள் இல்லாவிட்டால், என்னுடைய பாரம்பரியத்துடனோ அல்லது என்னுடைய மொழியுடனோ என்னுடைய அம்மாவுக்கு அப்பால் எனக்கு எந்தத் தொடர்பும் இருந்திருக்காது. எனவே, என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய அடையாளத்தை ஒரு தமிழ்-கனேடியராக உறுதிப்படுத்துவதற்குச் சமூக ஊடகங்கள் எனக்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன.

துரதிருஷ்டவசமாக, உலகத்தைப் பற்றிய என்னுடைய நம்பிக்கை நிறைந்த பார்வையைப்போல, இணையமோ, மக்களோ மிகவும் எளிமையானதாக இல்லை. நாங்கள் எவருடம் பேசுகின்றோம், எதை நாங்கள் பார்க்கிறோம், எங்களை மற்றவர்கள் எப்படிப் பார்க்கவேண்டுமென நாங்கள் விரும்புறோம் என்பவற்றைப் பொறுத்து நாங்கள் கவசங்களைப் போட்டுக் கொள்கிறோம். "கண்ணாடிகளை" அல்லது "முகமூடிகளை" அணிந்துகொள்கிறோம். குடும்ப நண்பர்களுடன் பேசும் போது சிறியளவான ஒலியசை அழுத்தத்தில் நான் கதைக்கிறேன். ஆங்கிலம் பேசும் என்னுடைய நண்பர்களுடன் இருக்கும்போது நீண்ட உயிரெழுத்துக்களைப் பயன்படுத்துகிறேன். இணையத்தில், வெவ்வேறு மக்களுக்குக்கேற்ப எங்களுடைய வேறுபட்ட கோணங்களைக் காட்டுவதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். Facebookஇல் என்னை நன்கு அறியாதவர்கள் என்னைப் பற்றி நல்லதொரு அபிப்பிராயத்தை வைத்திருக்க வேண்டுமென்பதால், என்னுடைய சாதனைகளைப் பற்றி நான் அதில் பதிவுசெய்கிறேன். Snapchatஇல், நெருங்கிய நண்பர்களை மட்டுமே நான் வைத்திருப்பதால், அதில் நகைச்சுவைத் துணுக்குகளையும் நாளாந்த நடவடிக்கைகளையும் பதிவுசெய்கிறேன். கலாசார நிகழ்வுகளைப் பற்றிய அதிகமான இடுகைகளைப் பகிரங்கமாகப் பதிவுசெய்வது பற்றி எனக்கு யோசனை இருப்பதுண்டு அதிகளவில் "இனக் கலாசாரத்தில் ஊறிய ஒருவர்" என மற்றவர்கள் என்னைப் பற்றி நினைப்பார்களா? அதேநேரத்தில், என்னுடைய சமூகத்துடன் எவ்வகையில் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்பதைக் காட்டுவதற்கும் நான் விரும்புகிறேன். NHM Writer வேலைசெய்யாத நேரங்களில், Google மொழிபெயர்ப்புக்கு நான் செல்லும்போது நான் பாசாங்கு செய்கிறேனா? என்னுடைய எந்தப் பகுதிகளை உலகத்துக்கு நான் காட்டுவது, எந்தப் பகுதிகளை நான் எனக்குள்ளே வைத்திருப்பது? புலம்பெயர்ந்தோரின் இரண்டாம் தலைமுறையினரின் அடையாளம் பற்றிய முதல் கேள்வி, நாம் தமிழரா அல்லது கனேடியரா என்பதாகத்தான் இருக்கிறது

எங்களின் பெண்கள் பலவீனமானவர்கள், எங்களுடைய ஆண்கள் வன்முறையாளர்கள், எங்களது குழந்தைகள் அறிவாற்றல் அற்றவர்கள், நாங்கள் சட்டவிரோதமான குடிபெயர்வாளர்கள் மற்றும் பயங்கரவாதிகள்,


மேலும், எரிவாயு நிலையங்களில் வேலைசெய்வதற்குத்தான் நாங்கள் லாயக்கானவர்கள் என தெற்காசியர்கள் மற்றும் தமிழர்களைப் பற்றி இணையத்தில் இருக்கும் ஏராளமான வகைமாதிரிகளால் மேலும் இது சிக்கலானதாகின்றது. என்னுடைய பாரம்பரியத்தை ஒதுக்கிவைக்காமல், இந்த எதிர்மறையான வகைமாதிரிகளைத் தவிர்ப்பதற்கே நான் விரும்புகிறேன். அதேநேரத்தில், கல்விக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம், எங்களிடம் வலுவான மரபுகள் உள்ளன, நாங்கள் நாங்கள் கடினமாக உழைக்கிறோம், எங்களுடைய உணவு ருசியானது போன்ற கருத்துகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. இவற்றில் எந்தளவு எப்போதும் உண்மையானதாக இருக்கின்றது?

தொடர்ச்சி 36 ம் பக்கம்.



35ம் பக்கத் தொடர்ச்சி...

**பொட்டா அல்லது பார்பியா:**




## Pakalu Papito

தமிழர் அல்லாதவர்களால் எந்தளவுக்கு இவை தவறான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன? சமூக ஊடகங்கள் ஹாஸ்யம் நிறைந்தவை, சிலவேளைகளில் புத்திசாலித்தனமானவை மற்றும் தீங்கற்றவை, ஆனால், சிலவேளைகளில் அவை புண்படுத்துபவையாகவும் அவமதிப்பவையாகவும் இருக்கின்றன. சமூக ஊடகங்களிலிருந்து பணம் பெறப்படும் விதமும், விளம்பர வருவாயில் அது தங்கியிருக்கும் விதமும், அது பாதுகாப்பற்றதொரு சூழலென எங்களை உணரவைக்கின்றது.

உதாரணத்துக்கு, Pakalu Papitoஇன் Twitter account (@pakalupapitio) தன்னைத் தானே ஹாஸ்யமாக விமர்சிக்கும், மற்றும் வினோதமான நகைச்சுவைகளைக் கொண்டிருக்கிறது. இந்தப் பதிவுகள் வேடிக்கை யானவையாகவும் எமது வாழ்வுடன் தொடர்புபடுத்தக் கூடியவை யாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால், Pakalu Papito என்ற கதாபாத்திரம் தெற்காசிய ஆண்களின் வகைமாதிரியாக இருக்கிறது. இந்தியாவில் வாழ்வதாகவும், எரிவாயு நிலையமொன்றில் வேலை செய்வதாகவும் அத்துடன் தனித்திருப்பதாகவும் சொல்லும் வேண்டுமென்றே தவறாக உச்சரிக்கப்பட்ட பயன்படுத்துனர் பெயரையும், கருமையான நிறமும் மீசையும் உள்ள ஒரு மாதிரித் தமிழ் மாமாவின் புகைப்படத்தைச் சுயவிபரப் படமாகவும் பயன்படுத்தும் அந்த blogஐ வைத்திருக்கும் நபர், உண்மையில், clicks க்காக தெற்காசியரைப் தவறாகப் பயன்படுத்தும் ஓர் இளம் வெள்ளை நிற ஆண் (@lee.gabriel.146 on Facebook) ஆவார். இப்படிப் பார்க்கும்போது, எதிர்மறை மதிப்பீடுகள் அல்லது ஏளனம் இல்லாமல் எமக்குரிய வெளியை தென்காசியர்கள் ஆகிய நாங்கள் எப்படிக் கட்டியெழுப்ப முடியும்?

ஒன்று மட்டும் நிச்சயம்: சமூக ஊடகங்கள் யாவும் ஒரே பண்புடையவை அல்ல. "சமூக ஊடகங்கள்" என அழைக்கப்படும், பல்வேறு தளங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான இணையச் சமூகங்களுடனான இவற்றில், ஒருவருக்குக் கிடைக்கும் அனுபவம் இன்னொருவருக்கு கிடைக்காது. கண்டத்துக்குக் கண்டம் வாழும், வெவ்வேறு வகையான வாழ்க்கை முறையுள்ள அனைவருடனும் எங்களின் பகிரப்பட்ட கலாசாரத்தை நாங்கள் முடிந்தளவுக்குக் கொண்டாடுவதற்கு, இணையத்திலுள்ள இனவாதம், அந்நியர் மீதான வெறுப்பு ஆகியவற்றை தமிழர்களாகிய நாங்கள் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. சமூக ஊடகங்கள் என்பவை, முக்கியமாக எங்களைப் பற்றி எங்களிடம் ஏற்கனவே இருக்கும் கருத்துக்களை வலுப்படுத்துவதற்கும், நண்பர்களுக்கும் அந்நியர்களுக்கும் எங்களைக் காண்பிப்பதற்குமாகச் சேவையாற்றும் தனிப்பட்டதொரு நடைமுறையாகவும் நெருக்கமானதொரு தனிப்பட்ட விவகாரமாகவும் உள்ளன.

நான் இங்கு பல கேள்விகளை எழுப்பியுள்ளேன், இவை எதற்குமே நேரடியான பதில்கள் இல்லை. உண்மையாக இருக்க வேண்டுமென நாங்கள் விரும்பும் பதில்கள் உள்ளன, உண்மையாக இருக்குமென நாங்கள் நினைக்கும் பதில்கள் உள்ளன, மற்றவர்களுக்கு உண்மையென நாங்கள் கருதும் பதில்கள் உள்ளன, அத்துடன் ஒப்புக்கொள்வதற்கு எங்களுக்குச் சங்கடமான பதில்கள் உள்ளன. ஒவ்வொருக்கும் வேறுபடுகின்ற உண்மை, அங்கு எங்கோ ஓரிடத்தில் இருக்கிறது. என்னுடைய பதில்கள் என்னவாக இருக்குமென்பதை நானே கண்டறிவதற்கு இன்னும் நான் முயற்சிக்கிறேன்.

இந்தக் கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிக்கும் விதம், சமூக ஊடகங்களை நாங்கள் பயன்படுத்தும் வழிகளைப் பிரதிபலிக்கின்றது. எங்களுடைய சொந்த அனுபவங்களை இணையத்தில் நாங்கள் உருவாக்குகிறோம். இணை யத்திலும் இணையமற்ற சூழல்களிலும் எங்களுடைய எதிர்வினைகளால் எங்களுடைய சமூகங்களை உருவாக்குகிறோம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களுடைய தலைமுறைகளின் வரலாறுகள், எங்களுடைய கலாசாரம், எங்களுடைய மொழி மற்றும் எங்களுடைய அனுபவங்களே எங்கள் அனைவரையும் தமிழர்களாக ஒன்றிணைப்பதாக அமைகின்றன.

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் கட்டுரைப் போட்டியில் (2018) பரிசு பெற்ற கட்டுரையின் தமிழ் வடிவம் .நன்றி : காலம் சஞ்சிகை நவம்பர் 2018






இப்போது சங்கரி விஜேந்திரா McMaster பல்கலைக்கழகத்தில் bachelor of Health Science 1ம் ஆண்டு மாணவியாக உள்ளார் இவரது தாயார் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழையமாணவியும் சிறந்த எழுத்தாளருமான ஸ்ரீரஞ்ஜினி ஆவார்.




அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்

# 100 ஆண்டுகள் கடந்த அனைத்துலக பெண்கள் தினம்

வ.சிவராஜா





யேர்மனிய இன்றைய அரசியலில் பெண்களின் பங்களிப்பு

உலகெங்கும் வாழும் பெண்களுக்கான உரிமை தினமாக பங்குனி 8ம் திகதி எனப் பிரகடனப்படுத்தி 100 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. ஆண்டுகள் பல கடந்தாலும் பல நாடுகளில் வருடக்கணக்காகப் பெண்களுக்கான வாழ்வுரிமை இன்றும் மறுக்கப்பட்டிருப்பது கசப்பான உண்மையாகும்.

சர்வதேச அளவில் பெண்கள் தினம் எப்படி உருவானது என்பதை இத் தினத்தில் தெரிந்து கொள்வது முக்கியம். இது தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் இங்கு தரப்படுகின்றன. 1908-இல் நியூயோர்க்கில் பணிச் சூழலுக்கு எதிராக பெண் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்திய நாளை முன்னிறுத்தி அமெரிக்க சோஷியலிசக் கட்சி, முதன் முதலில் பெண்கள் தினத்தைக் கொண்டாடியது. ஆனால் முதல் தேசிய பெண்கள் தினம் அமெரிக்காவில் பெப்ரவரி 28, 1909-இல் கொண்டாடப்பட்டது.

1910இ-ல் பெண்கள் உரிமைக்காகவும், பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று வலியுறுத்தியும் டென்மார்க்கின் கோபன்ஹேகனில் சர்வதேச சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இதில் 17 நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பெண்கள் கலந்து கொண்டனர். பின்லாந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த முதல் 3 பெண்களும் இதில் அடக்கம். இதில் சர்வதேச அளவில் பெண்கள் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. எனினும், திகதி எதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.இதன் விளைவாக உலக மகளிர் தினம் ஐரோப்பாவில் 1911, மார்ச் 19 அன்று முதன்முதலாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்டது.
பல நாடுகளில் பெண்களை அடக்கி ஒடுக்கி உரிமைகளைப் பறித்து வேறு உயிரினங்களைப் போல பெண்களை அடிமைகளாக வைத்திருக்கவே இன்றும் பல நாடுகள் விரும்பிச் செயற்படுகின்றன. அரபு நாடுகள் சிலவற்றில் இன்றும் பெண்கள் கார் போன்ற வாகனங்கள் ஓட்டக்கூடாது, விரும்பிய தொழில் செய்யக்கூடாது, விரும்பியவரைத் திருமணம் செய்யக்கூடாது ஏன் கல்வியே கற்கக்கூடாது என்றும் வாக்குரிமை மறுக்கப்பட்டும் பல கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி பெண்களை இரண்டாம் தரப் பிரசைகள்போல நடாத்தப்படுவதும் வழிவந்த செயலாககவே இன்றும் இருந்து வருகின்றது.

பெண்களுக்கெதிரான உரிமை மறுப்பில் நாட்டுக்குநாடு வெவ்வேறு வடிவங்களில் சம உரிமை மறுக்கப்படும் நிலை இருந்து வருகின்றது. எத்தனையோ ஆர்பாட்டங்கள், போராட்டங்கள் நீண்டகாலமாக நடாத்தியும் இன்றும் உலகில் பல நாடுகளில் ஆண்-பெண் சமத்துவம், சம உரிமை நிலவவில்லை என்பது முக்கிய விடையமாகும். இப்படியாகப் பெண்களின் உரிமை மறுப்பில் அதை எதிர்த்துப் போராடிப் பல நாடுகளில் பெண்கள் வெற்றியும் எழுச்சியும் பெற்றிருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

பல நாடுகளில் இப்பிரச்சனை இருந்துவந்தாலும் யேர்மனி பற்றிய சிறு பார்வையைச் செலுத்துவோம்…
-1918ம் ஆண்டு 1வது உலகப்போர் முடிவடைய 1919ம் ஆண்டில் சுமார் 17 மில்லியன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
-1919-2-19ம் தேதிதான் முதன் முதலாகப் பெண்மணி SPD கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகத் தெரிவானார். அவரின் பெயர் (Marie Juchacz) -1931ம் ஆண்டுதான் பெண்களுக்கான தேர்தல் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.
-1933 1945ம் ஆண்டுவரை பெண்கள் தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் அரச திணைக்களங்களில் வேலை செய்யக்கூடாது என்ற சட்டம் அமுலில் இருந்தது -1957 ஆண்டளவில் 3.3 வீதமான பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள்.
-1972 ஆண்டளவில் பெண்களின் வளர்ச்சியும் அரசியல் ஈடுபாடுகளும் அதிகளவு காணப்பட்டது. -1972 ஆண்டிற்குப்பின்பு ஆண் - பெண் வேறுபாடுகள் வெகுவாகக் குறைந்து காணப்பட்டன.
-1980 ஆண்டளவில் புதிதாகத் தோற்றம் பெற்ற Grünen) பசுமைக்கட்சியில் பெருந்தொகையான பெண்கள் அங்கம் வகித்தனர். -1990 ஆண்டில் பெண்களின் முன்னேற்றம் பெரிதாகக் காணப்பட்டது. அரசியல் மற்றும் அரச துறைகளில் ஆண்களுக்குச் சரிசமமான தொகையினர் காணப்பட்டனர்.

-2005 பெண்களின் அரசியல் வளர்ச்சியால் முதன் முதல் பெண் ஒருவர் Angela Merkel நாட்டின் அதி உயர் பதவியான கான்சிலராகத் தெரிவு செய்யப்பட்டார். -2013 மறுமலர்ச்சியால் பல பெண்கள் அரசியலிலும் உயர் பதவிகளிலும் ஆண்களுக்குச் சரிநிகராகப் பதவிகளில் அமர்ந்தனர்.

-2016 ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் 18 பெரு நகரங்கள் மற்றும் 56 சிறு நகரங்களில் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு விகிதாசாரம் வளர்ச்சி கண்டது.
-2017 நடைபெற்ற தேர்தல்களில் 60 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் வெற்றிபெற்றுப் பல பதவிகளில் அமர்ந்தனர்.
-36.7%- 2009ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரதான ஆளும் கட்சியான CDU கட்சிக்கு 7.1 வீதம்போர்தான் வாக்களித்தனர். ஆனால் 2013ம் ஆண்டுத் தேர்தலில் 36.7 வீதமான பெண்கள் இக்கட்சிக்கு வாக்களித்து விகிதாசாரத்தைக் கூட்டக்கொண்டனர். -Angela Merkel யேர்மனிய வரலாற்றின் முதல் பெண் கான்சிலர் 4 தடவைகள் இவர்தான் கான்சிலர். யேர்மனி மட்டுமல்ல உலகிலேயே அதகாரம் மிக்க பெண்மணிகளில் முதல்வராகத் திகழ்பவரும் இவர்தான்.
-3 பெண்கள்….இன்று யேர்மனியின் அரசியல் வரலாற்றில் ஆட்சிசெய்பவர் பெண் (Angela Merkel) பிரதான பெரிய கட்சியான CDU கட்சியின் தலைவர் பெண் (Kramp-Karrenbauer) பிரதான ஆளும் கட்சியும் பழமையான கட்சியான SPD கட்சியின் தலைவரும் ஒரு பெண்தான்.(Andrea Nahles) இப்படியே நாட்டை வழி நடத்துபவர்கள் பெண்களாகவே இருப்பது சிறப்பான அம்சமாகும். -யேர்மனிய இன்றைய அரசியலில் பெண்களின் பங்களிப்பு..

| | ஆண்கள் - | பெண்கள் |
|---|---|---|
| -கிராமிய பிரதேச சபைகளில் | 75வீதம் | 25வீதம் |
| -மாகாண பாராளுமன்றங்களில் | 70 “ | 30 “ |
| -மத்திய பாராளுமன்றத்தில் | 69 “ | 31 “ |

-பிரதான அரசியல் கட்சிகளில் அங்கங்வகிக்கும் பெண்களின் வீதத்தைப் பார்ப்போம்..
Grüne -40% Linke -36% SPD -33% CDU -26% FDP -22% CSU -21% A&D -17% பெண்கள் தினம் உலகம் முழுவதும் வருடாவருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும் இலங்கை போன்ற பல நாடுகளில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருவது இயல்பாகவே நடந்து வருகின்றது. நோய் நொடிகள் ஒருபுறம் வாட்டி உயிர் எடுக்க பெண்கள் மீதான சீதனம், சாதியம், சமயம், பாலியல் கொடுமைகள், கொலைகள், வன்முறைகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஏன் சின்னஞ்சிறு பாலகர்கள்கூட இன்று வன் கொடுமைகளுக்கு உட்படுத்திக் கொலை செய்தலும் காணாமல் ஆக்கப்படுதலும் சர்வசாதாரணமாக நிகழ்ந்து வருகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் தண்டனைகளையும் உறுதிப்படுத்த வேண்டிய அரசுகளும் பாதுகாப்புத் துறையினரும் சில நாடுகளில் குற்றவாளிகளுக்குத் துணை போவதை நாம் கவலையுடன் நோக்க வேண்டும்.
இன்று பெருவாரியான பெண்களுக்கான வன்முறைகள் குடும்ப உறவுகளாலும் ஏன் பெண்களாலுமே நடந்தேறுகின்றன என்று ஐக்கியநாடுகள் சபையின் பெண்களுக்கான அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.
ஆகவே பெண்களை இந்நாளில் போற்றுவோம். அவர்களின் திறமைகளுக்கு மதிப்பளிப்போம். எங்கள் சகோதரி, அம்மா, ஏன் மனைவியாய் மகளாய் எண்ணி, இந்த நாள் சிறக்க வாழ்துவோம் போற்றுவோம்!






அனைவருக்கும் எங்கள் மகளிர்தின வாழ்த்துக்கள்

# பெண்ணின் பெருமை



**சிபோ சிவா**

பெண் இன்றி பெருமையும் இல்லை கண் இன்றி காட்சியும் இல்லை.என்பது எம் முதியோர்களின் முதுமொழிகளில்ஒன்றாகும். ஒரு தாயாய், மகளாய், மனைவியாய், இல்லத்தரசியாய் ,சகோ தரியாய், நட்பாய் இந்த சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் பெண்கள் தான் எத்தனை எத்தனை.

ஆனால் இதையும் தாண்டி இந்தப் புலம்பெயர்ந்த மண்ணில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தங்களை சுய அடையாளப் படுத்திக் கொள்ளும் பெண்களை அறிமுகப் படுத்துவதற்கே பெண்ணின் பெருமை எனும் இத்தொடர்.

## ஈழத்து முதல் தமிழ் பெண்இசை அமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன்.




இந்தியாவில் Edison விருது பெற்ற முதல் ஈழத்துப் பெண்

இவர் ஈழத்து முதல் தமிழ் பெண் இசை அமைப்பாளர். இலங்கையில் முதல் தமிழ் இசைத்தட்டை வெளியிட்ட ஈழத்து மெல்லிசை மன்னர் திரு M.P பரமேஸ் அவர்களின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.ஈழத்து மெல்லிசைக்குயில் என்பது பிரபாலினியின் பட்டங்களில் ஒன்று. 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் Edison விருது பெற்ற முதல் ஈழத்துப் பெண் என்ற பெருமையும் இவருக்கே. பல மொழிகளில் வெளியிடப்பட்ட Queen Cobra என்ற இசைத்தட்டை இசை அமைத்து ,பாடி,எழுதி,தயாரித்து வெளியிட்ட இவரை சந்தித்து பல கேள்விகளுக்கு பதில் தேடிக் கொண்டோம்.

**இசைத்துறைக்குல் நீங்கள் எப்படி வந்தீர்கள்?**

ஒரு சங்கீதபரம்பரையில் பிறந்த நான் எனது சின்ன வயதிலிருந்தே என்னை இசையில் ஈடுபடுத்திக்கொண்டேன் இசை தான் எங்கள் குடும்பத்தின் மூச்சு.யோ்மனிக்கு

**நீங்கள் எப்படி வந்தீர்கள்?**

இலங்கையில் பிறந்து 10வயதில் எனது பெற்றோருடன் ஜெர்மனிக்கு புலம்பெயர்ந்து வந்தேன்.பின்பு எனது கணவரையும் இங்கே ஒரு இசை ஒரு நிலைக்குழுவில் தான் சந்தித்து, காதலித்து பின்பு திருமணமும் செய்து கொண்டேன். இப்போது அவருடனும் எங்கள் இரு குழந்தைகளுடனும் California வில் வாழ்ந்து வருகிறேன்.

**நீங்கள் முதல் முதல் இசை அமைத்த பாடல் எது என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?**

நான் முதல் முதல் எழுதி இசை அமைத்த பாடல் - கண்ணிலே தெரிந்த மின்னல் - நான் உந்தன் கண்மணி.

அப்பொழுது எனது வயது 13, பல வருடங்களுக்கு பிறகு தான் அதை ஒரு இசைத்தட்டாக வெளியிட முடிந்தது


**அதை வெளியிட பல வருடங்கள் ஆனாதற்க்கு காரணம் என்ன?**

காரணம் வணிகரீதியாக நாங்கள் இன்னும் வெற்றி பெறாதது தான். வேகமாக நாங்களும் எங்கள் கலையும் முன்னுக்கு வர வேண்டும் என்றால் Financial Support எங்களுக்கு வேண்டும்.

அப்பொழுது கலைக்காவலர் திரு சிறீபதி சிவனடியான் கேட்காமலையே 1995 ஆம் ஆண்டு சங்கீத சாம்ராஜ்சியம் என்ற இசைத்தட்டை வெளியிட பணம் கொடுத்து உதவினார். அவருக்கு இந்த இடத்தில் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அடுத்த சந்ததியில் உருவாக்கிக் கொண்டிருக்கும் உங்களைப் போன்ற இசைக்கலைஞர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**



இசைஞானி இளையராஜா அவர்களுடன் ஈழத்து மெல்லிசை மன்னர் திரு M.P பரமேஸ் அவர்களின் மகள் பிரபாலினி பிரபாகரன்

எங்கள் கதையை எங்கள் வேரை நாங்கள் அடியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும், மூத்த கலைஞர்களுக்கு நீங்கள் மரியாதை கொடுத்தால் தான் இன்னும் ஒரு 20,30 வருடங்களுக்கு பின்பு உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். தென் இந்திய மேடைகளில் பார்த்திர்கள் என்றால் மூத்த கலைஞர்களுக்கு என்ற ஒரு மகத்தான மதிப்பு இருக்கும். அவர்கள் பழைய பாடல்களை, இசையை பார்த்து பார்த்து தான் புதுசு புதுசாக அமைக் கிறார்கள். அவர்களின் கலை வளர்ந்து கொண்டு போகின்றது. நாங்கள் பழையதை மறந்து விட்டு, புதுசு புதுசாக அமைப்பதால் எங்கள் கலை இன்னும் போதிய அளவு அங்கீகாரம் பெறாமல் இருக்கின்றது.

**பெரும்பாலும் ஆண்கலைஞர்களைப் போல் பெண்கலைஞர்களால் நிலைத்து நிற்க முடியவில்லை, ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

குடும்பம் என்று சொன்னால் யாருக்கும் பிடிக்காது, ஆனால் அது தான் உண்மை. எனது பிள்ளைகள் சொந்தமாக இயங்குவார்கள் என்று எனக்கு தோன்றும் வரைக்கும் நான் எங்கும் செல்ல மாட்டேன். கடமைகள் தான் முக்கியம். அத்தோடு வேற தொழிகளில் கிடைப்பது போல ஒரு கலைஞனுக்கு வருமானம் இல்லை. வருமானம் வரும் அந்த அளவுக்குக்கு நாங்கள் இன்னும் வரவில்லை அப்படி இருக்கும் போது சுத்தி இருக்கும் நண்பர்கள், சொந்தக்காரர்கள் கேட்பார்கள் ஏன் நேரத்தை வீண் ஆக்குகின்றாய் என்று.

**உங்களை அப்படி கேட்கிறார்களா?**



நிச்சயமாக ஒவ்வொரு நாளும் கேட்கிறார்கள். அப்படி கேட்டாலும் அதை நீங்கள் எவ்வளவு தூரம் மனசில் எடுக்கிறீங்கள் என்பது தான் முக்கியம், உங்கள் பாதையில் இருந்து நீங்கள் மாறாமல் இருக்க வேண்டும். மற்றவர்களின் கதையை காதில் போட்டுக் கொண்டால், நீங்கள் நினைத்ததை சாதிக்க முடியாமல் போய் விடும்.

பிரபாலினியிடம் நன்றிகளை கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

சிபோ சிவா

Milin Impex GmbH
மலிவான தரமான மளிகைப்பொருட்களின் மொத்த சில்லறை விற்பனையாளர்
தாயக மரக்கறிகள் பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்


Tel: 0231 45 96 17
விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288





கீர்த்தி சுரேஷ்.

# என் வெற்றிக்கு காரணம் நடிப்பில் இருந்த பயம்

திரையில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்த எது உதவுகிறது என்று தெரிவித்துள்ளார் கீர்த்தி சுரேஷ். தமிழ் மற்றும் தெலுங்கு திரையுலகில் முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து நடிக்கிறார் கீர்த்தி சுரேஷ். தனது கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் உள்ள படங்களை தேர்வு செய்ய விரும்புகிறார். இந்நிலையில் அவர் சினிமா, நடிப்பு பற்றி கூறியதாவது, ஒவ்வொரு கதாபாத்திரத்தை ஏற்றுக் கொள்ளும்போதும் இதை நம்மால் சிறப்பாக செய்ய முடியுமா என்று கேள்வி அனைத்து நடிகர், நடிகைகளுக்கும் வரும்.

இந்த கதாபாத்திரத்தில் நடித்தால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியும் கூடவே எழும். ஒரு கதாபாத்திரத்தை ஏற்கும் முன்பு பல கேள்விகள் எழும். பிறரை விட எனக்கு அதிக கேள்விகள் எழும். அப்படி அதிகமாக கேள்விகள் எழுவதால் எனக்கு நல்லது மட்டுமே நடக்கிறது.

ஒவ்வொரு படத்தில் நடிக்கும்போதும் பயம் ஏற்படும். அந்த பயமும் நல்லது தான். பயத்தால் தான் நடிப்பில் கூடுதல் கவனம் செலுத்த முடிகிறது. மகாநதி படத்தில் நடித்தபோது ரொம்பவே பயந்தேன். ஆனால் அந்த படம் வெற்றி பெற்ற பிறகு நான் அடைந்த சந்தோஷத்தை சொல்லி விவரிக்க முடியாது என்கிறார் கீர்த்தி சுரேஷ். மகாநதி படத்தில் கீர்த்தி சுரேஷ் நடிகையர் திலகம் சாவித்ரி கணேசனாக நடித்தபோது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. ஆனால் படம் வெளியான பிறகு அவரை விமர்சித்தவர்கள் அமைதியாகிவிட்டனர்.



Dr.சாய் பல்லவி

## “உங்களில் யார் அடுத்த பிரபுதேவா”
## போட்டியில்தான் பங்குபற்றினேன் இப்போ ...

சாய் பல்லவி

தனுஷ், சாய் பல்லவி நடிப்பில் வெளியான மாரி 2 படத்தின் “ரவுடி பேபி“ பாடல் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவரவேற்பை பெற்றது.

இதையடுத்து இதன் வீடியோ பாடலும் யூடியூப்பில் வெளியாகி மாபெரும் ஹிட்டடித்தது. இந்நிலையில் “ரவுடி பேபி“ பாடலை இதுவரை 20 கோடி (200 மில்லியன்) பார்வையாளர்களுக்கு மேல் கண்டு ரசித்து வருகின்றனர். இதன்மூலம் தென்னிந்திய திரையுலகில் அதிகப் பார்வையாளர்களைக் கொண்ட யூடியூப் வீடியோ பட்டியலில் 'ரவுடி பேபி' பாடல் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தது.

யுவன்சங்கர் ராஜா இசையில் உருவாகியிருக்கும் படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் இந்தப் படத்தின் ஒரு பாடலை இசையமைப்பாளர் இளையராஜா பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய நடிகை சாய் பல்லவி, ”தனுஷ் எப்பொழுதும் தனிக்காட்டு ராஜா அவருக்கு யாரும் போட்டி இல்லை. விஜய் டிவியில் உங்களில் யார் அடுத்த பிரபுதேவா போட்டியில்தான் பங்கு பெற்றேன். ஆனால் மாரி படத்தில் பிரபு தேவா தான் ரவுடி பேபி பாடலுக்கு டான்ஸ் மாஸ்டர்” என்று கூறியுள்ளார்.




“ரவுடி பேபி“







உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!

Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen




ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282




Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976




BOOK A SESSION NOW AT
Photography
Video Filming
Album Making
Graphic Desiging
AKR Visualizers
PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
0049 231 5337 5366
0049 162 803 1647
Rheinische Str. 72 44137
Dortmund.
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com




HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.




Dortmund மாநகரில்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de